பக்கங்கள்: பதனாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 05 செவ்வாய்க்கிழமை (17.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:083

## இலங்கை அரசாங்கம்
# போர் நிறுத்தத்துக்கு இணங்காவிடில்
# பொருளாதாரத் தடை கொண்டு வருக!
## அமெரிக்க மதத் தலைவர்கள் ஹிலாரியிடம் கோரிக்கை

நியூயோர்க், பெப்ரவரி 17

இலங்கை அரசாங்கம் உடனடியாகப் போர் நிறுத்தத்தைக் கொண்டுவராவிடில் அதன்மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதோடு -

இலங்கை விவகாரம் குறித்துப் பாதுகாப்புச் சபையில் பிரேரணையும் கொண்டு வரவேண்டும் - என்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனிடம் அந்நாட்டு மத நிறுவனங்கள் வலியுறுத்தி உள்ளன.

போர் நிறுத்தத்தை கொண்டு வந்து, இலங்கையின் வடக்கே சிக்குண்டுள்ள லட்சக்கணக்கான மக்களை ஐ.நாவும் சர்வதேச செஞ்சிலுவைக்குழுவும் சேர்ந்து வெளியேற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்றும் வெளியுறவுச் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை இந்திய ஜனாதிபதியுடன் இன்று சந்திப்பு

சென்னை, பெப்.17

இலங்கைத் தமிழர் நல உரிமை பேரவையினர் இந்திய ஜனாதிபதி பிரதீபா பட்டீலை இன்று செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து இலங்கையில் போரை உடனடியாக தடுத்து நிறுத்த வலியுறுத்தும் மனுவை கொடுக்கின்றனர்.

மேலும் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, மத்திய அமைச்சர் பிரணாப் முகர்ஜி ஆகியோரை 18ஆம் திகதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு மக்களில் பெரும்பாலானோர் வாழ்வா, சாவா என்ற இறுதிக்கட்ட விரக்தியில்

கொழும்பு, பெப்.17

முல்லைத்தீவில் நடைபெறும் போரினால் பாதிக்கப்படும் மக்களுக்கு எம்மால் இயன்றவரை அவர்களின் உயிர்களைப் காப்பாற்ற உதவி செய்து வருகிறோம். அவர்களை அங்கிருந்து கூட்டிச்சென்று மருத்துவ சேவை கிடைக்க ஏற்பாடு செய்கிறோம். ஆனாலும் அங்கிருந்து வெளியேறத் துடிக்கும் (16 ஆம் பக்கம் பார்க்க)

க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கென உதயன் தனியாக வழங்கும் 6 பக்கங்கள் கொண்ட இலவச கல்விச் சுடர் இணைப்பிதழ் உள்ளே ▶

## வன்னியில் நேற்றும் தொடர்ந்தது தாக்குதல் 53 பொதுமக்கள் பலி; 158 பேர் காயம்!

கொழும்பு, பெப்.17

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்பு, புதுமாத்தளன் மற்றும் தேவிபுரம் ஆகிய பகுதிகளில் நேற்றுமுன்தினமும் நேற்றும் நடத்தப்பட்ட கடும் ஷெல் தாக்குதல்களில் 53 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 158 பேர் காயமடைந்துள்ளனர் என இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து அவற்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

புதுக்குடியிருப்பு மற்றும் புதுமாத்தளன் பகுதிகள் மீது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை தொடக்கம் நேற்றுக் காலை வரை நடத்தப்பட்ட அகோர ஷெல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளம் நாயக்கர்சேனையில் 21ஆம் திகதி மீண்டும் தேர்தல்

கொழும்பு, பெப். 17

புத்தளம் தொகுதி நாயக்கர்சேனை தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வாக்குமோசடி காரணமாக அந்தச் சாவடியில் அளிக்கப்பட்ட வாக்குகள் ரத்துச்செய்யப்பட்டதைத் தொடர்ந்து அங்கு இம்மாதம் 21ஆம் திகதி மீண்டும் வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் செயலகம் நேற்று இதற்கான திகதியை அறிவித்தது. இதேவேளை ரத்துச் செய்யப்பட்ட வாக்குகள் அடங்கிய வாக்குப்பெட்டிகள் தேர்தல்கள் செயலகத்திற்கு நேற்றுக் கொண்டுவரப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி வாக்குச்சாவடியில் வாக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழரைக் காப்பாற்றக்கோரி தமிழகத்தில் இன்று மனிதச்சங்கிலி

சென்னை, பெப்.17

ஈழத் தமிழர்களைக் காப்பாற்றுமாறுகோரி தமிழகம் முழுவதிலும் இன்று பெரும் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெறவிருக்கின்றது. இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் அனைவரும் ஒன்று திரண்டு பங்கேற்கவேண்டும் என்று அந்த இயக்கம் அழைப்பு விடுத்திருக்கிறது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## நோயாளரும் காயமுற்றோருமாக 3 ஆவது தடவையாக 420 பேர் வன்னியிலிருந்து கப்பல் மூலம் திருமலைக்கு

திருகோணமலை, பெப். 17

வன்னியிலிருந்து காயமடைந்தவர்கள் மற்றும் நோயாளர்களென 420 பேர் மூன்றாவது கட்டமாக கப்பல் மூலம் திருகோணமலைக்கு நேற்றிரவு 8.15 மணியளவில் அழைத்து வரப்பட்டனர்.

கப்பலில் இருந்து இறக்கப்பட்டதும் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்கு உடன் சிகிச்சை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மஹிந்தவுடனும் பிரபாகரனுடனும் பேசத் தயார் என்கிறார் ரவிசங்கர்

கொல்கத்தா, பெப்.17

இலங்கையில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனையும் சந்தித்துப் பேச்சு நடத்தத் தாம் திட்டமிட்டுள்ளார் என்று வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் கொல்கத்தாவில் வைத்து செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு:-

இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு சமாதானம் மலரவேண்டும். அதற்காக இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் பேச்சில் ஈடுபட வேண்டும்.

இந்த விடயத்தில் சமாதானத் தூதுவராகச் செயற்பட்டு அவர்கள் இருவரையும் தனித்தனியே சந்தித்துப் பேச நான் தயாராகவுள்ளேன்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரப் பகிர்வை இந்தியா ஆதரிக்கும்
### தூதர் அலோக் பிரசாத் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.17

13ஆவது அரசியல் யாப்பு திருத்தத்திற்கு அமைய அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதற்கான இலங்கை அரசின் தீர்மானத்துக்கு இந்தியா தனது முழுமையான ஆதரவை வழங்கும் என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் அலோக் பிரசாத் தெரிவித்துள்ளார்.

நேற்று கிழக்கு மாகாணத்திற்கான விஜயமொன்றை மேற்கொண்ட அவர் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரச்சினைக்குத் தீர்வாக 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்திற்கு அமைவாக அதிகாரப் பகிர்வை அமுல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபெற்றது தேர்தலே அல்ல; யுத்த வெற்றிக் கருத்துக் கணிப்பே; மக்கள் ஆதரவு அரசுக்கு இருப்பதாக அரசு நினைக்கக்கூடாது

## ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ சொல்கிறார்



கொழும்பு,பெப்.17

நடந்து முடிந்தது ஒரு தேர்தலே அல்ல. யுத்த வெற்றி தொடர்பான மக்களின் கருத்தை அறியும் கருத்துக் கணிப்புதான் அது. இதை எம்மிடம் அரசு கூறியிருந்தால் தேர்தலே இல்லாமல் நாமே அரசுக்கு வாக்களித்திருப்போம்.

இவ்வாறு ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க நேற்று கொழும்பில் நடந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

நடந்து முடிந்த தேர்தலில் அரசுக்கு கிடைத்தது பெரிய வெற்றி அல்ல. மக்கள் அரசுக்குப் பாரிய ஆதரவைத் தெரிவித்துள்ளனர் என்று அரசு நினைக்கக்கூடாது.

உண்மையில் அது ஒரு தேர்தலே அல்ல. யுத்த வெற்றி தொடர்பாக மக்களின் கருத்தை அறியும் கருத்துக் கணிப்புதான் அத்தேர்தல். இதைச் செய்வதற்கு அரச சொத்துக்களையும் ஊடகங்களையும் வீண் விரயம் செய்திருக்கத் தேவையில்லை.

மக்களிடம் வாக்குக் கேட்பதற்கு அரசிடம் நல்ல திட்டங்கள் எவையும் இருக்கவில்லை. யுத்தத்தை முற்று முழுதாக விற்றுத்தான் அரசு இத் தேர்தலில் வெற்றி பெற்றது.

17ஆவது திருத்தச் சட்டம் நடைமுறையில் இல்லாத நிலையில்தான் இத்தேர்தல் இடம்பெற்றது. தேர்தல் ஆணையாளரின் செயற்பாடுகள் கூட திருப்தியானதாக அமையவில்லை.

அரச சொத்துக்களும் அரச ஊடகங்களும் முற்று முழுதாகப் பயன்படுத்தப்பட்டன. எதிர்க்கட்சிகளுக்கு அரச ஊடகங்களில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

புலிகளின் பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்கான யுத்தம் ஒன்று இடம்பெற்றுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தேர்தல் நடத்துவது மக்களை ஏமாற்றும் செயலாகும்.

இந்தத் தேர்தலில் அரசு அரங்கேற்றிய நாடகமெல்லாம் மேல்மாகாணசபைத் தேர்தலில் அரங்கேறாது. மேல்மாகாண சபைத் தேர்தலில் அரசு நல்லதொரு பாடத்தைக் கற்றுக்கொள்ளும் - என்றார். (சி)

## சமாதானக் கல்விக்கான விழிப்புணர்வு நிகழ்வு

யாழ்- சமாதானத்துக்கும், நல்லிணக்கத்திற்கான பணியகத்தால் குடாநாட்டுப் பாடசாலை ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கு நடத்தப்படும் சமாதானக்கல்வி விழிப்புணர்வுக்கருத்தரங்குஇன்று ஆனைக்கோட்டைறோ.க.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

நாளை மறுதினம் வியாழக்கிழமை நவாலி, மகாவித்தியாலயத்திலும் நடைபெற இருப்பதாகப் பொறுப்பாசிரியை சோபனா தெரிவித்துள்ளார். (1-160)

# பேச்சுக்கான சந்தர்ப்பங்கள் உள்ளபோதும் பேரழிவு யுத்தத்தை தொடருவதேன்?

## கேட்கிறார் கலாநிதி விக்கிரமபாகு

கொழும்பு, பெப். 17

''தொடரும் யுத்தத்தினால் இந்த நாட்டில் வாழும் எவருக்கும் எந்த நன்மையும் இல்லை. நாடு பேரழிவுக்குள் சென்று கொண்டு இருக்கின்றது.

இன்றும் கூட சந்தர்ப்பங்கள் உள்ளன. பேச்சுகளில் ஈடுபட்டு, அநியாயமாகப் பறிக்கப்படும் உயிர் அழிவை தடுக்க முடியும்.''

- இவ்வாறு கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

நேற்று இடதுசாரி முன்னணியினர் புறக்கோட்டை பழைய நகர மண்டபத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

பயங்கரவாதத்திற்கு எதிரான யுத்தம் என்பது ஜோர்ஜ் டபிள்யு புஸ்ஸின் பல்லவியாகும். அது இன்று வழக்கொழிந்து வருகிறது. இன்று சர்வதேச ரீதியாக தமிழ் மக்கள் குரலுக்கு அனுதாப அலை வீசத் தொடங்கியுள்ளது. இதில் சோசலிச சக்திகளை இணைப்பதில் எமது முயற்சியும் வெற்றி பெற்று இருக்கிறது. மேலும் இதனைப்பலப்படுத்த முயன்று வருகின்றோம்.

தென் இலங்கை மக்களுக்கு போர் என்ற போதையை ஊட்டுவதன் மூலம் ஆட்சியில் நீடிக்கலாம் என்பதே மஹிந்த அணியின் மூலோபாயமாக உள்ளது. இதே நேரம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும், ஜே.வி.பி.யும் இப்போக்கை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆதரித்து வந்தன. அதன் பலனையே இவர்கள் பெற்ற தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன - என்றார். (சி)

# வன்னியில் கால், கைகளை இழந்த 150 பேர் திருமலை வைத்தியசாலையில் சேர்ப்பு

## மாகாணச் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

காரைதீவு, பெப். 17

''வன்னி யுத்தத்தில் சிக்கிய பல்லாயிரக் கணக்கான அப்பாவித்தமிழ் மக்கள் அடிப்படை வசதிகளின்றி பேராபத்துக்குள்ளாகி, காயப்பட்டு செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் உதவியுடன் திருமலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர். 800 பேருக்கு இரவு பகல் பாராமல் சுகாதார வசதிகளை வழங்கி வருகிறோம்.

அவர்களில் 400 பேருக்கு சத்திர சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. மேலும் 150 பேருக்கு கால், கைகள் இல்லாத நிலை. இந் நிலையில், மேலும் 1,000 பேரை இவ்வாறு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.''

- இவ்வாறு கிழக்கு மாகாண சுகாதார, போஷணை, போக்குவரத்து சமூக நலத் துறை அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

காரைதீவு வைத்தியசாலைத் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அமைச்சர் ஹிஸ்புல்லா மேலும் பேசுகையில் கூறியவை வருமாறு:-

தற்போது வன்னியில் மிக மோசமான யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவதை இரு தரப்பினரும் தவிர்த்துக்கொள்ளவேண்டும்.

யுத்தப் பிரதேசத்தினுள் அகப்பட்டுள்ள அப்பாவி தமிழ் மக்களை விடுதலைப் புலிகள் வெளியே வர அனுமதிக்கவேண்டும். அப்படி வருபவர்களுக்கு அரசு தேவையான வசதிகளை வழங்கத் தயாராகவுள்ளது.

வன்னியிலிருந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்டு காயத்துடன் வந்தவர்களுக்கு கடந்த 7 தினங்களாக இரவு, பகல் பாராமல் எமது மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் எம்.தேவராஜன் உள்ளிட்ட வைத்திய அதிகாரிகள் வைத்தியம் செய்து வருகின்றனர்.

400 பேருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகள், பெண்கள் எனப் பலரும் காயத்துள்ளாகியிருப்பது பெரும் பரிதாபமாகவுள்ளது.

இதேவேளை, திருகோணமலை பொது வைத்தியசாலையை நவீனமயப்படுத்தும் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த 10 - 20 வருட காலங்களாக சுகாதாரத் தொண்டர்களாக பணியாற்றிய 450 பேருக்கு இம்மாத இறுதிக்குள் நிரந்தர நியமனம் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம்.

டாக்டர்கள் பற்றாக்குறை, தாதிய உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை தீர்க்கப்படவுள்ளது. பரா மெடிக்கல் துணை மருத்துவ சேவையாளர்கள் பெறப்படவுள்ளனர். கிழக்கில் நோயற்ற சமுதாயத்தை உருவாக்க என்னாலான சகல செயற்பாடுகளையும் செய்யத் திட்டமிட்டுள்ளேன்.

# சண்டிலிப்பாய் வாசியை கொழும்பில் காணவில்லையாம்

யாழ்ப்பாணம், பெப்.17

வெளிநாட்டுக்கு செல்வதற்காக கொழும்பில் தங்கியிருந்த சண்டிலிப்பாய் வாசி ஒருவர் நுகேகொட பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாகியப்பிட்டி, சண்டிலிப்பாயைச் சேர்ந்த யோகநாதன் நிமலதாஸ் (வயது 24) என்பவர் வெளிநாட்டுக்கு செல்லும் நோக்குடன் தெகிவளையில் தங்கியிருந்தார் என்றும் -

கடந்த மாதம் 22 ஆம் திகதி அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு இதுவரை விடுவிக்கப்படவில்லை என்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபரை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அவரது தாயார் தனது முறைப்பாட்டில் கேட்டுள்ளார்.

(1-25)

# வலுவிழந்தோரை மாற்று வலுவுள்ளோராக மாற்ற வேண்டியது சமூகத்தின் பொறுப்பு

## சங்க ஆண்டு விழாவில் டாக்டர் நந்தகுமாரன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப். 17

ஆற்றலும் அசையும் தன்மையும் எந்த நேரமும் எம்மிடமிருந்து பறிக்கப்படக்கூடியவை. நவீன விஞ்ஞான வளர்ச்சியில் நோய், விபத்து, யுத்தம் என்பவற்றால் மக்கள் வலுவிழந்தோராகின்றனர். இவ்வாறு வலுவிழந்தோர் வலுவுள்ளோராக மாற்றப்பட வேண்டும் அதற்கு வசதிவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய முக்கிய பொறுப்பு எமக்குண்டு- சமூகத்துக்கு உண்டு.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் மருத்துவ அதிகாரி வைத்திய கலாநிதி கே.நந்தகுமாரன் மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு.

ஆர்க் பாடசாலை, சிவபூமி பாடசாலை, விழிப்புலனற்றோர் சங்கம், வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம், வாழ்வகம் ஆகிய நிறுவனங்களைச் சேர்ந்தோர் பல போட்டிகளில் பங்கு பற்றியுள்ளனர். இவர்களின் ஆற்றல்கள், திறமைகள் மதிப்பிட முடியாதவை உலகில் குறிப்பிட்ட வீதத்தினருக்கு இயலாத சக்தி உண்டு. இவர்களிற்கு உறவினரும் மற்றையோரும் ஊக்கத்தினையும் உந்து சக்தியினையும் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

சமுதாயம் தன் வசதிகள், தேவைகளிற்காக கட்டியெழுப்பப்பட்ட தபால், வங்கி, நூலகம், பாடசாலை என்பவை மாற்று வலுவுடையோர் பயன்படுத்த முடியாத தன்மை உள்ளனவாக உள்ளன. கட்டியெழுப்பப்பட்ட கட்டடங்கள் மாடிகளைக் கொண்டதாக உள்ளன. இதனால் மாற்று வலுவுடையோர்கள் மாடிப் படிகளில் ஏறி இறங்குவது முடியாத காரியமாகவுள்ளது. இவ்வாறான இடங்களில் மாற்று வலுவுள்ளோர் சேவையை பெறமுடியாதுள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு புதிதாகக் கட்டப்பட்டவை மாற்றி அமைக்கப்பட வேண்டும். வலுவிழந்தோர் என்பதனைப் பொருட்படுத்தாது அத்தகையோர் அக்கறையுடன் கல்வியைத் தொடரவேண்டும். அப்போது தான் நல்ல நிலையை அடைய முடியும். நான் கூட உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தும் பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பைத் தொடர்ந்து படிப்பதா, விடுவதா எனக் குழப்பம் அடைந்திருந்தேன். போலியோ நோயினால் பாதிக்கப்பட்டு படித்து உயர் நிலையை அடைந்த ஒருவரைப் பார்த்த பின்புதான் எனக்கும் படிக்கவேண்டும் என்ற நம்பிக்கை பிறந்தது. இதனால் தொடர்ந்து படித்து இன்று நல்ல நிலையை அடைந்துள்ளேன்.

எனவே இவ்வாறான மாற்று வலுவுள்ளோருக்கு அனைவரும் ஊக்கத்தையும் உந்துசக்தியையும் வழங்கவேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

நிகழ்வுக்குத் தலைமை வகித்த நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி என்.சிவராஜா உரையாற்றுகையில் கூறியதாவது:

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. இதன் நோக்கம் வலுவிழந்தோர்களை தம் சொந்தக் கால்களில் நின்று செயற்படுவதற்கு அவர்களை வலுப்படுத்துவதே. இந்த நிறுவனம் வலுவிழந்தவர்களுக்கு ஏதாவது உதவிகள் செய்ய வேண்டும் என்றே பலரும் கருதுகின்றனர் அந்த நிலைப்பாட்டை மாற்றி அவர்களை வலுப்படுத்துவதே பிரதான நோக்கமாக இருக்க வேண்டும்.

இங்கு ஒரு கூட்டுக் குடும்பமாகவே எல்லோரும் வாழ்கிறார்கள் தத்தம் வீடுகளைப் போன்று கருதியே செயற்படுகின்றனர் - என்றார்.

சிறப்பு விருந்தினராக யாழ்.மாநகர சபைப் பொறியியலாளர் ஐர் சுரேஸ்குமார் கலந்து கொண்டார்.

(அ-7)

# மரண அறிவித்தல்

## கந்தையா நடராசா



கற்குளம் கொட்டடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று முன்தினம் (15.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வனும் தவமணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - செல்லாச்சி தம்பதியினரின் நேசமிகு மருமகனும் யோகேந்திரநாதன் (யோகி) (ராகவி வயறிங் வேக்ஸ்), மகேந்திரநாதன், இந்திரநாதன் ஆகியோரின் அன்புமிகு தந்தையும் காலஞ்சென்ற இரத்தினம் (கிளி), காலஞ்சென்ற செல்லத்துரை (செல்வம்) மற்றும் பேரம்பலம் (உரிமையாளர், ராகவி வயறிங் வேக்ஸ், சிவன்பண்ணை வீதி), தவமணி, சரஸ்வதி ஆகியோரின் நேசம் மிகுந்த சகோதரனும் தவமணி, ரங்கநாயகி, சுகுமார், மெவிர்தலிங்கம், மல்லிகாதேவி, காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நர்மதாவின் பாசம் நிறைந்த மாமனாரும் நிந்திகா, கோபிராதன், கவிசாயினி ஆகியோரின் ஆசை மிகுந்த பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2009) செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளம், கொட்டடி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# தெற்காசிய வட்டகையில் அதிகாரமும் ஜனநாயகமும்

வடக்கு யுத்தத்தில் பல பிரதேசங்கள் மீதான தமது கட்டுப்பாட்டைப் புலிகள் இழந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு குறுகிய நிலப்பரப்புக்குள் அவர்களின் ஆதிக்கம் முடக்கப்பட்டிருக்கின்றது.

'புலிப் பயங்கரவாதிகளை' அடக்கி, ஒடுக்கி, ஜனநாயகத்தை மீட்டு வருவதாக இலங்கை அரசு புளகாங்கிதம் அடைகின்றது; தென்னிலங்கை துள்ளிக் குதித்து, வெடி கொளுத்தி, ஆரவாரித்து மகிழ்கின்றது.

இவற்றுக்கு மத்தியில் தென்னிலங்கையில் தேர்தல்களை நடத்தி, யுத்தம் மூலம் கிடைத்த பேரினவாத மேலாதிக்க வெற்றியுணர்வை வாக்களிப்பு வெற்றியாகவும் மாற்றி அரசியல் லாபமீட்டுகின்றது அரசுத் தலைமை.

'வெற்றிகரமாக' நடத்தி முடிக்கப்படும் இத்தகைய வாக்களிப்புகள், தேர்தல்கள் மூலம் இந்தத் தேசத்தில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு, ஜனநாயகம் நிலைநிறுத்தப்படுகின்றது என்று காட்டும் பிரசார முயற்சியும் - பரப்புரை எத்தனமும் - சர்வதேச மட்டத்தில் முழு அளவில் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், ஜனநாயக மீட்பு என்ற இந்தப் பிரசார மாயைக்குள் அகப்பட்டு மூழ்கிப்போக சர்வதேசம் தயாரில்லை என்பது வெளிப்படை; வெள்ளிடைமலை.

'சார்க்' நாடுகளைச் சேர்ந்த தெற்காசிய சுதந்திர ஊடகக் கட்டமைப்பின் வருடாந்தக் கருத்தரங்கு கடந்த வாரம் பங்களாதேஷின் கொக்ஸெஸ் பஸார் நகரில் நடைபெற்ற வேளை .இந்தக் கருத்து நிலைப்பாடு அங்கு நிலவியமையை உணர முடிந்தது.

ஆப்கான், பூட்டான், பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நாடுகளின் ஊடகவியலாளர்கள் அங்கு கூடி தத்தமது பிராந்தியத்தின் ஊடக நிலைமைகள் குறித்துக் கருத்துப் பரிமாறினார்கள்.

'தென்னாசியாவில் ஜனநாயகமும் அதிகாரத்துவமும்'(Democracy and Authoritarianism in South Asia) என்ற தலைப்பில் நடந்த இவ்வாண்டுக்கான இருநாள் கருத்தரங்கில் தென்னாசிய வட்டகையில் புதிய ஜனநாயக எழுச்சியுடன் கூடிய மக்கள் ஆட்சி அலை பரவி வருகின்றமையைத் திருப்தியுடன் சுட்டிக் காட்டிய பலரும் இது கருத்துச் சுதந்திரத்திற்கு - ஊடக உரிமையை மீள நிலைநிறுத்துவதற்கு - ஒரு வாய்ப்பை உருவாக்கும் புற அம்சம் எனக் குறிப்பிட்டு அதனை வரவேற்றனர்.

ஆனால், ஜனநாயக எழுச்சி அலை புதிதாகக் கிளர்ந்து பரவி வரும் தேசமாக இலங்கையை அங்கு யாரும் சுட்டிக் காட்டாதமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

தென்னாசியாவில் இராணுவ அல்லது முடியாட்சி முறை மூலம் அதிகாரம் வல்வந்தமாகத் திணிக்கப்பட்ட நிலைமை அங்குள்ள பல்வேறு நாடுகளில் இப்போது மாறி வருகின்றமை அந்த மாநாட்டில் ஈண்டு குறிப்பிடப்பட்டு, மெச்சிப் பாராட்டப்பட்டது.

அந்த வரிசையில் -

இராணுவ ஆட்சி முறைப் பிடியிலிருந்து பங்களாதேஷ் கடந்த டிசெம்பர் பொதுத் தேர்தல் மூலம் விடுவிக்கப்பட்டு அங்கு மக்களாட்சி மலர்ந்துள்ளமை சுட்டிக்காட்டப்பட்டது.

நேபாளத்தில் முடியாட்சியும், அதற்கு எதிரான வன்முறைக் கிளர்ச்சியும் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு ஜனநாயக ஆட்சி உதயம் கண்டுள்ளமை மெச்சப்பட்டது.

மாலைதீவில் மூன்று தசாப்தத்துக்கு மேலாக ஜனநாயகத்தின் பெயரால் தொடர்ந்த அதிகாரத்துவ மேலாண்மை, ஜனநாயகத் தேர்தல் மூலம் மாற்றியமைக்கப்பட்டு, அங்கு புதிய சகாப்தம் எழுந்துள்ளமை குறிப்பிட்டுப் பாராட்டப்பட்டது.

இராணுவப் புரட்சியின் தொடராக நீண்டு பல வருடங்கள் பாகிஸ்தானைக் கவ்வியிருந்த பலாத்கார ஆட்சி, ஜனநாயகத் தேர்தல்கள் மூலம் தூக்கியெறியப்பட்டு, மக்கள் ஆணை நிலைநிறுத்தப்பட்டமை பெரிதும் வரவேற்கப்பட்டது.

இதேசமயம், இந்தியாவில் நீடிக்கும் ஜனநாயக ஆட்சி முறையும் ஒரு முன்னுதாரணமாக சிலாகித்துப் பேசப்பட்டது.

பூட்டானில் மக்கள் செல்வாக்குடன் கூடிய ஆட்சிக் கட்டமைப்பு நிலைநிறுத்தப்பட்டமையும் பாராட்டப்பட்டது.

ஆனால் ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சி அதிகாரம் முழுவதும் ஓரிடத்தில் குவிந்து கிடக்கும் இலங்கையின் நிறைவேற்று அதிகார ஆட்சிக் கட்டமைப்பு முறைமை அங்கு வரவேற்கப்படவுமில்லை; மெச்சப்படவுமில்லை.

ஆப்கானிஸ்தானிலும், இலங்கையிலும் நீடிக்கும் 'அதிகாரத்தன ஆட்சி' முறைமைகள் குறித்து பெரிதும் குறை கூறப்படாவிட்டாலும் கூட, இத் தேசங்களில் ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேறக் கூடிய வெறும் கேலிக் கூத்துக் களை - பம்மாத்துக்களை - உலகம் கண்ணை மூடிக்கொண்டு வரவேற்கும் என்று கூறுவதற்கில்லை என்பதற்கு மேற்படி தெற்காசிய சுதந்திர ஊடக அமைப்பின் கருத்தரங்கு நல்ல உதாரணமாக அமைந்தது.

சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் அடக்கி ஆளும் பேரினவாத மேலாதிக்கக் கருத்தாதிக்கத்துக்குள் பெரும்பான்மையினரான சிங்களவர்கள் மூழ்கிக் கிடக்கின்றார்கள்.

அவர்களின் இந்தப் பேரினவாதச் சிந்தனைப் போக்கைத் தமக்கு வாசியாகப் பயன்படுத்தி, சிறுபான்மையினரை அடக்கி, நசுக்கி, ஒடுக்குவதன் மூலம், பெரும்பான்மையினரான சிங்களவர்களின் செல்வாக்கை மடக்கிப் போட்டு, ஜனநாயகத்தின் பெயரால் வெற்றிவாகை சூடும் தந்திரோபாயம் உள்நாட்டு அரசியலில் பேரினவாதச் சிந்தனைத் தலைமைகளுக்கு நல்ல வெற்றிகளைத் தேடித் தரலாம். ஆனால் அப்போக்கு சர்வதேச சமூகத்தை ஏமாற்ற - அதன் காதில் பூச்சுற்ற - உதவமாட்டாது.

ஆகவேதான் -

இங்கு, ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேற்றப்படும் கேலிக் கூத்துத் தேர்தல்களைப் பெரும் விடயமாகப் பாராட்டி சிலாகிக்காமல் சர்வதேசம் ஒதுங்கி நின்று பார்க்கின்றது.

# முல்லைத்தீவுத் தாக்குதல்கள் சில நாள்கள் நீடித்தால் அவலங்களைச் சொல்ல அங்கு எவரும் உயிருடன் இரார்!

## வன்னியிலிருந்து கனகரத்தினம் எம்.பி ஐ.நா.செயலருக்கு கடிதம்



முல்லைத்தீவு மீதான தாக்குதல் நடவடிக்கைகள் இன்னும் சில நாள்கள்நீடிக்குமாகஇருந்தால் இங்கு நடந்த அவலங் களை எடுத்துச் சொல்வதற்கு எவருமே இருக்க மாட்டார்கள். இந்த வேதனையான உண்மையை உங்களுக்கு நான் தெரியப்படுத்தியே ஆக வேண்டியுள்ளது.

இவ்வாறு ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கி மூனுக்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினம் வன்னியிலிருந்து அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

2004ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் முல்லைத்தீவு மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு எனது பணிகளை தொடர்ந்து கொண்டிருக்கும் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினரான சதாசிவம் கனகரத்தினம் ஆகிய நான் தங்களிடம் விடுக்கும் பணிவான வேண்டுகோள்.

வன்னியில் நடைபெற்று வரும் போர் காரணமாக மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 15 ஆயிரம் தமிழர்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து படையினரால் ஏவப்படும் எறிகணை, வான் தாக்குதலினால் விரட்டப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மூன்று சிறு கிராமங்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் சிறு கொட்டகைகள் அமைத்தும் மர நிழல்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த மக்கள் உயிர் வாழ்வதற்கான எந்த விதமான பாதுகாப்பும் இன்றி மரண பயத்தின் மத்தியில் மிகப்பெரும் ஆபத்தான நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மக்கள் வாழும் கிராமங்களை மையமாக வைத்து சிறிலங்காப் படையினரின் போர் வானூர்திகள் குண்டுகளை வீசியும் எறிகணைத் தாக்குதல்களை நடத்தியும் வருவதால் ஒவ்வொரு நாளும் நூறுக்கும் அதிகமான குழந்தைகள், முதியவர்கள், மகப்பேற்றுக்குரிய பெண்கள் என்று பலரும் கொல்லப்படுவதுடன் பலர் படுகாயம் அடைந்து அவயங்களை இழந்து வருகின்றனர்.

மருத்துவ மனைகள் மீதும் எறிகணை வான் தாக்குதல்களை நிகழ்த்தி 200க்கும் அதிகமான நோயாளர்களையும், மருத்துவ பணியாளர்களையும் கொன்று குவித்துள்ளமையால் மருத்துவ மனைகள் இயங்க முடியாமல் மிகச் சிறிய பகுதியில் மக்கள் வீதியோரங்களிலும், மர நிழல்களிலும் கால்வாய்க் கரையோரங்களிலும் மிக நெருக்கடியில் வாழ்வதால் சுகாதார வசதிகளின்றி தொற்றுநோய்கள் பரவும் அபாயத்தையும், நுளம்புத் தொல்லை, பாம்புக்கடி போன்ற உயிராபத்துக்களையும் எதிர்கொள்ள வேண்டிய பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்தப் பகுதிகளில் அரச அலுவலகங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள் எதுவுமே இயங்காத நிலையில் உயிர் வாழ்வதற்கான அடிப்படை வசதிகளின்றி மக்கள் நாள்தோறும் இடம் பெயர்ந்த வண்ணம் உள்ளனர்.

சிறிலங்கா அரசாங்கத்தால் பாதுகாப்பு வலயம் என அறிவிக்கப்பட்ட இடங்களை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் மக்களை நோக்கி வான் தாக்குதல்கள், ஏறிகணைத் தாக்குதல்கள் நிகழ்த்தி கொல்லப்படும் மக்களை புதைப்பதற்குக் கூட அவகாசமின்றி மிரட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தப் பேரவலங்களுக்கு மத்தியில் அவலப்படும் மக்களோடு தான் நானும் எனது குடும்பத்துடன் அல்லற்பட்டுக் கொண்டிருக்கிறேன்.

சீறி வரும் எறிகணைக் குண்டுகளுக்கும் வான் தாக்குதலுக்கும் முன்பாக நாடாளுமன்ற உறுப்பினரின் உயிரும், அப்பாவி மக்களின் உயிரும் அற்பமானது அல்லவா?

ஆகவே உங்களுக்கு சட்ட பூர்வமாக அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி இதற்கான முடிவினை உடனடியாக எடுக்க வேண்டும். போர் நிறுத்தத்தின் பின்னரே ஏனைய விடயங்கள் தொடரப்பட வேண்டும்.

ஆகவே அப்பாவி மக்களின் உயிர்களைக் காக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போட்டிகள்

வலி.வடக்கு, பெப்.17

யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு மாவட்ட மட்டத்தில் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் ஆண்களுக்கான ஹொக்கி விளையாட்டுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டங்களின் விவரங்கள் வருமாறு:-

* வட்டுக்கோட்டை 'ஓல்ட் கோல்ட்' விளையாட்டுக் கழகம் எதிர் யாழ்.ஸ்ரார் விளையாட்டுக் கழகம்.
* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விளையாட்டு அணி எதிர் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பேர்ஸ் விளையாட்டுக் கழகம். (50-86)

* * *

அச்சுவேலி, பெப்.17

கோப்பாய் தெற்கு றோ.க.தமிழ் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நாளை 18 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் சென்.மேரிஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் எஸ்.லலீசன் தலைமையில் நடைபெறும் இந்தப் போட்டியில் வலி.கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் த.நடராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக கோப்பாய் பங்குத் தந்தை அருட்திரு எவ்.எல்.என். குரூஸ் அடிகளும், கௌரவ விருந்தினராக வலி.கிழக்கு வட பகுதி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பொது முகாமையாளர் கே.கிருஷ்ணராசாவும் கலந்து கொள்வர். (50-11)

# இவ்வாண்டுக்கான சம்பந்தன் விருது பெறுகிறார் பேராசிரியர் கனகரத்தினம்

யாழ்ப்பாணம்,பெப்.17

இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை நினைவாக வருடா வருடம் சம்பந்தன் விருது வழங்கப்பட்டு வருகின்றது. 2007ஆம் ஆண்டு வெளிவந்த மிகச் சிறந்த நூல்களிலொன்றாக பேராசிரியர் இரா வை.கனகரத்தினம் எழுதிய நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும் என்ற ஆய்வு நூல் விருதுக்கும் பரிசுக்குமுரியதாகத் தெரிவாகியுள்ளது.

கடந்த காலங்களில் பேராசிரியர் அ.சண்முகதாஸ், கலாநிதி பண்டிதர் க.சச்சிதானந்தன், எழுத்தாளர் தெளிவத்தை யோசெப், பேராசிரியர் எஸ்.பத்மநாதன், படைப்பாளி சு.வே.,பேராசிரியர் சி மௌனகுரு, பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பேராசிரியர் ச.சத்தியசீலன் ஆகியோர் சம்பந்தன் விருதினை பெற்றுள்ளனர்.

இவ்வாண்டு பேராசிரியர் இரா வை.கனகரத்தினம் இந்த விருதைப் பெறுகிறார். இவர் பேராதனைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராவார்.

எழுத்தாளர் சம்பந்தனின் மகள் திருமதி திரிவேணி கஜன் இவ்விருதுக்கான பணப்பரிசில் 10,000 ரூபாவை வழங்கி பேராசிரியரைக் கௌரவிக்கின்றார். விருது வழங்கும் விழா யாழ்ப்பாணத்தில் ஏப்ரல் மாதமளவில் நடைபெறவுள்ளது.

# சிவராத்திரி தினத்தையொட்டி கீரிமலை வரை பஸ்சேவை

யாழ்ப்பாணம்,பெப்.17

மகா சிவராத்திரி தினத்தையொட்டி பக்தர்கள் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்றுவர வசதியாக '788' சிற்றூர்திச் சேவைச் சங்கத்தினால் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

22ஆம், 23ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை வரை தனியார் பஸ்கள் நேர அட்டவணையின் பிரகாரம் விசேட போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் என 788 தனியார் சிற்றூர்திச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இரண்டு தினங்களிலும் காலை முதல் மாலை வரை இந்தச் சேவைகள் நடைபெறும் எனவும் பக்தர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து கீரிமலை வரை இந்த பஸ்களில் பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

## நாளை

| | |
|---|---|
| மாசி 06 | 18.02.2009 |
| | புதன்கிழமை |
| திதி: | நவமி |
| | மு.இ. 09.17 வரை |
| நட்சத்திரம்: | கேட்டை |
| | முழுவதும் |
| சுபநேரம்: | 05.02 - 06.32 |
| ராகுகாலம்: | 12.32 - 02.02 |

# விடுவிக்கப்படாத பகுதிகளிலிருந்து 109 பொதுமக்கள் வந்து சேர்ந்தனர்

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிகளிலிருந்து நேற்று முன்தினம் 109 பொதுமக்கள் இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரிடம் பாதுகாப்புக் கோரி வந்துள்ளனர். பருத்தித்துறை புல்மோட்டை மற்றும் விசுவமடுவுக்கு வடக்கேயுள்ள இராணுவத்தினர் மற்றும் கடற்படையினரிடம் இவர்கள் சரணடைந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இவர்களுள் 20 சிறுவர்கள் உள்ளடங்கலாக 78 பொதுமக்கள் மூன்று குழுக்களாக படகுமூலம் முல்லைத்தீவில் பாதுகாப்பு படையினரிடம் வந்து சேர்ந்துள்ளனர். மேலும் 10 பெண்கள் 8 சிறுவர்கள் உள்ளடங்கலாக 25 பொதுமக்கள் நேற்று முன்தினம் காலை 8 மணி யளவில் பருத்தித்துறைப் பகுதிக்கு வந்து சேர்ந்துள்ளனர். அதேவேளை மேலுமொரு குழுவினர் புல்மோட்டையில் கடற்படையி னரிடம் பாதுகாப்புக் கோரி வந்து சேர்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை விடயத்தில் இந்தியாவின் போக்கைக் கண்டித்து

# அடையாள அட்டைகளை வீதியில் போட்டு எரித்து தமிழகத்தில் நேற்று சட்டத்தரணிகள் போராட்டம்

சென்னை,பெப்.17

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இந்திய மத்திய அரசின் போக்கைக் கண்டித்து சென்னை சட்டத்தரணிகள் நேற்று தங்கள் அடையாள அட்டைகளைத் தீயிட்டு எரித்து குடியுரிமை மறுப்பு போராட்டம் நடத்தினார்கள். பொலிஸார் அவர்களைக் கைது செய்யச் சென்றபோது அவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே தள்ளுப்பாடு ஏற்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் கடந்த ஜனவரி 10ஆம் திகதி முதல் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

நேற்று 50இற்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் ஒன்று திரண்டு பேரணியாகச் சென்றார்கள். சோனியா உருவப் பொம்மையையும், இலங்கை அதிபரின் தகவல் தொழில் நுட்ப ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ள நாராயணமூர்த்தியின் உருவப் பொம்மையையும் அவர்கள் தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

பின்னர் அவர்கள் நேதாஜி, சுபாஷ் சந்திரபோஸ் சாலைக்கு வந்தார்கள். குடியுரிமை மறுப்பு போராட்டமாக அங்கு வழக்கறிஞர்கள் ஜெயேந்திரன், ஜெயக்குமார், மனோகரன், புகழேந்தி, ரஜினி, பெண் வழக்கறிஞர்கள் செங்கொடி, கயல் உட்பட 25 வழக்கறிஞர்கள் தங்களுடைய வாக்காளர் அடையாள அட்டைகளை சாலையில் போட்டு அதன் மீது பெற்றோலை ஊற்றித் தீவைத்தனர்.

ஈழத்தமிழர்களைக் காப்பாற்றத் தவறிய மத்திய அரசைக் கண்டித்தும், சோனியாவைக் கண்டித்தும் கோஷங்களை எழுப்பினார்கள். உடனே பொலிஸார் அவர்களைச் சுற்றி வளைத்தார்கள். உடனே வழக்கறிஞர்கள் பொலிஸாருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்கள். இதுவரை நடந்த போராட்டத்தில் பொலிஸாருக்கு நாங்கள் ஒத்துழைப்பு அளித்தோம். ஆனால் நள்ளிரவில் சென்று வழக்கறிஞரை பொலிஸார் கைதுசெய்திருக்கிறார்கள்.

எனவே இனிமேல் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு அளிக்கமாட்டோம். முடிந்தால், வீட்டில் வந்து கைதுசெய்து கொள்ளுங்கள் என்று கூறியபடி, நீதிமன்ற வளாகத்துக்குள் சென்றனர். அவர்களை கைது செய்வதற்காக பொலிஸார் பின்தொடர்ந்து சென்றார்கள்.

ஆனால் நீதிமன்ற வாயில் கதவை சாத்தி பொலிஸாரை உள்ளே விட மறுத்தனர். இதனால் பொலிஸாருக்கும், வழக்கறிஞர்களுக்கும் இடையே சிறிது நேரம் தள்ளுப்பாடு ஏற்பட்டது. இதனால் அங்கு பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டது. பொலிஸைக் கண்டித்து அப்போது வக்கீல்கள் கோஷம் எழுப்பினார்கள். (அ-சி)


பருத்தி நகரில் புதிய உதயம்

P.Net
BROWSING CENTRE & COMMUNICATION

தனித்துவமான Online Internet & E-mail
வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

காலம் :- 7 நாள்கள்
ஆரம்பம் :- 23.02.2009

சிவன்கோவிலடி,
பருத்தித்துறை.
T.P.No-0602213060


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னையின் மடியில்:
18.02.1944
ஆண்டவன் அடியில்:
18.01.2009



### தில்லையம்பலம் செல்வராசா

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், தபாற்கந்தோர் )

அன்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
நேசத்துடன் வாழ்ந்த அப்பாவே
ஆலமரமாய் இருந்து அறிவுரைகள் கூறிய அப்பாவே
நித்தமும் உங்கள் நினைவாய் தவிக்கின்றோம்
தந்தையே கணப்பொழுதில் இறைவன் திருவடி சேர்ந்துவிட்டீர்
பெற்றிடுக சாந்தி

18.01.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (17.02.09) செவ்வாய்க்கிழமை மு.ப.10.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு, சுன்னாகம். குடும்பத்தினர்.

## நன்றியறிதல்

எனது ஆசிரியர் சேவைக் காலத்தில் பல்வேறு விதத்திலும் வளமூட்டி உரிய முறையில் சேவையாற்றுவதற்கு உதவிய கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும் ஆசிரியர் சேவையில் இருந்து (2009.01.28) அன்று ஓய்வு பெறும்போது சேவை நயப்பு செய்து பாராட்டுகள், ஆசிகள் தெரிவித்த மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.வி.ரி.செல்வரத்தினம், யாழ்.கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், கல்லூரி அதிபர் அருட்சகோதரி மரிய றொசாறியோ, கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி திரு.வி.எஸ்.சித்திரவேல், அச்சுவேலி உலவிக்குளம் சித்தி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ விருத்த கிரீடக் குருக்கள் ஐயா, வண.பிதாக்கள் அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் கல்லூரி ஆசிரியர் குழாத்தினர் மற்றும் யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்கள் - மாணவிகள் மற்றும் கல்லூரிச் சமூகத்தினருக்கும் பாராட்டுகள். அன்பளிப்புகள் வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும்;

அச்சுவேலி தெற்கு நெல்லிஞான வைரவர் ஆலய நிர்வாகிகள், கலைமகள் சனசமூக நிர்வாகிகள் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நன்றியறிதலை மனமகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

செல்வி. இராசதுரை இராசமலர்,
ஓய்வுபெற்ற பிரதி அதிபர்,
அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி,
அச்சுவேலி.

## சங்கானை மடத்தடியில் நேற்று விபத்து

சித்தங்கேணி, பெப்.17

சங்கானை மடத்தடி அரசடிச்சந்தயில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் அதே இடத்தைச் சேர்ந்த எஸ். சங்கரப்பிள்ளை (வயது 70) தலையில் பலத்த காயங்களுக்குள்ளானார்.

நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த ஆசிரியரும் மற்றொருவரும் சிறு காயங்களுக் குள்ளாகி சங்கானை அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(1-7-112)

## சட்ட விரோத மின் இணைப்பு; 5 பெண்கள் உட்பட ஏழு பேர் கைது

தென்மராட்சி மந்துவில் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற ஐந்து பெண்கள் உட்பட ஏழு பேர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி பொலிஸாரும் இலங்கை மின்சாரசபை பிரிவினரும் இணைந்து நடத்திய திடீர் சோதனையின் போது பிடிக்கப்பட்டவர்களில் ஏழு பேர் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த நீதிவான் அவர்களை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சட்ட விரோதமாக மின்னைப் பெறுவதற்கு பயன்படுத்திய பெருமளவு வயர்கள், குழாய்கள் மீட்கப்பட்டு கொண்டுவரப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)


கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் விநியோகிக்கப்படும் பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ ராஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி.
★ ரவி - சாவகச்சேரி.
★ கோல்டன் பாம் - பருத்தித்துறை.
★ [illegible] - யாழ்ப்பாணம்
★ [illegible]



படிவம்

மொறட்டுவப் பல்கலைக்கழக, ஊவா வெல்லசைப் பல்கலைக்கழக அநுமதிக்கான திறமைகாண் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.


## தவறிவிட்டது

சுதுமலை கிழக்கு மானிப்பாய் என்னும் முகவரியுடைய இரத்தினசிங்கம் மனோகரன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (632052170V) மற்றும் விசேட அடையாள அட்டை ஆகியன கடந்த 13.02.09 அன்று தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்

## ஓராண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 21 | | 29 |
| ★ |  | ★ |
| 03 | | 02 |
| ★ | | ★ |
| 1937 | | 2008 |

### அமரர் பொன்னுத்துரை பரமேஸ்வரி

(அல்லின் வீதி, காரைநகர்)

திதி: 17.02.2009

நூறு முறை கூப்பிட்டு நொந்து போனோம்
ஆறுதல் சொல்ல ஏன் வரவில்லை அம்மா
தேறுதல் சொல்ல எமக்கு யாரம்மா
திரும்பியே வாரும் அம்மா தெருவழியே
பார்த்திருப்போம்
நிம்மதியின்றி நித்தமும் அழுகின்றோம்
உம் திருமுகம் தேடி நிற்கின்றோம் அம்மா
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நி.முகவரி: அல்லின் வீதி, காரைநகர்
த.முகவரி: கே.கே.எஸ் வீதி, முதலியார்வளவு, சுன்னாகம்.

என்றும் உங்கள் நினைவுடன் வாழும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்லையா (கலாபூஷணம்)



கண்டி வீதி, பளையைப் பிறப்பிடமாகவும் இரணைப்பாலை, 7ஆம் வட்டாரம், ஆனந்தபுரத்தை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கலாபூஷணம் சின்னத்தம்பி செல்லையா 13.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.02.2009 சனிக்கிழமை இரணைப்பாலையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.குணபாலசிங்கம் (மகன்)
அதிபர், யா/நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை.

"ஞானவாசம்"
அம்பலவாணர் வீதி, உடுவில்.
T.P. 0602219048

### திருமதி மோகனசுந்தரராஜா நாகம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



உடுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட மோகனசுந்தரராஜா நாகம்மா நேற்று (16.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மோகனசுந்தரராஜா அவர்களின் அன்பு மனைவியும் வேலுப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் குணசேகரம் தம்பதியினரின் அன்பு மருமகளும் மோகனதாசன், மோகனேஸ்வரி (கனடா), ஸ்ரீரங்கதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜபூபதி, சுப்பிரமணியம், மஞ்சுளா ஆகியோரின் அன்பு மாமியாரும் செந்தில்குமரன், மோகனவாணி, ஸ்ரீகார்த்திகா, பவித்திரா, ஸ்ரீகபிலன், ஹரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.02.2009) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணியளவில் பூவோடை இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகன் (உடுவில்),
மோகனதாசன் (மோகன்).

உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர மருத்துவ அம்புலன்ஸ் சேவையை துஷ்பிரயோகம் செய்யவேண்டாம்

## பொதுமக்களிடம் பிராந்தியப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அவசர மருத்துவ சேவைக்கான அம்புலன்ஸ் சேவையினைப் பெறுவதற்கு சாதாரண விடயங்களுக்கும் அழைப்பினை ஏற்படுத்தித் துஷ்பிரயோகம் செய்யாதீர்கள்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள அவசர மருத்துவ சேவையினைக் கருத்திற்கொண்டு உலக சுகாதார நிறுவனமும், சர்வதேச மருத்துவக் குழுவும் இத்தகைய அவசர அம்புலன்ஸ் சேவையினை மேற்கொள்ள முன்வந்துள்ளன.

இத்தகைய சேவையினைக் குடாநாட்டு மக்கள் எந்நேரமும் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

எனவே அவசர மருத்துவ சேவை உள்ளவர்கள் மட்டுமே இத்தகைய சேவைக்கென அழைப்பினை ஏற்படுத்தவேண்டும்.

தவிர சாதாரண நோயாளர்கள், சாதாரண நேரங்களில் இந்த அழைப்பை மேற்கொள்வதால் உண்மையிலே அவரச மருத்துவ சேவை தேவைப்படுவோர் பாதிப்புக்குள்ளாகும் சந்தர்ப்பங்கள் அதிகம் ஏற்படும். எனவே குடாநாட்டு மக்கள் இத்த கைய விடயத்தில் விழிப்பாக இருக்கவேண்டும்.

அவசர மருத்துவ சேவையினைப் பெற விரும்புபவர்கள் 110 என்ற தொலைபேசி இலக்கத்துடன், கைத்தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்துபவர்கள் 021 222 4444 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் என்றார். (202-9)

## பாலசுப்பிரமணிய வித்தி... வைரவர் ஆலயம் வழிபாட்டுக்கு விடப்பட்டது

நவாலி,பெப்.17

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வைரவர் ஆலயத்தி... கும்பாபிஷேகம் அண்மையில் இடம்பெற்... இதையடுத்து அந்த ஆலயம் மாணவர்கள, மக்களின் வழிபாட்டுக்கு விடப்பட்டுள்ளது.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வைரவர் ஆலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு கடந்த பல வருடங்களாகப் பூசை வழிபாடுகளின்றி மூடப்பட்டிருந்தது.

தற்போது ஆனைக்கோட்டையைச் சேர்ந்த கனடா கந்தையா என்பவரின் நிதி உதவியுடன் அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து கடந்த 11ஆம் திகதி கும்பாபிஷேகத்தை நடத்தி மாணவர்களினதும் மக்களினதும் வழிபாட்டுக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது. (202-100)

## யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சிகள்

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் இவ்வாண்டு நடைபெறவுள்ள புதிய பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடச் சித்தியுடன் உயர்தரப் பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியடைந்தவர்களுக்கு முன்பள்ளி ஆசிரியர் கல்வி டிப்ளோமாவும் - ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களுக்கு சிங்கள மொழியில் சான்றிதழ் பயிற்சியும் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மேலும் பல பயிற்சிகள் நடைபெறவுள்ளன. பயிற்சி தொடர்பான மேலதிக விவரங்களை அறிந்துகொள்வதற்குக் கல்லூரியின் விளம்பரப் பலகையினைப் பார்வையிடலாம் என்று கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்துள்ளார். (202-9)

# கோண்டாவில் சாலைக்கு ஒதுக்கப்பட்ட பஸ்களும் ரயர்களும் கொழும்பில் தவம்!

## போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாம்

யாழ்ப்பாணம்,பெப்.17

இலங்கைப் போக்குவரத்துச் சபை (வடக்கு) கோண்டாவில் சாலைக்கென வழங்கப்பட்ட புதிய பஸ்கள், ரயர் வகைகள் என்பன இங்கு எடுத்துவருவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக மூன்று மாத காலமாகக் கொழும்பில் தவம் கிடக்கின்றன.

குடாநாட்டின் போக்குவரத்துச் சேவைக்கென வழங்கப்பட்டுள்ள 5 புதிய பஸ்கன், 174 ரயர்கள் என்பனவே இவ்வாறு கொழும்பில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடாநாட்டின் போக்குவரத்துச் சேவைக்குப் போதியளவு ரயர் வகைகள், பஸ்கள், உதிரிப்பாகங்கள் இன்மையால் மட்டுப்படுத்தப்பட்ட சேவைகளை சில டிப்போக்கள் வழங்கி வருகின்றமை தெரிந்ததே.

இது குறித்தும், அதனால் பொதுமக்கள் எதிர்நோக்குகின்ற அசௌகரியங்கள் தொடர்பாகவும் 'உதயன்' பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தான்.

இந்நிலையில் கோண்டாவில் சாலைக்கென வழங்கப்பட்ட 5 புதிய பஸ்கள், 174 ரயர் வகைகள் என்பன குடாநாட்டுக்கு எடுத்துவருவதில் ஏற்பட்டுள்ள பல்வேறு போக்குவரத்துச் சிக்கல்கள் காரணமாகக் கொழும்பில் மூன்று மாத காலமாகத் தவம் கிடப்பதாக அறியப்படுகிறது.

வழங்கப்பட்ட பஸ்கள், ரயர்களைக் குடாநாட்டுக்கு விரைவில் எடுத்துவந்து பொதுமக்கள் எதிர்கொண்டுள்ள போக்குவரத்து அசௌகரியங்களைத் தீர்ப்பதற்கு உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (202-9)

## கலை, இலக்கியப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.17

தேசிய கலை, இலக்கியப் போட்டிகள் பிரதேச செயலகங்கள் ஊடாக நடைபெறவுள்ளன.

மக்களிடையே இலக்கியம் மற்றும் கலாசாரம் தொடர்பான புத்துணர்வை ஏற்படுத்துதல், நாட்டில் உள்ள இலக்கியவாதிகள் மற்றும் கலைஞர்களது படைப்பாற்றல் திறன்களை வெளிக்கொணர்ந்து அவர்களைப் பிரதேச, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் மதிப்பீடு செய்தல், சிறுவர் மற்றும் இளைஞர்களின் கலை, இலக்கிய ரசனையை விருத்தி செய்து அவர்களது ஆக்கத்திறன்களை வழிப்படுத்துவதன் ஊடாக அவர்களது வாசிப்புத்திறனை விருத்தி செய்து சிறந்ததொரு சமுதாயத்தைக் கட்டியெழுப்புவது ஆகிய நோக்கங்களுக்காக இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் கட்டுரை, கவிதை, சிறுகதை, பாடலாக்கப்போட்டி என நடைபெறவுள்ளது. இப்போட்டியில் 16 வயதுக்குட்பட்டவர்கள் கனிஷ்ட பிரிவாகவும், 16-19 வயதுக்குட்பட்டவர்கள் சிரேஷ்ட பிரிவாகவும், 19 வயதுக்கு மேற்பட்டவர்கள் திறந்த பிரிவாகவும் பங்குபற்றலாம்.

இப்போட்டி தொடர்பான ஏனைய விவரங்களைப் பிர தேச செயலகங்களின் கலாசார உத்தியோகத்தரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். (202-325)




யாழ்ப்பாணம்,பெப்.17

உயரப்புலம் குணபாலன் வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு மாணிக்கம் விளையாட்டு அரங்கில் வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக பாடசாலை நலன்விரும்பி லயன் Dr.எஸ்.சுந்தர்ராஜன், ஆசிரிய ஆலோசகர் திருமதி ரூபா உதயரட்ணம், பாடசாலைக் குடும்பம் எஸ்.ஆர்.ரவீந்திரா ஆகியோர் கலந்துகொள்வர். (201)

* * *

தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை அதிபர் க.காராளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக இலங்கை வங்கியின் இளைப்பாறிய முகாமையாளர் எஸ்.விக்னராஜாவும், சிறப்பு விருந்தினராக ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் இளைப்பாறிய விரிவுரையாளர் திருமதி கலாதேவி பொன்னம்பலமும் கலந்துகொள்வர். (202-201)

# சமயக் கல்வியை வாழ்வியல் ரீதியாக கற்க இளைஞர்கள் முன்வரவேண்டும்

## செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் கோரிக்கை

மருதனார்மடம்,பெப்.17

இளைய தலைமுறையினர் சமயப் பணிகளில் ஈடுபட முன்வரவேண்டும். சமயக் கல்வியை வாழ்வியல் ரீதியாகக் கற்க வேண்டும்.

இவ்வாறு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அகில இலங்கை இந்துமாமன்றத்தினால் 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு நல்லூரிலுள்ள அகில இலங்கை இந்துமான்ற மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கருத்தரங்கிற்குத் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொரு மாதமும், கருத்தரங்கும், ஆய்வுமுயற்சிகளும் இங்கு இடம்பெறவுள்ளன. இளைய தலைமுறையினர் இவற்றில் ஈடுபாட்டோடு கலந்துகொள்ளவேண்டும்.

இந்துமாமன்றத்தினரால் நல்லூரில் சமயப் பிரசாரகர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இப்பயிற்சியில் கலந்துகொண்டு சமய அறிவைப் பெற்றுக்கொள்வதோடு சமயப் பணியாற்றவும் இளைய தலைமுறையினர் முன்வரவேண்டும்.

பல்கலைக்கழகங்களில் இந்துநாகரிகத் துறையைச் சிறப்பாகக் கற்ற மாணவர்கள் பலர் வெளியேறுகின்றனர். அவர்கள் சமயக் கல்வியை ஆய்வியல் ரீதியாகக் கற்கின்றனரே தவிர வாழ்வியல் ரீதியாகக் கற்றுச் சமயப் பணியாற்ற முன்வருவதில்லை. இந்த நிலை மாறவேண்டும் - என்றார்.

இவ்விழாவிலே 'பெரியபுராணம் தோன்றிய காலச்சூழல்' என்னும் தலைப்பிலே உரையாற்றிய யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா -

பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார் ஆற்றல் வாய்ந்த கவிஞராக, கல்வியியலாளராக, சிந்தனையாளராக விளங்குகிறார். சோழர் காலத்தில் கல்வி, கலை, இலக்கியப் பாரம்பரியம் என்பவற்றை ஒருமுகமாகக் கொண்டுவந்து தருவதாகப் பெரியபுராணம் உள்ளது. சைவம் என்னும் குடையின் கீழ்ச் சோழ சாம்ராஜ்ஜியத்தைக் கொண்டுவர வேண்டுமென்ற சேக்கிழாரின் விருப்பே பெரியபுராணத்தில் வெளிப்படுகின்றது - என்றார்.

''பெரியபுராணம் காட்டும் இளமை'' என்னும் தலைப்பில் உரையாற்றிய கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்-

ஒருவர் வாழ்நாள் முழுவதும் கற்கக்கூடிய ஒன்றாகப் பெரியபுராணம் உள்ளது. இன்பவேளையிலும், துன்பவேளையிலும் வாழ்வியலைச் சீர் செய்ய இந்நூல் உதவும். இன்று உலகெங்கிலும் இருப்பவர்கள் படிக்கக் கூடிய வகையில் இணையத்தில் ஏற்றப்பட்ட நூலாகவும் பெரியபுராணம் விளங்குகிறது - என்றார்.

தமிழ்த்துறை விரிவுரையாளர் செல்வி அம்பிகை நடராஜா, இராமநாதன் கல்லூரி ஆசிரியர் திருமதி ஆ.கேதீஸ்வரி, ஸ்கந்த வரோதயக் கல்லூரி ஆசிரியர் ம.பா.மகாலிங்கசிவம், கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை அதிபர் ச.லலீசன் ஆகியோரும் உரையாற்றினர். (202-55)

## நிவாரண அட்டை விநியோகம்

நவாலி,பெப்.17

ஜே/135 நவாலி கிழக்கு, ஜே/133 ஆனைக்கோட்டை ஆகிய கிராமசேவையாளர்களினால் உலக உணவுத்திட்டத்தின் நிவாரணம் பெறுவதற்கான அட்டைகள் கிராம சேவையாளர் அலுவலகங்களில் வைத்து தற்போது வழங்கப்பட்டு வருகின்றன. (202-100)




யாழ்ப்பாணம் அகில இலங்கை இந்துமாமன்றத்தில் 'பெரியபுராணம் காட்டும் வாழ்வியல்' என்னும் பொருளில் இடம்பெற்ற கருத்தரங்கில் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, இந்துமாமன்ற உபதலைவர் ஆறு.திருமுருகன், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் கருத்துரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது பயங்கரவாதம்?

ஈழப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணவேண்டும் என்று அ.தி.மு.க. தவிர, எல்லாக் கட்சிகளும் குரல் கொடுக்கின்றன. அதற்கு முதற்படியாக போர் நிறுத்தம் என்ற கோரிக்கையை தமிழகமே ஒன்று திரண்டு ஓங்கிக் குரலெடுத்து ஒலித்துக் கொண்டிருக்கிறது.

'இலங்கைத் தமிழர்களைக் கொல்லவேண்டும் என்று சிங்கள இராணுவம் கருதவில்லை. போர் என்றால் அப்பாவி மக்கள் கொல்லப்படுவது இயல்புதான்' என்று அ.தி.மு.க. மட்டும் வாதிட்டுக்கொண்டிருக்கிறது. அதனைத் தவிர, ஈழப்பிரச்சினையில் எல்லா அரசியல் கட்சிகளும் ஏறத்தாழ ஒரே கருத்தில்தான் நிற்கின்றன. ஆம். ஈழ மக்களுக்கு எதிரான போரை அ.தி.மு.க. மட்டும் ஆதரிக்கிறது.

ஈழத்தில் போர்நிறுத்தம் என்ற கோரிக்கை ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் மூலம் தெரிவிக்கப்பட்டுவருகிறது. சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றித் தெரிவித்துவிட்டார்கள் ஏன்? தமிழக முதல்வர் தலைமையில் அன்னத்துக் கட்சிக் குழு டெல்லி சென்று பிரதமரைச் சந்தித்தது. 'உடனடியாக வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கொழும்புக்கு அனுப்புகிறேன்' என்று பிரதமர் உறுதிமொழி அளித்தார். அந்த உறுதிமொழி மிக நீண்ட இடைவெளிக்குப் பிறகே செயற்படுத்தப்பட்டது.

இப்படி டெல்லி நீண்ட மௌனம் காத்ததற்கு என்ன காரணம்?

'தீவிரவாத இஸ்லாமிய அமைப்புகளின் பயங்கரவாதத்தை எதிர்த்து நாம் போராடுகிறோம். அதேபோல், பயங்கரவாத விடுதலைப் புலிகளின் அமைப்பை எதிர்த்து சிங்கள அரசு போராடுகிறது. எனவே, போரை நிறுத்து என்று நாம் எப்படி அவர்களைக் கேட்கமுடியும்' என்கிறார்களாம் டெல்லி ஆட்சியாளர்கள்.

எல்லாவழிகளிலும் பேச்சுச் சுதந்திரம் மட்டுமல்ல, மூச்சுச் சுதந்திரமும் மறுக்கப்பட்ட ஈழமக்கள் வேறுவழியின்றிப் போராடுகிறார்கள். அதேபோல்தான் இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்தை எதிர்த்து பாலஸ்தீன மக்கள் போராடுகிறார்கள். அவர்களுக்கு தலைமை ஏற்றிருப்பது 'ஹமாஸ்'என்ற விடுதலை இயக்கம். அந்த இயக்கத்தை இந்தியா அங்கீகரிக்கிறது. பாலஸ்தீன மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவாக இந்தியா உரத்த குரல் கொடுக்கிறது. பாலஸ்தீனத்தை பிடி சாம்பலாக்காதே என்று உலகத்தோடு இந்தியாவும் குரல்கொடுக்கிறது. ஆனால், இலங்கையில் ஈழத்தமிழர்களின் உரிமைப்போராட்டத்தை பயங்கரவாதம் என்று பறைசாற்றுகிறது.

அண்மையில் பாலஸ்தீன காஸா பகுதியில் இஸ்ரேல் கொடும் தாக்குதல் தொடுத்தது. அதனை நிறுத்து என்று ஐ.நா. மன்றம் குரல் கொடுத்தது. எப்போதும் இஸ்ரேலுக்குத் துணையாக வரும் அமெரிக்காவும் பிரிட்டனும் கூட ஊமைகளாய் உட்கார்ந்திருந்தன. அதே ஐ.நா. மன்றம் இன்றைக்கு, இலங்கையில் ஈழநிலைமை கவலை அளிப்பதாக கவலையோடு தெரிவித்திருக்கிறது.

பாலஸ்தீன ஹமாஸ் இயக்கத்தை அமெரிக்கா, பிரிட்டன், கனடா, இதர ஐரோப்பிய நாடுகளெல்லாம் பயங்கரவாத இயக்கம் என்று தடைசெய்திருக்கின்றன. ஆனால், அந்த இயக்கம்தான் தங்கள் தானைத் தலைவன் என்ற வாக்கெடுப்பின் மூலமே பாலஸ்தீன மக்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்த அரசை நாமும் மதிக்கிறோம். ஈழத்தில் அப்படி வாக்கெடுப்பு நடந்தால் ஈழமும் இன்னொரு பாலஸ்தீனமாகும். அதற்கு சிங்கள இனவாத அரசு தயாரா?

ஆனால், ஈழத்தை சவப்பெட்டிக்குள் அடைக்கப் பார்க்கிறார்கள். அதற்கான ஆணிகளை இந்திய அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது.

கிளிநொச்சி வீழ்ந்தது. முல்லைத்தீவு முடங்கியது என்று செய்திகள் வந்தால், டெல்லியில் உயர்ந்தபீடத்தில் உட்கார்ந்திருக்கும் பெரிய அதிகாரிகள் சிங்கள சேனாதிபதிக்கு வாழ்த்துச் சொல்கிறார்கள்.

'ஐயோ நாராயணா' என்று நாம் தலைகுனிவதைத் தவிர வேறு என்ன செய்யமுடியும்?

காடுகளையும் மலைமுகடுகளையும் நடந்தே கடந்து சீனத்தை விடுதலைசெய்த மாவோ அவர்களும் சில தேக்கங்களைச் சந்தித்தார். சில தடைகளை எதிர்கொண்டார். சில இடங்களில் தற்காலிகமாகப் பின்வாங்கவும் செய்தார். அப்போது தமக்குப் பின்னே அணிவகுத்து வரும் செஞ்சேனையைப் பார்த்துச் சொன்னார்.

''இப்போது நிலத்தை இழ. போராளிகளைக் காப்பாற்று. இப்போதைக்கு நிலத்தை இழக்கத் தயங்கினால் பின்னர் நிலத்தையும் இழந்துவிடுவாய், போராளிகளையும் இழந்து விடுவாய்'' என்றார் மாவோ.

இன்றைக்கு வன்னிக்காடுகளில் ஈழப்போராளிகள் நிலங்களை இழக்கலாம். ஆனால், களப்புயல் நாளை எங்கு மையம் கொள்ளும் என்று தெரியாது.

இன்றைக்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடைசெய்திருப்பது போல பிரிட்டனும் தடைசெய்திருக்கிறது. அந்த நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் அண்மையில் டெல்லிவந்தார். அவர் சொன்னார்.

''வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அமைப்புகள் வெவ்வேறு நோக்கங்களுக்காக வெவ்வேறு வழிகளில் போராட்டங்கள் நடத்திவருகின்றன. இந்த அமைப்புக்கள் அனைத்தையும் பயங்கரவாத இயக்கங்கள் என்று அமெரிக்கா முத்திரை குத்தியது. இது சரியான அணுகுமுறை அல்ல.

இலங்கையில் சமஉரிமை மறுக்கப்பட்டதால் அரசுக்கு எதிராக விடுதலைப் புலிகள் தொடர்ந்து போராடி வருகிறார்கள். சமஉரிமை வேண்டும் என்பது நியாயமான கோரிக்கையாகும். இதற்காக அறவழியில் போராடிப் பார்த்தனர். எந்த முடிவும் ஏற்படவில்லை. எனவே, ஆயுதப்போராட்டம் நடத்தும் அளவுக்கு ஈழத்தமிழர்கள் தள்ளப்பட்டிக்கிறார்கள். எனவே, அந்த (விடுதலைப் புலிகள்) அமைப்பை மேலோட்டமாகப் பார்த்து அதற்கு பயங்கரவாத முத்திரை குத்தக்கூடாது. அது நியாயமான அணுகுமுறையாக இருக்கமுடியாது'' என்கிறார் பிரிட்டனின் வெளியுறவு அமைச்சர்.

இந்த அறிவுரை இந்திய அரசின் காதுகளுக்கு எட்டியிருக்குமா? எட்டவேண்டும் என்றுதான் அவர் டெல்லிக்கு வந்து சொல்லியிருக்கிறார்.

சோலை

அவர் இன்னும் சொல்கிறார்: ''மனிதநேயத்துக்குப் புறம்பாகச் செயற்பட்டு வரும் அரசுக்கு எதிராக வேறு எந்த வழியிலும் போராடமுடியாத காரணத்தால் அவர்களுக்கு (விடுதலைப் புலிகளுக்கு) ஆயுதம் ஏந்திப் போராடுவது தவிர்க்கமுடியாததாக ஆகிவிட்டது'' என்கிறார்.

ஈழப்போராளிகளின் நியாயம் எங்கோ பல்லாயிரம் மைல்களுக்கு அப்பாலுள்ள பிரிட்டிஷ் குடிமகனுக்குத் தெரிகிறது. ஆனால், இந்திய அரசுக்குத் தெரியவில்லையே?

இன்றைக்கு ஈழமக்கள் மடியில் மரணத்தைக் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். எதற்காக? இன்றைக்குத் தங்கள் கர்ப்பப்பையில் உறங்கும் குழந்தைகளின் எதிர்காலமாவது வசந்தமாக இருக்கட்டும் என்று அவர்கள் கருதுகிறார்கள். தினசரி, அவர்களுக்கு உயிர்போய் உயிர்வந்து கொண்டிருக்கிறது. இந்தியா அவர்களுக்கு உதவவேண்டாம். ஆனால், அவர்களுக்கு எதிராக சிங்கள இனவாதத்துக்கு பட்டுக்குஞ்சம் கட்டி விடுகின்ற வேலையையாவது நிறுத்தலாமே?

*நன்றி: குமுதம்.*

## வாசகர் திருமுகம்

### சிறுவிளான் கனகசபை வித்தியாலயம்: அபிவிருத்தி நிலைமை பற்றி அதிபர் விளக்கம்

வலி.தென்மேற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் பின்தங்கிய மாணவர்களின் கல்விக்கு ஊன்றுகோலாகச் செயற்பட்டு வருகின்றது.

இவ்வேளையில் 05.12.2007இல் 2 ஆசிரியர்களையும், 13 மாணவர்களையும் கொண்டு இயங்கிவரும் சிறுவிளான் கனகசபை வித்தியாலயம் (கல்விப்புனல்) எனும் தலைப்பிலும் வாசகர் திருமுகம் பகுதியில் 05.02.2009ஆம் திகதிய உதயன் பத்திரிகையில் ''கல்வி அதிகாரிகள் கவனிப்பார்களா?'' எனும் தலைப்பில் இளவாலையூர் ம.திருச்செல்வம் என்பவரும் எழுதியதற்கு அமைவாகப் பாடசாலையின் அதிபர் என்ற வகையிலும் பாடசாலையின் அபிவிருத்தி, முன்னேற்றம், வளர்ச்சி கருதிப் பாடசாலைச் சமூகத்திற்கு பின்வருவனவற்றை முன்வைக்கவேண்டிய கடப்பாடு எனக்குண்டு.

அந்தவகையில் கல்வி அபிவிருத்தியின் அக்கறைக்காகவும், பிரதேச அபிவிருத்திக்காகவும் எனது பாடசாலை பற்றி எழுதியதை முழு மனதோடு வரவேற்கின்றேன். ஆனால் பாடசாலை அதிபராக நான் உள்ளபோது தரக்குறைவாக தலைமை வாத்தியார் என்று குறிப்பிடப்பட்டது மனவேதனை அளிக்கிறது. இப்பாடசாலை 01.12.2008வரை ஒரு நிரந்தர ஆசிரியருடனும், ஒரு தொண்டர் ஆசிரியருடனும் பல கஷ்டத்தின் மத்தியில் இயங்கிவந்துள்ளது. தற்போது ஒரு ஆரம்ப கல்விப்பட்டதாரி ஆசிரியரையும், ஓர் ஆங்கிலப் பாடப் பட்டதாரி ஆசிரியரையும் கல்வி அமைச்சு கஷ்டப் பிரதேச ஆசிரியர்களாக நியமித்துள்ளது. இப்பாடசாலையில் மாணவர்களுக்கான முழுச்சேவையை முழுமையாக நானும் எனது ஆசிரிய குழாமும் செய்து வருகின்றோம். அதற்கு வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளரும் சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப்பணிப்பாளரும் உற்சாகமளித்து வருகின்றனர்.

மேலும் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு மற்றும் பரிசளிப்பு என்பன உரிய காலங்களில் கல்வி அபிவிருத்திக்காகவும், மாணவர் முன்னேற்றத்திற்காகவும் எமது ஆசிரியர் குழாம் அரும்பாடுபட்டு வருவது யாவரும் அறிந்ததே. எமது பிரதேசத்தில் ஒரு பாடசாலைக்கு மூடுவிழா ஏற்படக்கூடாது என்ற சிரத்தையுடன் நாம் செயற்படுகின்றோம். ஆனால் வளங்கள் வீணடிக்கப்படுகின்றது என எழுதப்பட்டிருந்தது. அவ்வாறு வீணடிக்கப்பட்டது என்றால் மாணவரின் கல்வி அடைவுமட்டத்தினையும், வெளியீட்டினையும் (இறுதியாக நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் 2008 எமது பாடசாலை மாணவர் எடுத்த ஆகக்குறைந்த புள்ளி 54) சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப்பணிப்பாளர் வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் கல்வித்திணைக்களம் வரை மதிப்பீடு செய்துள்ளது.

அத்துடன் பாடசாலைகள் முழுமையாகச் செயற்படுத்தி மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாடு செய்யவேண்டும் எனவும் பின்தங்கிய கிராமத்தில் பாடசாலைகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவேண்டும் எனவும் அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் அவர்கள் தெரிவித்துள்ளார். அந்த வகையில்தான் எமது பாடசாலை அனைத்துத் தரப்பினரதும் உதவியுடன் கல்விப்புலச் செயற்பாடு முன்னேற்றமாகச் செயற்பட்டு வருகின்றது. எனவே அதிபர் என்ற வகையில் அரசாங்கத்தின் வேதனத்தைப் பெற்றுக்கொண்டு நானும் எனது ஆசிரியர் குழாமும் பயன்படுத்தப்படாத அனைத்து வளங்களையும் பூரணமாகப் பயன்படுத்தி மாணவரின் கல்வி முன்னேற்றத்திற்கான கல்விச்செயற்பாட்டை அதிகரித்து வருகின்றோம்.

வாசகர்கள் உண்மையான நிலையை அறியவேண்டும் என்பதற்காக மேற்கண்டவற்றை அறியத்தருகிறேன்.

ஆ.சிறீதரன், அதிபர்.

## புலிகள் ஆயுதங்களைக் கைவிடாத நிலையில் இந்தியா நேரடியாகத் தலையிடமுடியாது

### மைலாப்பூரில் அமைச்சர் சிதம்பரம் விளக்கம்

சென்னை,பெப்.17

தமிழ்நாட்டில் சிலர் கூறுவதுபோல் இலங்கையில் அந்த அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்று வரும் போரில் இந்தியா நேரடியாகத் தலையிடமுடியாது. வடகிழக்கிலும் காஷ் மீரிலும் போரிட்டுவரும் போராளி குழுக்களுடன் இந்திய அரசு பேச்சுவார்த்தைகள் எதிலும் ஈடுபடாமைக்கு அவர்கள் ஆயுதங்களைக் களைவதற்கு இணங்காமைதான் காரணம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்திய உள்துறை அமைச்சர் பி.சிதம்பரம். மைலாப்பூரில் நடந்த கூட்டமொன்றில் சிதம்பரம் உரை நிகழ்த்தினார்.

தமிழ் நாட்டில் இந்த உண்மைநிலையை தி.மு.க., காங்கிரஸ், அகில இந்திய அண்ணா தி.மு.க. போன்ற கட்சிகள் நன்கு புரிந்து கொண்டுள்ளன. பா.ம.க. தலைவர் டாக்டர் ராமதாஸ் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் போன்றோரும் இந்த நிலைப்பாட்டினைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் - என்றார் அமைச்சர்.



இலங்கை அரசு இராணுவ நடவடிக்கைகளை நிறுத்துவதுடன் புலிகளும் ஆயுதங்களைக் கீழே வைத்தால் இருதரப்புக்குமிடையில் பேச்சுவார்த்தையொன்றுக்கு இந்தியாவால் ஏற்பாடு செய்யமுடியும் என்றும் சிதம்பரம் குறிப்பிட்டார். (ப)

## 'நாவேந்தன் விருது' பெறும் இரு நூல்கள்

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்.இலக்கிய வட்டத்தின் ஆதரவில் இவ்வாண்டுக்கான நாவேந்தன் விருதுக்கு இரண்டு நூல்கள் தெரிவாகியுள்ளன.

செங்கை ஆழியான் எழுதிய 'வற்றாநதி' மற்றும் தெணியான் எழுதிய 'இன்னொரு புதிய கோணம்' என்ற இரு தொகுதிகளும் விருது பெறுகின்றன.

இவர்கள் ஈழத்தின் மூத்த படைப்பாளிகள். இவர்கள் சிறுகதை, குறுநாவல், நாவல், விமர்சனம், கட்டுரையியல் ஆகிய இலக்கியத்துறைகளில் கைவந்தவர்கள். ஈழத்துப் புனைகதைத் துறைக்குப் பெருமை சேர்த்தவர்கள்.

2007ஆம் ஆண்டுக்கான விருதுக்கு இவ்விரண்டு சிறுகதைத் தொகுதிகளும் நடுவர்களால் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாக யாழ்.இலக்கிய வட்டம் அறிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் வெளிவருகின்ற சிறுதைத் தொகுதிகளில் சிறந்தவற்றுக்கு நாவேந்தன் விருது வழங்கிக் கௌரவிக்கும் திட்டத்தை யாழ்.இலக்கிய வட்டம் 2005-2006ஆண்டுகளிலிருந்து ஆரம்பித்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 19 ஆவது ஆண்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
யாழ்.மாநகர சபை பொறியியலாளர் சுரேஸ்குமார் உரையாற்றுவதையும், வைத்திய கலாநிதி கே.நந்தகுமார், வைத்திய கலாநிதி திருமதி கிரிஜா நந்தகுமார் ஆகியோர் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதையும் முதல் மூன்று படங்களிலும் காணலாம்.
மாணவி ஒருவரின் நடன நிகழ்வையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:லக்ஸ்மன்)

## சமய சந்திதிகளில்

சுழிபுரம்,பெப்.17

சுழிபுரம் வடகிழக்கு சோழியபுரம் சம்புநாதேஸ்வரர் ஆலயப் பெருந்திரு விழா ஞாயிற்றுக்கிழமை ஆரம் பமாகியது.

எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்த்திரு விழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

சிவஸ்ரீ சு.ஸ்ரீரங்கநாதக் குருக்கள் கிரியைகளை நிறைவேற்றுவார். (202-28)

* * *

சுழிபுரம்,பெப்.17

சுழிபுரம் வடக்கு சம்புநாதஸ்வர சிவன் ஆலயத்தில் புதிதாக கொடித்தம்பம் நிறுவப்பட்டு முதன்முறை கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகி திருவிழா நடைபெறுகின்றது.

மகாசிவராத்திரி தினத்துக்கு முதல் நாள் 22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மேற்படி ஆலயத்தில் தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (201-28)

* * *

கட்டைவேலி,பெப்.17

நாட்டில் சமாதானமும், அமைதியும் வேண்டி துன்னாலை கோவிற் கடவைப் பிள்ளையார் கோவிலில் வாரம் தோறும் கூட்டுப் பிரார்த்தனையும், விசேட பூசையும் நடைபெற்று வருகிறது.

பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை கூட்டுப் பிரார்தனையில் பக்தர்கள் ஈடுபட்டு வருகிறார்கள்.

கூட்டுப் பிரார்த்தனை முடிவுற்றதும் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (202-275)

## ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தி.க்கு கணனி அன்பளிப்பு

நவாலி,பெப்.17

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலைக்கு கணனி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

அவ்வூரைச் சேர்ந்த நாகலிங்கம் கந்தையா என்பரின் முயற்சியினால் கனடாவில் வசிக்கும் கனகரத்தினம் கமலநாதன், கனகரத்தினம் இராமநாதன், பத்மநாதன் கங்காதரன் ஆகியோரின் நிதி உதவியுடன் இந்தக் கணனி அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோர் முன்னிலையில் அதிபர் சிவகடாச்சத்திடம் பாடசாலையில் வைத்துக் கடந்த வாரம் இக்கணனி கையளிக்கப்பட்டது. (202-100)

# ஈழத்தமிழரைக் காக்க மனிதச்சங்கிலியில் அலை கடலெனப் பொங்கியெழுந்து வாரீர்!

## அழைப்பு விடுக்கிறார் வைகோ

சென்னை, பெப். 17

தாய்த் தமிழகப் பெருமக்களே, வாழ்வுக் காய் சாவைத் தாங்கும் ஈழத் தமிழரைக் காக்க



இன்று செவ்வாய்க் கிழமை நடக்கவி ருக்கும் மனிதச்சங்கிலியில் அலை கடலாகத் திரண்டு புரண்டு எழுந்து வாரீர்.

- இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

நெஞ்சைப் பிளக்கும் துன்பச் செய்திகள் இலங் கையிலே இருந்து வந்த வண்ணம் இருக்கின்றன.

படுகொலைக்கு உள்ளான தமிழர்களின் பிரேதங்கள் வீதி ஓரங்களிலும், மண் மேடுகளிலும் சிதறிக் கிடக்கின்றனவாம். மருத்துவமனைகள் மீது குண்டு வீசப்பட்டதில் ஒரு வாரத்திற்கு முன்பே 800க்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்பட்டனர். ஏராளமானவர்கள் மரண காயமுற்றனர்.

உலகில் எந்த ஒரு பகுதியிலும், எந்தப் போரிலும், எந்த ஒரு மோதலிலும் மருத்துவமனைகள் மீது இராணுவம் தாக்குதல் நடத்தியது இல்லை.

உலகத்தில் எந்த நாட்டிலும் ஒரு இனப் படுகொலை நடக்குமானால் அதனைத் தடுப்பதற்கு அனைத்துலக நாடுகளுக்கு உரிமை உண்டு. அதுதான் சேர்பியாவில் நடந்தது. கொசோவாவில் நடந்தது. கிழக்குத் திமோரில் நடந்தது. பாலஸ்தீன காசாவில் நடந்தது. ஏன் அவ்வளவு தூரம் போவானேன்? கிழக்குப் பாகிஸ்தான் வங்கதேசமாக உருவெடுத்ததே இந்தியாவால்தானே. அதைத்தான் நேற்றுமுன்தினம் புதுடில்லியில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் நடத்திய உண்ணாநிலைப் போராட்டத்தின் போது அகில இந்தியத் தலைவர்கள் வலியுறுத்தினர்.

### மரணத்தின் பிடியிலிருந்து மீட்க கை கோர்க்க வாருங்கள்

கொத்துக்கொத்தாக தமிழ்க் குடும்பங்கள் குண்டுவீச்சுக்குப் பலியாகும் துன்பம் அங்கே. வயது முதிர்ந்தவர்களும், பச்சிளம் குழந்தைகளும் தாய்மார்களும் இராணுவத் தாக்குதலால் கொல்லப்படும் பேரழிவை எண்ணி மனம் பதைத்த முருகதாசன் என்கின்ற ஈழத் தமிழ் இளைஞன் லண்டனில் இருந்து புறப்பட்டு சுவிற்சர்லாந்து நாட்டுக்குச் சென்று ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா.வின் மனித உரிமை ஆணையத்திற்கு எதிரே தீக்குளித்து கருகிச் சாம்பலாகிவிட்டான்.

முத்துக்குமார் மேனியை எரித்த தீ, ஜெனீவாவில் முருகதாஸ் உடம்பிலும் எரிந்தது.

தமிழக மக்களே சிரம் தாழ்த்தி உங்களை மன்றாடி வேண்டுகிறேன். பாசத்தோடு வளர்த்த குழந்தை தடுமாறி தண்ணீரில் விழுந்து தத்தளித்து மூழ்க இருக்கையில் தாயின் கரங்கள் தாவிப் பற்றி அக்குழந்தையைக் காக்கத் துடிக்குமே. அப்படித்தான் தாய்த் தமிழகத்து மக்களும் நம் தொப்புள் கொடி உறவுகளை மரணத்தின் பிடியிலிருந்து காக்க கரங்களை நீட்டுங்கள். ஒருவரை ஒருவர் பற்றிக் கொள்ளுங்கள். உலகத்தின் அனைத்து நாட்டு மக்களின் கவனமும் இலங் கைத் தீவின் மீதும், தாய்த் தமிழகத்தின் மீதும் திரும்பி இருக்கின்றது.

வரும் 17 ஆம் திகதி (இன்று) மாலை 5 மணி முதல் 6 மணி வரை கரம் கோர்த்து நிற்போம். சீனத்துப் பெருஞ்சுவரென வரிசையாக நிற்போம். ஆயிரம் அலுவல்கள் நமக்கு இருக்கலாம். ஆனால், ஒரே ஒரு கணம் சிந்தியுங்கள்.

உணவு, மருந்தின்றி கொஞ்சம் கொஞ்சமாக செத்து மடியும் தமிழர்கள் அங்கே. குண்டு வீச்சில் உடல்கள் சிதறி இரத்த வெள்ளத்தில் மிதக்கும் கொடுமை அங்கே. வீடு இழந்து, வாழ்விழந்து தங்கள் பூர்வீக மண்ணிலேயே பீரங்கிக் குண்டுகளால் வேட்டையாடப்படும் கொடுமை அங்கே.

அழுவதற்கு கூட அவர்களுக்கு சக்தி இல்லையே. நமக்கு கரங்கள் இருப்பது துன்புறும் மக்களின் கண்ணீரைத் துடைப்பதற்கன்றோ என்ற உணர்வுடன் மாலை 4 மணிக்கே ஆங்காங்கு மனிதச்சங்கிலிக்கு ஆயத்தமாகுங்கள்.

ஐந்து மணி முதல் ஆறு மணி வரை மனித சங்கிலியாக மாறுங்கள். ஈழத் தமிழர்கள் மீது பூட்டப்படும் அடக்குமுறை சங்கிலிகளை உடைப்பதற்கு நாம் அமைப்போம் மனிதசங்கிலி.

தாய்த் தமிழகத்தின் மனவேதனையை, கொந்தளிக்கும் உணர்ச்சியை இந்திய அரசு உணரட்டும். போரை நிறுத்த முற்படட்டும் - என்றுள்ளது. (சி)

## யுத்த நிறுத்தம் குறித்து அழுத்தம் கொடுக்க இனியும் தவறினால்

# வன்னிப் படுகொலைக்கும் தீக்குளிப்புகளுக்கும் சர்வதேச நாடுகளே பொறுப்பேற்க வேண்டும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை

கொழும்பு, பெப்.17

இலங்கையில் போர்நிறுத்தத்தை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் இப்போதாவது இலங்கை அரசுக்கு அழுத்தங் கொடுக்கா விட்டால் வன்னியில் தமிழர்கள் கொல்லப்படுகின்றமைக்கும் உலகெங்கிலும் இடம்பெறுகின்ற தீக்குளிப்புச் சம்பவங்களுக்கும் சர்வதேச நாடுகளே பொறுப்புக்கூற வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் அனுப்பிவைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

வன்னி நிலப்பரப்பில் தொடர்ச்சியாக இடம்பெறும் எறிகணை மற்றும் விமானத் தாக்குதல்களினால் ஒரு மணித்தியாலத்துக்கு 5 தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அல்லது காயப்படுகின்றனர். இவ்வாறு அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டுமாயின் நிரந்தர போர் நிறுத்தம் மேற்கொள்வதே ஒரே வழியாகும்.

இல்லையெனில் வன்னியில் அல்லற்பட்டு பரிதவிக்கும் லடசக்கணக்கான மக்களை அழிவிலிருந்து எவராலும் காப்பாற்ற முடியாது போய்விடும்.

இந்த உண்மையை உணர்ந்து உலகத் தமிழர்களும், புலம்பெயர் தமிழர்களும், அண்டைய தமிழகத்தில் உள்ள ஏழரைக் கோடி மக்களும் பேரெழுச்சியுடன் பல்வேறு போராட்டங்களையும், கவன ஈர்ப்புகளையும் தினமும் நடத்திய வண்ணமே இருக்கின்றார்கள்.

தமிழ்நாட்டில் எழுந்துள்ள ஒட்டு மொத்த தமிழர்களின் உணர்வுகளைத் தற்போதைய இந்திய மத்திய அரசு மதிக்கத் தவறி விட்டது. இது ஈழத்தமிழருக்கு ஏமாற்றத்தையும், கவலையையும் அளிக்கின்றது.

எனினும், இன்னும் காலம் கடந்து விடவில்லை. இப்போதாவது உடனடியாகப் போர்நிறுத்தம் மேற்கொள்வதற்கு ஸ்ரீலங்கா அரசுக்கு சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளும் அழுத்தம் கொடுக்கத் தவறும் பட்சத்தில் வன்னியில் தொடர்ந்து மக்கள் இறப்பதற்கும் தீக்குளிப்பதற்கும் சம்பந்தப்பட்ட நாடுகளே பொறுப்புக்கூற வேண்டும். - என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இணுவில் மக்லியோட் வைத்தியசாலையின் புதிய சத்திரசிகிச்சை நிலையம் கடந்த 8 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. நிலையத்தை தென்னிந்திய திருச்சபைப் பேராயர் வண.கலாநிதி டானியேல் எஸ்.தியாகராஜா வைபவரீதியாகத் திறந்து வைப்பதையும் அருகில் முன்னாள் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், பொது சத்திரசிகிச்சை சிரேஷ்ட நிபுணர் டாக்டர் எஸ்.சிவகுமார், மிஷன் வைத்தியசாலைகளின் காரியதரிசி [illegible] முதலாவது படத்தில் காணலாம்.
நோயாளி ஒருவரை டாக்டர் எஸ்.சிவகுமார் சோதனையிடுவதை இரண்டாவது படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் போர் நிறுத்தத்தை வலியுறுத்தி சென்னையில் மருத்துவ மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

## தமிழர்களுக்கு சிகிச்சை அளிக்கத் தயாரெனவும் அறிவிப்பு

ஈழத்தில் நடைபெறும் போரில் காயமடைந்த தமிழர்களுக்கு மருத்துவம் செய்ய தாம் தயாராக இருக்கின்றனர் என தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழத்தில் நடைபெற்று வரும் இனப் படுகொலையை தடுத்து நிறுத்த வலியுறுத்தி சென்னையில் மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் சென்னை அரசு பொது மருத்துவமனை அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தொடர் முழக்கப் போராட்டம் நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி, அரசு பல் மருத்துவக்கல்லூரி மற்றும் தாதியர், மருந்தியல் கல்லூரிகளைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டனர் என்று இணையத் தளங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இப்போராட்டத்தில் உரையாற்றிய மருத்துவக்கல்லூரி மாணவி திவ்யா கூறியவை வருமாறு:-

''இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தப்பட வேண்டும். அங்கு அமைதியான அரசியல் தீர்வை உருவாக்க இந்திய அரசு வழிவகை செய்ய வேண்டும். வைத்தியசாலைகள் மீது குண்டு வீசும் கொடும் செயலை நிறுத்த வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு மற்றும் மருத்துவ வசதிகளை மேற்கொள்வதற்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கு இசைவளிக்க வேண்டும்'' - என்று கேட்டுக் கொண்டார். போரால் படுகாயம் அடைந்த தமிழர்களுக்கு இலங்கை சென்று வைத்தியம் மேற்கொள்வதற்கு மருத்துவ மாணவர்கள் தயாராக இருக்கின்றனர் என்றும் திவ்யா கூறினார். தொடர்ந்து, ஹிந்தியில் உரையாற்றிய சென்னை மருத்துவக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டும் எம்.பி.பி.எஸ் மாணவர் குசன் சிங்குப்தா கூறியவை வருமாறு:-

''மருத்துவப் படிப்பு என்பது உயிர் காக்கும் உன்னத தொழிலுக்கானது. ஆனால் இலங்கையில் பல்லாயிரக்கணக்கான அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுகின்றனர். நாள் தோறும் காயமடைந்தும் வருகின்றனர். ஒவ்வொரு நாளும் அங்கு இரத்தம் சிந்தப்படுகிறது. இதை நாங்கள் இன ரீதியாக வேறுபடுத்த விரும்பவில்லை. மனிதர்களைக் கொல்லும் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் அதற்கு மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்'' - என்று கூறினார்.

இப்போராட்டத்தில் மருத்துவர்கள் சங்கத்தின் சார்பில் தெய்வநாயகம், இரவீந்திரநாத் மற்றும் மாணவர் கூட்டமைப்பைச் சேர்ந்த தினேஸ்குமார், சதீஸ்குமார் உள்ளிட்ட 500இற்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். வடமாநிலங்களைச் சேர்ந்த பலரும் போராட்டத்தில் கலந்து கொண்டு தமிழர்களுக்காக குரல் கொடுத்தனர் என்று மேலும் அறியமுடிகிறது.

(சி)

# நினைவு முத்துக்கள்

| மூன்றாம் ஆண்டு | எட்டாம் ஆண்டு |
|---|---|
| அன்னை மடியில் 13.08.1945 | அன்னை மடியில் 21.03.1978 |
| ஆண்டவன் அடியில் 28.02.2006 | ஆண்டவன் அடியில் 17.02.2001 |
| திதி: 25.02.2009 | திதி: 19.02.2009 |
| திருமதி சிவகுருநாதன் இலட்சுமி | செல்வன் சிவகுருநாதன் சிவரூபன் |



எமதிரு விழிகளிலும் நீங்களிருவரும் விளையாடி
எம் நெஞ்சங்களில் நீங்களிருவரும் உறவாடுவது போல்
கற்பனையுலகினில் காலத்தைச் சுழலவிட்டு- உங்கள்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இனியவுள்ளங்கள்.

இராஜ வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

என்றும் நினைவுகளுடன்:
கணவர், பிள்ளைகள்.
அப்பா, அக்கா, அண்ணா, தங்கை.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 23 ✱ 04 ✱ 1960



இறப்பு 30 ✱ 01 ✱ 2008

## திருமதி ரேவதி சிவஞானம்

திதி: அபரபக்க அட்டமி

அன்னையே!
தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை
எத்தனை காலம் எத்தனை கணம் சென்றன
பத்துமாதம் சுமந்தது ஒரு தாயடா
எம்மை வாழ்நாள் முழுவதும் சுமப்பது ஒரு தாயடா
வற்றாது எம் கண்ணீர்க்கடல்
ஓயாது எம் ஓங்காரப் புயல்
எம் பேச்சும் எம் மூச்சும் அன்னையே
உன்னை நினைத்திருக்கும்

123, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.

சி.அகிலன், சி.லக்ஸ்மன்,
சி.டினோஜன், குடும்பத்தினர்.

(82773)

# வங்கிகள் மற்றும் காப்புறுதி நிறுவனங்களில்...



தீவிபத்துக்குள்ளான மோட்டார் வாகனத்துக்கான இழப்பீட்டுத் தொகையை ஜனசக்திக் காப்புறுதிக் கம்பனியினர் வாகன உரிமையாளரான பி.சி ஜெனகனிடம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படம்.



இலங்கை வங்கியின் 'ஸ்மார்ட் இன்வெஸ்ரர்' கணக்கினை நெல்லியடிக் கிளையில் ஆரம்பிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

யாழ்.பிராந்திய முகாமையாளர் வி.எஸ்.சிவநாதன் கணக்கை ஆரம்பித்து வைத்து வாடிக்கையாளர் ஒருவருக்கு சான்றிதழ் வழங்குகின்றார். அருகில் கிளை முகாமையாளர் ஜி.சகாதேவன், வங்கி அதிகாரி சிறிகாந்தன் ஆகியோரும் காணப்படுகின்றனர்.



இலங்கை வங்கியில் 18+ கணக்கு பேணிவந்த நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவி பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியதையடுத்து வங்கியின் உயர் கல்விப் புலமைப் பரிசிலான 30 ஆயிரம் ரூபாவை நெல்லியடிக் கிளை முகாமையாளர் ஜி.சகாதேவன் மாணவியிடம் வழங்கிக் கௌரவிக்கின்றார். அருகில் வங்கி உத்தியோகத்தர் ஞம் காணப்படுகின்றனர்.



ஓய்வுபெற்ற நீர்வேலி கிராமிய வங்கி முகாமையாளர் க.முருகையாவின் சமய, சமூகப் பணியினைப் பாராட்டி அந்தப்பிரதேச மக்களால் எடுக்கப்பட்ட மதிப்பளிப்பு நிகழ்வில் அவரது பணியினைப் பாராட்டி வாழ்த்துப் பத்திரத்தை கோப்பாய் தெற்கு றோ.க.த.க.பாடசாலை அதிபர் ச.லலீசன் வழங்குவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## செல்வரத்தினம் செல்வரூபன்

பெறுபேறு: 3ஏ, மாவட்ட நிலை - 02 (நெல்லியடி ம.ம.வி.)

மின்சாரத் தடைகள், போக்குவரத்துத் தடைகள் இன்னும் பல இன்னல்களால் எனது கல்வி நடவடிக்கையை மாத்திரமல்ல, என்னைப்போன்று யாழ்.குடாநாட்டு மாணவர்கள் அனைவரையுமே பாதித்தது. குறிப்பாக வெளி மாவட்ட மாணவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு விடயங்களை அறிந்துகொள்ளக்கூடிய வசதிகள் எமக்குக் கிடைக்காமல் போயின. இத்தகைய தடைகளை எதிர்கொண்டாலும் நான் அவற்றை நினைத்துப் பெரியதாக வருத்தப்பட்டதில்லை. அப்படி வருத்தப்பட்டிருந்தால் அதனால் எனது கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு எனது இலக்கினை நான் அடையமுடியாமல் போய்விடும் என எண்ணினேன்.

அதுமட்டுமல்லாமல் எனது குடும்பமானது ஒரு படித்த பாரம்பரியம் மிக்க குடும்பமாக அமையவில்லை. எனது தந்தை ஒரு விவசாயி. அம்மா வீட்டுப்பெண். இவ்வாறாக எனது பெற் றோர்கள் உயர்ந்த நிலையில் இல்லாவிட்டாலும் என்னைப் பலரும் பாராட்டக்கூடிய ஒரு உயர் நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்று அவர்கள் கொடுத்த ஒத்துழைப்பு, அரவணைப்பு என்பவற்றினால் தான் என்னால் இந்த நிலைக்கு வரமுடிந்தது. இத்தருணத்தில் எனது அம்மா, அப்பா ஆகியோரைப் பெற்றோராகக் கொடுத்த இறைவனுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது பெற்றோர்களின் அரவணைப்பினாலேயே நான் எதிர்கொண்ட சவால்களை இலகுவாக எதிர்கொள்ளமுடிந்தது.

எனது கல்விச் செயற்பாட்டில் எவருமே ''படி படி'' என்று நிர்ப்பந்திக்கவில்லை. அதற்கான அவசியமும் எனக்கு ஏற்படவில்லை. எனக்குக் கற்பித்த அனைத்து ஆசிரியர்களுமே மிகவும் திறமை வாய்ந்தவர்கள். என்மீது மிகுந்த அக்கறை கொண்டவர்களாகக் காணப்பட்டு எனக்குப் பல வழிகளில் உறுதுணையாகச் செயற்பட்டனர்.

இதுமட்டுமில்லாமல் நான் கல்வி கற்ற பாடசாலைச் சமூகமும் எனது செயற்பாடுகளுக்குச் சிறந்த களம் அமைத்துக் கொடுத்தது. எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் ஆகிய அனைவரும் எனது முன்னேற்றத்திற்கு உறுதுணையாகக் காணப்பட்டனர். மேலும் பாடசாலையில் காணப்படும் நூலகமானது எனது அறிவை விருத்திச் செய்வதற்கு மிகவும் உதவியாக இருந்தது.

## யோகினி அம்பலவாணர்

பெறுபேறு: 2ஏபி (வட்டு.மத்திய கல்லூரி)



நான் எனது கல்வியை இக்கல்லூரியிலே தொடர்ந்து பயின்று வருகிறேன். என்னுடைய பெறுபேற்றிற்குக் காரணம் எமது அதிபர், ஆசிரியர்களினது அன்பான வழிகாட்டலும், அவர்களின் ஊக்குவிப்பும், அவர்கள் கூறிய அறிவுரைக ளுமே ஆகும்.

எனது சுயவிருப்பத்திற்கிணங்கவும் எனது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் பரீட்சை என்பதாலும் உயர்தரத்தில் கலைப்பிரிவைத் தெரிவு செய்து தமிழ், புவியியல், பொருளியல் ஆகிய பாடங்களை மிகுந்த கவனத்துடன் கற்று வந்தேன்.

இதற்கு குடும்பத்தினரும், உறவினர்களும், நண்பர்களும் ஆக்கமும் ஊக்கமும் தந்து என்னை வழிநடத்தினார்கள். எப்படியாவது இந்தப் பரீட்சையில் 3ஏ பெற்றுப் பல்கலைக்கழகத்திற்குள் நுழையவேண்டும் என்ற பேரவா என்னுள் இருந்தது. நம்பிக்கையிருந்தாலும் மனதிற்குள்ளே ஒரு பயம் இருந்தது. ஆனாலும் 2ஏபி பெறுபேறு பெற்று மாவட்ட மட்டத்தில் 58ஆவது நிலையில் இருப்பதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

எதிர்காலத்தில் சிறந்த ஒரு விரிவுரையாளர் ஆகவேண்டும் என்பது என் இலட்சியக்கனவு.



## மோகனப்பிரியா கோவிந்தசாமி

பெறுபேறு: 2ஏபி (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

நான் தரம் 1ஐ வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பின் தரம் 2இல் இருந்து உயர்தரம் வரை யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியிலும் கல்வி பயின்றேன். நான் உயர்தரத்தில் கலைப்பிரிவில் தமிழ், புவியியல், அரசியல் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

நான் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் அறிவுரை, ஆலோசனைகளின்படி எனது பாடங்களைக் கற்றேன். நான் பரீட்சைக் காலங்களில் கஷ்டப்பட்டுப் படித்தேன். புவியியல் செய்முறையில் அதிகமான பயிற்சிகளைச் செய்து பயிற்சி எடுத்தேன். இவ்வாறு நான் படிப்பதற்கு காரணமாய் இருந்த பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தனியார் கல்வி நிறுவன ஆசான்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அனைத்துக்கும் மேலாக என் கல்விக்காக உறுதுணை புரிந்தவர்கள் அப்பா, அம்மா, சகோதரிகள்.

எமது அதிபர் மற்றும் உயர்தர ஆசிரியர்கள் வழங்கிய அறிவுரைகள் ஏராளம். அதனைப் பின்பற்றி நான் எனது இலட்சியத்தை அடைவேன். எனது பெற்றோர்களின் ஆசைப்படி நான் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவாகியமையையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். எல்லாம் வல்ல பிள்ளையாரின் ஆசீர்வாதத்தாலேயே இப்பெறுபேறு கிடைத்தது என நம்புகிறேன்.

## தாரணி தியாகராஜா

பெறுபேறு: 3பி (வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி)



நான் தரம் 1முதல் உயர்தரம் வரை யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலே கல்வி பயின்றேன். எனது தந்தையார் கிராம உத்தியோகத்தராகக் கடமை ஆற்றி வருகிறார். நான் சிறுவயது முதல் கல்வியில் அதிக ஆர்வம் காட்டி பெற்றோரின் ஆதரவுடனும் ஆசிரியர்களின் துணையுடனும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின் தொடர்ந்து கல்வியை விடாமுயற்சியுடன் கற்று க.பொ.த. [சா/த] பரீட்சையில் 10ஏ ஐப் பெற்றுப் பாடசாலைக்கும், எனது பெற்றோருக்கும் பெருமை சேர்த்துக் கொடுத்தேன். நான் சிறுவயது முதல் கணிதத் துறையில் அதிக ஆர்வம் காட்டியதாலும் எனது விருப்பத்திற்கிணங்கவும் ஆசிரியர்களின் ஆலோசனைக்கு இணங்கவும் உயர்தரத்தில் கணிதப் பிரிவைத் தேர்ந்தெடுத்தேன். நான் பல்கலைக்கழக அனுமதியைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் அதிக அக்கறை எடுத்து எனது கல்வியைத் தொடர்ந்தேன். உயர்தரத்தில் எனக்கு எழும் சந்தேகங்களைப் பாட ஆசிரியர்கள், நண்பிகள் தீர்த்து உதவினர். நான் எனது அக்காவின் வழிகாட்டலில் கல்வி பயின்றேன். எனது பெற்றோர் நான் படிப்பதற்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தித்தந்தனர். நாம் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், கற்பித்த அனைத்துஆசிரியர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## விஜயகாந்தன் வர்சிகன்

பெறுபேறு: 2ஏபி (கொக்குவில் இந்துக் கல்லூரி)

ஆரம்பக்கல்வியை மல்லாகம் மகா வித்தியாலயத்திலும், உயர்கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றேன். கணிதத்துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

பரீட்சை எழுதி முடித்ததும் சிறப்பான பெறுபேறு வரும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. நினைத்த இலக்கினை அடைந்துவிட்டேன் என நினைக்கும்போது ஆனந்தமடைந்தேன்.

கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோர்கள் எனப் பலரும் ஊக்கமளித்தனர். சுயமுயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால் எதிலும் சாதிக்கமுடியும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது.

## சூ.றொஷேன் சத்தியவாணி

பெறுபேறு: 3ஏ (நெல்லியடி ம.ம.வி)



பரீட்சைக்குச் சில மாதங்களுக்கு முன் பாடசாலையில் விடுமுறை கொடுத்துவிட்டனர். அந்தக் காலப்பகுதியில் வீட்டிலிருந்தே பாடங்களைப் படிக்கவேண்டியிருந்தது. அப்போது பாடம் தொடர்பாகப் பல சந்தேகங்கள் வந்தன. பரீட்சைக்கு கொஞ்சக்காலம் மாத்திரம் தான் இருந்தது. இதற்கிடையில் சந்தேகங்களை எப்படித் தீர்ப்பது என்ற சிக்கல் உருவானது. அப்போது ஆசிரியர்களை அணுகி எனது சந்தேகங் களைத் தீர்த்துக்கொண்டேன்.

எனக்கு மிகவும் பிடித்த துறை என்பதால் கலைத்துறையைத் தேர்வு செய்தேன். அதனால்தான் நல்ல பெறுபேற்றையும் நான் அடையமுடிந்தது.

ஒரு பாடம் தொடர்பாக விளக்கம் போதாத நிலையில் நூலகத்தில் உள்ள நூல்களை வாசித்து தெரியாத விடயங்களை அறிந்துகொள்வேன். பாடசாலையிலோ அல்லது விசேட வகுப்புகளிலோ படித்த பாடங்களை மீட்டுப் பார்ப்பேன். நாம் படித்த பாடங்களை மீண்டும் ஒருமுறை எழுதியோ அல்லது விளக்கமாக வாசித்தோ பார்ப்பதன் மூலம் அவற்றை ஞாபகத்தில் வைத்திருக்கமுடியும்.

என்னுடைய சிறந்த பெறுபேற்றுக்கு மூலகாரணிகளாக விளங்கிய பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், தனியார் நிறுவன ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரை என்றென்றும் நன்றியுடன் நினைத்துக்கொள்வேன்.



## இராஜேந்திரன் கிஜாந்தி

பெறுபேறு: 2ஏபி (வேலணை மத்திய கல்லூரி)

வேலணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆரம்பக்கல்வியைத் தொடங்கி அதன்பின் வேலணை மத்திய கல்லூரியில் சேர்ந்துகொண்டேன். எனது தந்தையார் வெதுப்பகம் வைத்துள்ளார். நாங்கள் ஐந்து பெண்கள். ஒரு சகோதரரும் இருக்கிறார். எனது சகோதரர்களை ஒரு நல்ல நிலைக்குக் கொண்டுவரவேண்டும் என்றால் அவர்களுக்கு முன்னோடியாக இருந்து வழிகாட்டவேண்டியது எனது பொறுப்பு. என்னுடைய கல்வி உயர்ந்த நிலையில் இருந்தால் மட்டுமே அவர்களும் என்னைப் பின்பற்றிக் கல்வியில் ஆர்வம் காட்டமுடியும். பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்பதில் என்னுடன் பெற்றோர்களும் நிரம்பவே ஆசைகொண்டிருந்தார்கள். அதனால் எனது கல்விக்கு முடிந்த உதவிகளைச் செய்து கொண்டிருந்தார்கள். எனக்கு வரலாறு படிப்பதில் ஆர்வம் அதிகம். அதனால் தமிழ், வரலாறு, நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன். எங்கள் கல்லூரி அதிபர் அருணகிரிநாதன் உட்பட அனைத்து ஆசிரியர்களும் முழு மனதுடன் தேவையான உதவிகளை வழங்கினார்கள். பெற்றோரும், ஆசிரியர்களும் காட்டிய கரிசனையும், நண்பர்களின் ஆதரவும், நான் கொண்டிருந்த இறை நம்பிக்கையும் எனக்கு ஒரு நல்ல பெறுபேறு கிடைக்கக் காரணமாக இருந்தது. ஒரு நல்ல ஆசிரியராக எதிர்காலத்தில் எனது கிராமத்திற்கும் மக்களுக்கும் பணியாற்றவேண்டும் என்று விரும்புகிறேன்.

சந்திப்பும், படங்களும்:
ஓலண்யன், லக்ஸ்மன், சரவணன், கணேசமூர்த்தி, சந்திரகுமார். 19

## கலைவாணி இராமச்சந்திரன்

பெறுபேறு: 2ஏபி (வடஇந்து மகளிர் கல்லூரி)



நான் தரம் 1முதல் உயர்தரம் வரை எனது கல்வியினை யா/வட இந்து மகளிர் கல்லூரியிலேயே கற்றேன். எனது தந்தை விவசாயம் செய்பவர். நான் சிறுவயதில் இருந்தே கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினேன். ஆயினும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 3 புள்ளிகளினால் நான் சித்தி எய்தத் தவறிவிட்டேன். அதற்காக நான் மனம் தளரவில்லை. 'விடாமுயற்சியே பயன் தரும்' என்பதற்கேற்ப கல்வி கற்று க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் நல்ல பேறுபேற்றை எடுத்துச் சித்தியடைந்தேன். பின்னர் உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றைப் பெறும் நோக்குடன் கலைப்பிரிவைத் தேர்வுசெய்து கல்வி பயின்றேன். உயர்தரத்தில் நான் தமிழ், புவியியில், இந்துநாகரிகம் ஆகிய பாடங்களைத் தேர்வு செய்திருந்தேன். நான் உயர்தரப் பரீட்சையில் சித்தி எய்தி பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டபோது மட்டில்லா மகிழ்ச்சியடைந்தேன். இப்பரீட்சையில் நான் சித்தி பெறுவதற்கு ஊக்கமும், ஆக்கமும் தந்த எனது பாடசாலை அதிபர், பாட ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்வி நிறுவன ஆசிரியர்கள், நண்பிகள், பெற்றோர், சகோதரர்கள் அனைவரையும் என்றும் நினை வில் வைத்திருப்பேன்.



## நகுலேஸ்வரன் வேணுகோபன்

பெறுபேறு: ஏ2பி (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி)

எனது சொந்த இடம் கைதடி - நாவற்குழி தெற்கு. நான் எனது ஆரம்பக்கல்வியைக் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையில் கற்றுப் பின் இடம்பெயர்வு காரணமாக வடலியடைப்பில் குடியமர்ந்து யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் தொடர்ந்து கல்வியைக் கற்றுவந்தேன். உயர்தரப் பரீட்சை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை போலல்லாது எமது எதிர்காலத்தை நிர்ணயிக்கின்ற பரீட்சை என்பதால் மிகுந்த கவனத்துடன் கலைப்பிரிவைத் தெரிவுசெய்து கற்றேன். கலைப்பிரிவில் கற்கும் மாணவர்களுக்கிடையே மிகுந்தபோட்டி காணப்பட்டது. இவற்றுக்கு மத்தியிலும் நல்ல பெறுபேற்றைப் பெற்ற எனது அக்கா போல நானும் ஒரு ஆசிரியராக வரவேண்டும் என்ற அவாவுடன் கற்றேன். அதனால் சிறந்த பெறுபேற்றையும் பெற்றேன்.

நான் இப்பெறுபேற்றைப் பெற பெற்றோர்கள் மற்றும் சகோதரர்களும் நல்ல ஊக்கம் தந்தார்கள். இதைவிட எமது அதிபர், வகுப்பாசிரியர் மற்றும் சக ஆசிரியர்களையும் நான் என்றும் மறக்கமாட்டேன்.

எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்த ஆசிரியர்கள் போல் நானும் ஆசிரியனாக வந்து என் போன்ற பலருக்குக் கல்வி பயிற்றுவித்து சிறந்தவர்களாக உருவாக்குவதே எனது விருப்பம்.

## கங்கா சண்முகசுந்தரம்

பெறுபேறு: 2ஏபி (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)



பெற்றோர், அதிபர் மற்றும் ஆசிரியர்கள் என்மீது கொண்ட அதீத அக்கறையே நான் இப்பெறுபேற்றினைப் பெறுதவதற்கு உதவியாக இருந்தது. நான் எனது ஆரம்பக்கல்வியைச் சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயத்திலும் உயர்கல்வியை சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திலும் கற்றேன். வர்த்தகப் பிரிவில் ஆரம்பத்தில் அதிக விருப்பு இருந்த போதிலும் கலைத்துறையைத் தெரிவுசெய்தேன். புவியியல், தமிழ் மற்றும் இந்துசமயம் ஆகிய மூன்று பாடங்களிற்கும் சமவளவான நேரத்தினை ஒதுக்கிக் கற்றேன். புவியியல் பாடத்தை அதிக விருப்பத்துடன் கற்றேன். சைவபரிபாலன சபையால் நடத்தப்பட்ட அகில இலங்கை சைவநெறித் தேர்வில் இருமுறை முதலாம் பரிசினைப் பெற்றுத் தங்கப்பதக்கத்தினையும் பெற்றுக்கொண்டேன். இதனால் இந்துசமய பாடத்தினை மிகவும் சுலமாகக் கற்க முடிந்தது. எமது மொழி என்ற ரீதியில் தமிழ்ப் பாடத்திலும் எனக்கு அதிக பற்று இருந்தது. 2007ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் முதலாவது முறையாகத் தோற்றி ஏபிசி என்ற பெறுபேற்றைப் பெற்றுப் பல்கலைக்கழக அனுமதியினை மேலதிக அனுமதியின் பிரகாரம் பெற்றுக்கொண்டு எனது பதிவினை உறுதிப்படுத்தினேன். முதல் தடவையில் எதிர்பார்த்திருந்த பெறுபேற்றினை 2ஆம் தடவையிலேயே பெறமுடிந்ததுடன், மாவட்ட நிலையிலும் முன்னணி நிலையினைப் பெற்றுக்கொண்டேன். இருமுறையும் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துவிட்டதே என்ற சந்தோஷம் இருந்தாலும் எனக்கு விரும்பிய பாடத்தினைத் தெரிவுசெய்து கற்கமுடியாதுள்ளமை எனக்கு மிகுந்த மனவிரக்தியை ஏற்படுத்தியுள்ளது. எதிர்காலத்தில் ஒரு விரிவுரையாளராக வரவேண்டுமென்பதே எனது இலட்சியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகப் பிரசித்திபெற்ற பல்கலைக்கழக பட்டங்களுக்கு மகோன்னத நுழைவாயில்

## 'மில்லேனியம் கொன்செப்ற்ஸ்' நிறுவனம்

விளம்பர விவரணம்

வெளிநாடுகளில் உயர்கல்வி வாய்ப்புகளை அயராது தேடும் உங்கள் முன் இரத்தினச் சுருக்கமான தகவல் களஞ்சியத்துடன் தயார்நிலையில் நிற்கிறது Millenium Concepts நிறுவனம். தலைசிறந்த உயர் கல்வி நிறுவனங்களில் இணைவதற்கு நீங்களே எம்மை நெருங்கி வரவேண்டும்.

டிப்ளோமா சான்றிதழ்கள் பெற்றவர்கள், ஜி.சீ.ஈ.சா/தரம் மற்றும் உயர்தரம் பெற்றவர்கள் விடயத்தில் வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. தொழில்வாய்ப்புச் சந்தையில் உங்கள் தகுதிகளை அதிகரித்துக் கொள்ளுதல் வேண்டும். ஆனால் பலர் ஒரு பட்டப்படிப்பை தேர்ந்தெடுத்து முன்னோக்கி நடைபோடுவதில் தடுமாற்றங்களுடன் காணப்படுகின்றனர். குறிப்பாகச் சாதாரண தரத்தை அல்லது உயர்தரத்தை முடித்துக்கொண்டவர்கள் மத்தியில் சாதாரணமாக இத் தடுமாற்றம் காணப்படுகிறது. மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்வதற்கு வெவ்வேறு துறைகள் பற்றிச் சிந்திக்கின்றனர் அல்லது எவ்விடத்தில் தொடங்கலாம் என்று இன்னுமே சிந்திப்பவர்களாக இருக்கின்றனர்.

அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்னும் அந்தஸ்தை எமது நாடு எட்டி அடைந்து கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகங்களில் படித்துப் பட்டம் பெற்றவர்களுக்கு உயர்வான தொழில்வாய்ப்புக்கள் காத்திருக்கின்றன. வெளிநாடுகளின் கல்வி நிறுவனங்களில் அதிக காலத்தைச் செலவு செய்து கற்ற மாணவர்கள் இதன் காரணமாகவே அதிகம் அனுபவம், அதிக தனித்துவம், அதிகளவு அறிவார்ந்த தன்மை ஆகியவற்றைக் கொண்டவர்களாயுள்ளனர். வெளிநாடுகளில் கற்கும் மாணவர்கள் இருமடங்கு முதிர்ச்சிநிலை மட்டுமல்ல இரட்டைப் பட்டங்களையும் பெறும் வல்லமையும் வாய்ப்பும் பெற்றவர்கள்.

Millenium Concepts நிறுவனம் கல்வித்துறை ஆலோசகர்களின் சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளது. தகவல்கள் பலவற்றினைத் தேடிக்கொண்டும், தீர்மானங்களை நாடிக்கொண்டும் ஆவலுடன் எம்மை நோக்கிவரும் மாணவர்களாகிய உங்களுக்கு அவர்கள் நுட்பமான கற்கைநெறி பற்றிய தகவல்களையும், வெளிநாட்டில் உங்கள் வாழ்க்கை எவ்வாறு அமையப் போகிறது என்பது பற்றிய தகவல்களையும், வழங்கவுள்ளார்கள்.

இவ்வாறான ஆலோசனைகளுள் பல்வேறு கல்வித்துறை வாய்ப்புக்கள், அவற்றைத் தரும் உலகின் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்கள், விசா பெறுவதற்கான ஏற்பாடுகள் மற்றும் உங்கள் எதிர்கால கனவுகளை நிறை வேற்றும் குறிப்பான தேவைகள் பற்றிய பலவும் அடங்கும்.

மில்லேனியம் கொண்செப்றஸ் நிறுவனம் அவுஸ்திரேலியா, பிரிட்டன், மலேசியா, கனடா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் பிரசித்திபெற்ற பல்கலைக்கழகங்களுடன் கூட்டமைப்பு அமைந்துள்ளது.

சர்வதேச பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்குப் பொதுவாக ஒருவித தயக்கம், சிறிது பதற்றம் இனம்புரியாத சிரமம் போன்றவை இருக்கலாம். பல்கலைக்கழகத்தை, பாடநெறியைத் தெரிவுசெய்வது, நேர்முகப் பரீட்சையை எதிர்கொள்வது, தமக்குள்ள கல்வித்தகைமைகள், தேர்ச்சிகள் போதியனவா என்னும் நிலைப்பாடுகள் இருக்கலாம்.

இவற்றைத் தீர்த்து வைக்கும் வகையிலான தகவல்கள், வழிக்காட்டல்கள், ஆலோசனைகள் என்பவையாவற்றையும் ''மில்லேனியம் கொண்செப்றஸ்'' நிறுவனம் வழங்குகிறது. நேரடியாகவும், கடித மூலமும், தொலைபேசி இல.0112552765 மற்றும் மின்னஞ்சல் மூலமும், தொடர்பு கொண்டு வாய்ப்புக்கு முந்துங்கள்! ✱✱✱

## தபால் திணைக்களம் நடமாடும் சேவையை மானிப்பாயில் நடத்தியது

நவாலி, பெப். 17

யாழ்ப்பாணம் தபால் திணைக்களத்தினர் முதற் தடவையாக மானிப்பாய் மகளிர் கல்லூரியில் வைத்து அடையாள அட்டை வழங்கும் நடமாடும் சேவையொன்றைக் கடந்த வியாழக் கிழமை பாடசாலை அதிபர் சூரியகுமாரி தலைமையில் நடத்தினர்.

இதில் சண்டிலிப்பாய் கோட்டத்தைக் சேர்ந்த மானிப்பாய் இந்துக் கல்லூரி, சுதுமலை சிம்மியபாரதி, சென்ற் ஆன்ஸ் பாடசாலை, சுதுமலை வடக்கு த.க.பாடசாலை, நவாலி மகா வித்தியாலயம், சுதுமலை, அ.மி.த.க.பாடசாலையைச் சேர்ந்த 600 மாணவர் தமது அஞ்சல் அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களின் இச் சேவையினை மாணவர்களின் பெற்றோர்கள் பெரிதும் பாராட்டியுள்ளனர். (202-100)

## TOSHIBA காட்சியறை யாழ்ப்பாணத்தில்




ஜப்பான் நாட்டின் உலகத்தரமிக்க தயாரிப்புக்களான TOSHIBA அலுவலக உபகரணங்களுக்கான காட்சியறையும் அதனுடன் இணைந்த சேவை நிலையம் அண்மையில் யாழ். மாவட்டத்தில் இல. 149, கஸ்தூரியார் வீதியில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மடிக்கணனி (Laptop), படிப்பிரதியாக்க இயந்திரம் (Photo Copy), நிழல் தெறி கருவி (Multi Media Projector), தொலைநகல் இயந்திரம் (Fax Machine) என்பவற்றின் விற்பனையும் அதற்குப்பிந்திய சேவையும் இச்சேவை நிலையத்தால் வழங்கப்படும். பல வருடங்களாக இவ்வுற்பத்திப் பொருள்களிற்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளில் மக்கள் எதிர் நோக்கிய இடர்களை உணர்ந்து கணனித்துறையில் தன்னிகரற்ற சேவையை வழங்கிவரும் STP கணனி நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்நிலையம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் கூட்டுறவுத்துறையில் புரட்சிகரமான மாற்றங்களை மிகக் குறுகிய காலத்தில் ஏற்படுத்திவரும் யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கத் தலைவரும் ஆலோசக எந்திரியுமான ப. கிரிதரன் இக்காட்சியறையை ஆரம் பித்து வைத்ததுடன் முதல் வர்த்தகத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

John Keels Office Automation நிறுவனத்தின் விற்பனை, சேவை முகவர்களான STP கணனி நிறுவனம் ஏற்கனவே சிறந்த கணனிசார் சேவைகளை வழங்குவதில் யாழ்.மாவட்டத்தில் பலராலும் நம்பிக்கையுடன் நோக்கப்படும் நிறுவனமாகும். பல அரச, தனியார் நிறுவனங்களிற்கு ஏற்கனவே சேவைகளை வழங்கிவரும் இவர்கள் இப்போது மேலதிகமாக இச்சேவையை வழங்கிவருவது அனைவருக்கும் ஆறுதலளிக்கும் ஓர் நடவடிக்கையாகும். சிறந்த தொழினுட்ப பயிற்சி பெற்ற தொழினுட்பவியலாளர்களின் சேவையுடன் உதிரிப்பாகங்களையும் இங்கு வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்று இதன் நிர்வாகி தெரிவித்தார்.

## சுயதொழில் உதவி

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்திற்குச் சுயதொழில் நிவாரண உதவிகோரி விண்ணப்பித்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

நாளை புதன்கிழமை தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை ஆகியவற்றுடன் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொடுப்பனவுக்குத் தெரிவுசெய்யப்பட்டோரின் விவரம் வருமாறு:

பா.இந்து (பெரியமாவடி, சாவகச்சேரி), இ.இராசமலர் (கொடிகாமம் வடக்கு), சி.விஜயா (மீசாலை மேற்கு), ஜெ.யசிந்தா (கச்சாய் வீதி, சாவகச்சேரி), ச.இராசரத்தினம் (உசன்), பொ.சுபத்திரை (நாவற்குழி தெற்கு), பொ.நல்லசேகரம்பிள்ளை (மட்டுவில் தெற்கு), இ.எமிலிறோஸ் (கச்சாய் வீதி, சாவகச்சேரி). (202-207)

## அனலைதீவு விவசாயிகள் இம்முறை தொழிலில் ஆர்வம் காட்டவில்லை

யாழ்ப்பாணம்,பெப்.17

அனலைதீவுப் பகுதியில் இம்முறை விவசாய நடவடிக்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் ஏற்பட்ட 'நிஷா' புயல் மற்றும் வெள்ள அனர்த்தத்தின்போது இப்பிரதேசத்தில் விவசாயச் செய்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

புகையிலை மற்றும் மிளகாய் செய்கையில் இப்பகுதி விவசாயிகள் முந்தைய போகங்களில் அதிக ஆர்வத்தைக் காட்டி வந்தனர். வெள்ள அனர்த்தத்தின் பின்னர் இந்தப் பயிர்ச்செய்கையில் அதிக நாட்டம் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-224)

## மனிதாபிமான நடவடிக்கைக்கு இலங்கைக்கு பெரும் நிதி தேவை

### ஐ.நா. அறிவிப்பு

கொழும்பு, பெப். 17

இலங்கையில் மனிதாபிமான நடவடிக்கைகளை முன்னெடுக்க சுமார் 15 கோடியே 54 லட்சம் அமெரிக்க டொலர்கள் தேவைப்படுகின்றன என ஐக்கிய நாடுகள் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையிலான யுத்தம் காரணமாக சுமார் 4 லட்சத்து 33 ஆயிரம் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் 3 லட்சத்து 13 ஆயிரம் பேர் இடம்பெயர்ந்த மக்கள் எனவும், 20 ஆயிரம் பேர் மீள் குடியேறியவர்கள் எனவும், ஒரு லட்சம் பேர் யுத்த பிரதேசத்தில் பாதிக்கப்பட்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளுடன் இணைந்து செயற்படும் 43 தொண்டு நிறுவனங்கள் முன்மொழிந்த 103 திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காகவே இந்நிதி தேவைப்படுகிறது எனத் தெரிவிக்கப் படுகிறது.

முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பொதுமக்கள் அடிப்படை வசதிகளின்றி பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் எனவும் குறிப்பிடப்படுகிறது. (சி)



கரித்தாஸ்-கியூடெக் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட அல்வாய் மனோகரா முன்பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்ட படங்கள். முன்பள்ளி மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

கரித்தாஸ்-கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்தந்தை சி.ஜி.ஜெயக்குமார் கட்டடத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும், கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் பெயர்ப் பலகையைத் திரை நீக்கம் செய்து வைப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம்.

(படங்கள்:சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கணை நன்னீர் கிணற்றிலிருந்து வலி.மேற்கு மக்களுக்குக் குடிதண்ணீர்

யாழ்ப்பாணம்,பெப்.17

நீர் மட்டம் குறையாத பொக்கணை நன்னீர் கிணற்றிலிருந்து வலிகாமம் மேற்கு பிரதேச மக்களுக்குக் குழாய் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கும் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கென நிலத்தடிக் குழாய்களும் விரைவில் அமைக்கப்படவுள்ளன என தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நீர்மட்டம் குறையாத பொக்கணை நன்னீர் கிணற்றைச் சுற்றி பாதுகாப்புக் கட்டடம் அமைக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினரின் ஏற்பாட்டில் இக்கிணறு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது.

இந்த நீர் மட்டம் குறையாத நன்னீர் கிணற்றில் இருந்து விரைவில் குழாய் மூலம் வலிகாமம் மேற்கு பகுதி மக்களுக்குக் குடிதண்ணீர் விநியோகிக்கப்படவுள்ளது.

(202-224)

# திருநெல்வேலியில் சுடப்பட்டவரில் மற்றவர் அச்சுவேலி வாசி

யாழ்ப்பாணம்,பெப்.17

திருநெல்வேலியில் கடந்த வியாழக்கிழமை படையினரின் சூட்டுக்கு இலக்காகி மரணமான இருவரின் இரண்டாமவரும் அடையாளம் காணப்பட்டார்.

அச்சுவேலியைச் சேர்ந்த சிவலிங்கம் வைகுந்தவாசன் (வயது 26) என்ற இளைஞனின் சடலம் என அவரது உறவினர்கள் அடையாளம் காட்டினர்.

இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மற்றைய இளைஞன் நயினாதீவைச் சேர்ந்தவர் என ஏற்கனவே அடையாளம் காணப்பட்டிருந்தார்.

(அ-1)

# யாழ்.போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சைக்குத் தனியான கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.17

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இருதய சிகிச்சைக்கெனத் தனியான கட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இந்த இருதய சிகிச்சை நிலையக் கட்டடம் அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடாக புதிய கட்டட அடிக்கல் நடும் பணி அண்மையில் இடம்பெற்றது.

மாடிக் கட்டடமாக நிர்மாணிக்கப்படும் இந்த சிகிச்சை நிலையத்தால் இருதய நோயாளர்கள் பெரிதும் நன்மையடைவார்கள் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

(202-224)



யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பாலர் பாடசாலைச் சிறார்களுக்கென போரூட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சத்துணவுப் பொருள்கள் யாழ்.மாநகர சபையால் முன்பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கப்பட்ட போது எடுத்த படம்.

படம்: லக்ஸ்மன்

# சட்ட விரோத மின்னிணைப்பு பெற்றவர்கள் பிடிபட்டனர்

யாழ்ப்பாணம்,பெப்.17

மந்துவில் பகுதியில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற பலர் பிடிபட்டனர்.

பொலிஸாரும், இலங்கை மின்சார சபை சாவகச்சேரிப் பிரிவினரும் இணைந்து திடீர்ப் பரிசோதனைகளை கடந்த வெள்ளிக்கிழமை நடத்தினர்.

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்றவர்களை கைது செய்வதுடன் பயன்படுத்திய மின்சார வயர்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

(202-207)

# தென்மராட்சி கிழக்கு முதியோருக்கு உதவி

யாழ்ப்பாணம்,பெப்.17

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தைச் சேர்ந்த 250 முதியோர்களுக்கு உணவுப் பண்டம் அல்லாத பொருள்கள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன.

சாந்தீகம் நிறுவனத்தினரால் அரிக்கன் விளக்கு, சுடுதண்ணீர் போத்தல், வாளி உட்பட பொருள்கள் கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் பணிமனையில் வைத்து வயோதிபர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(202-207)

# பாடசாலைகளின் செயற்பாடுகள் திறம்பட பெற்றோர், சமூகத்தின் பங்களிப்பு அவசியம்

## தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் கருத்து

வேலணை,பெப்.17

பாடசாலைகளின் செயற்பாடுகள் திறம்பட வேண்டும் எனில் பெற்றோரினதும் சமூகத்தினதும் பங்களிப்பு அவசியம் தேவை என தீவக வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லஸ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

சரவணை சின்னமடு றோ.க.வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி அண்மையில் அதிபர் க.சண்முகப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இந்த விளையாட்டு நிகழ்விலே நடைபெறுகின்ற செயற்பாடுகளில் பெற்றோர்கள் அனைவரும் இணைந்து தமது பங்களிப்பை முழுமையாகச் செய்து கொண்டிருப்பதைப் பார்க்கும்போது மகிழ்வாக உள்ளது.

இதேபோல் பாடசாலைகளின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் பெற்றோர்களின் பங்களிப்பும் இன்றியமையாததொன்றாக விளங்க வேண்டும்.

பாடசாலையின் கற்றல் செயற்பாடுகளும் இணைப்பாட விதான செயற்பாடுகளும் மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்குப் பயன்படுகின்றன. அந்த வகையில் மாணவர்களின் கல்வியில் பெற்றோரின் பங்களிப்பானது ஆசிரியர்கள், அதிபர்களின் பொறுப்புகளை அதிகரித்து கற்றலில் போதியளவு உயர்வு மட்டத்தை அடையும் - என்றார். (202-09-267)

# மரக்கறிகளின் விலைகள் வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,பெப்.17

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்துள்ளன.

கடந்த நவம்பர் மாத இறுதியில் குடாநாட்டில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தினால் மரக்கறிப் பயிர்கள் அனைத்தும் அழிவடைந்தன.

வெள்ளத்தினால் அழிவடைந்த பயிர்களுக்கு ஈடாக விவசாயிகள் புதிதாக மரக்கறிப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். இந்த வேளையில் மரக்கறி வகைகளில் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

கடந்த இரண்டு நாள்களாக பெரிதும் வீழ்ச்சியடைந்து காணப்படுகின்றது.

குறிப்பாக திருநெல்வேலி சந்தையில் ஒரு கிலோ கத்தரிக்காய் 150 ரூபாவாகவும், வெண்டிக்காய் கிலோ 30 ரூபாவாகவும், பயிற்றங்காய் கிலோ 40 ரூபாவாகவும், போஞ்சி கிலோ 20 ரூபாவாகவும், தக்காளிப்பழம் கிலோ 150 ரூபாவாகவும்

பாகற்காய் கிலோ 60 ரூபாவாகவும் பச்சைமிளகாய் கிலோ ,140 ரூபாவாவும், வெங்காயம் கிலோ 30 ரூபாவாகவும் உருளைக்கிழங்கு கிலோ 90 ரூபாவாகவும் விற்கப்படுகின்றன.

(202-224)

# நலிவுற்ற குடும்பத்தினருக்கான நிவாரணம் ஜனவரி மாதத்துக்கான விநியோகம் ஆரம்பம்


யாழ்ப்பாணம்,பெப்.17

நலிவுற்ற குடும்பத்தினருக்கான ஜனவரி மாதத்திற்குரிய இலவச உலர் உணவு நிவாரணம் கடந்த 14ஆம் திகதி தொடக்கம் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வரும் இந்த உலர் உணவுப் பொருள்கள் விநியோகத்தில் அரிசி, மா, சீனி, பருப்பு, சமையல் எண்ணெய் போன்றவை அடங்குகின்றன. குடும்ப உறுப்பினர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வரும் நிவாரணப் பொருள்களின் விவரம் வருமாறு:

| | அங்கத்தவர் எண்ணிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| பொருள் | 1 அங் | 2 அங் | 3 அங் | 4 அங் | 5 அங் அதற்கு மேல் |
| அரிசி | 2.800 | 5.600 | 8.400 | 11.200 | 14.000 |
| மா | 8.400 | 16.800 | 25.200 | 33.600 | 42.000 |
| பருப்பு | 1.680 | 3.360 | 5.040 | 6.720 | 8.400 |
| எண்ணெய் | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |
| சீனி | 0.560 | 1.120 | 1.680 | 2.240 | 2.800 |
| மொத்தம் | 14.000 | 28.000 | 42.000 | 56.000 | 70.000 |

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்



தென்மராட்சி கிழக்கு (கொடிகாமம்) பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் ஜி.சீ.ஈ. சாதாரணதரம், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் ஆகிய பரீட்சைகளில் சித்திபெற்ற மாணவர்களை அண்மையில் கௌரவித்தனர்.

சாதாரண தரப் பரீட்சையில் (2007) பத்து பாடங்களில் அதிசிறப்பு ('ஏ') சித்தி பெற்ற கொடிகாமம் திருநாவுக்கரவு ம.வி. மாணவன் அம்பிகாபதி கோகுலனுக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் பரிசில் வழங்குவதையும் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் (2008) தமிழ் மொழியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் ம.வி.மாணவன் தர்மலிங்கம் பாசுபதனுக்கு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டதாரி ஆசிரியர் நியமனம் 26, 27 இல் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,பெப்.17

தேசிய பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர் நிய மனத்துக்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 26 ஆம், 27 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடை பெறவுள்ளது.

மேற்படி பட்டதாரிகள் நேர்முகப் பரீட்சையின் போது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது புகைப்படம் கொண்ட வேறேதும் அங்கீகரிக்கப்பட்ட உறுதி செய்யப்பட்ட ஆவணம், பிறப்புச் சான்றிதழ் (சிறு குறிப்புப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது) பெயரில் ஏதாவது மாற்றம் இருப்பின் சத்தியக் கடதாசியும் திருமணத்தின் பின்னர் பெயர் மாற்றப்பட்டிருப்பின் திருமணச் சான்றிதழும், ஜி.சீ.ஈ.(சா/த) மற்றும் ஜி.சீ.ஈ.(உ/த) சான்றிதழ், பட்டச் சான்றிதழ்(பாடவிதானம்) மற்றும் ஆங்கில மொழி மூலம் பட்டப்படிப்பைத் தொடர்ந்திருப்பின் அதனை உறுதி செய்வதற்கான கடிதம், பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் உறுதிப்படுத் தப்பட்ட பிரதி ஆகியவற்றைக் கொண்டு வரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர் களுக்கு அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கு நேர்முகப் பரீட்சை அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக வட மகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

அழைக்கப்பட்டவர்களின் விவரம் வருமாறு:-

ஆர்.துஷ்யந்தி(திருநெல்வேலி, யாழ்ப்பாணம்)-ஆங்கிலம், எ.தாமரைச்செல்வி(சில்லாலை தெற்கு, பண்டத்தரிப்பு)-சிங்களம், வி.வாமன் (அல்வாய் தெற்கு, அல்வாய்)-தகவல் தொழில் நுட்பம், ஆர்.அமல்ராஜ்(புலோலிதெற்கு, புலோலி)-ஆங்கிலம், பி.கண்ணதாசன் (களபூமி, காரைநகர்)-பொருளியல், கே.தங்கராஜா(புலோலி தெற்கு,புலோலி)-ஆங்கிலம், பி.பிரதீபன் (யாழ்ப்பாணம்)-ஆங்கில்ம், எஸ்.அனுசியா(கைதடி வடக்கு, கைதடி)-சிங்களம்.

எஸ்.கவிதா(பத்தமேனி, அச்சுவேலி)- சிங்களம், எ.ஜேசுதாஸ்(நாவந்துறை, யாழ்ப்பாணம்)-றோமன் கத்தோலிக்கம், எம்.பிரியந்தி (திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்)-மனைப் பொருளியல், லம்போதரன்(அல்வாய் தெற்கு, அல்வாய்)-தகவல் தொழில் நுட்பம், எஸ்.சந்திரசேகர்(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)- ஆலோசனையும் வழிகாட்டலும், எஸ்.சபாரகரன் (இணுவில் கிழக்கு, சுன்னாகம்)-சிங்களம், கே.சுதர்சன் (சித்தன்கேணி)-இணைந்த கணிதம், பி.உதயகுமார் (யாழ்ப்பாணம்)-சித்திரம்.

என்.நளாயினி(சித்தாண்டி 3, சித்தாண்டி)-தமிழ், பி.சயந்திகா(நல்லூர், யாழ்ப்பாணம்)- இராசாயனவியல், என்.சமிலஸ் (பருத்தித்துறை)-ஆங்கிலம், என்.ராமேஸ்வரன்(சுழிபுரம் மத்தி, சுழிபுரம்)- சித்திரம்,எஸ்.ஆனந்தகுமார்(கல்வயல், சாவகச்சேரி)-தகவல் தொழில் நுட்பம், எஸ்.ஸ்ரீஞானேஸ்வரன் (யாழ்ப்பாணம்)-சிங்களம், எஸ்.சுகன்யா (வியாபாரி மூலை, பருத்தித்துறை)-தமிழ்.

எல்.எஸ்.ரதி(இளவாலை)-றோமன் கத்தோலிக்கம், எஸ்.ஜெயக்குமாரன்(அராலி தெற்கு, வட்டுக் கோட்டை)-சித்திரம், ஜெ.அரியதாஸ் (ஆனைக் கோட்டை)-ஆங்கிலம், ரி.நகுலன்(இடைக்காடு, அச்சுவேலி)-சிங்களம், எஸ்.சிவலோக நாயகி(புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம்)-வணிகக்கல்வி, பி.க்ஜகரன்(நீர்வேலி மேற்கு, நீர்வேலி)-வணிகக் கல்வி, பி.பபிதா (பலவத்தை வல்வெட்டி, வல் வெட்டித்துறை)-விவசாயம்.

ஜி.மதனா(யாழ்ப்பாணம்)-வணிகக்கல்வி, ரி.அமலதாஸ்(தாவடி, கொக்குவில்)-இந்து சமயம், ஜெகவராஜ் கஜேந்திரன்(இராமநாதபுரம், கிளிநொச்சி)-இராசாயனவியல், என்.சர்மிலா(கண்ணுக் கேணி கிழக்கு, முள்ளியவளை, (முல்லைத்தீவு)-இணைந்த கணிதம், ரி.துளசிகரன்(சாவகச்சேரி வடக்கு, சாவகச்சேரி)-சித்திரம், ஈ.சிவாஜினி (பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)-தகவல் தொழில் நுட்பம், எம்.தரணீதரன்(மாவடி, வட்டு. கிழக்கு, வட்டுக் கோட்டை)-இணைந்த கணிதம்.

## தவறிவிட்டது

நீர்வேலி, வடக்கு நீர்வேலி காமாச்சியம்மா சங்கத்தடி என்னும் முகவரியையுடைய நவரட்ணம் சிவரூபி என்பவரது தே.அ.அ.(618232719), விசேட அ.அ. (0903029274) தெல்லிப்பழை கே.கே.எஸ். வீதியால் செல்லும் பஸ்ஸில் தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். T.P.07762833421

## தவறிவிட்டது

மூர்த்தியாங்கூடல் ,சுன்னாகம் மேற்கு என்னும் முகவரியுடைய செல்வநாயகம் கிரிசாந்தன் என்பவரின் தே.அ.அ. (897484046V), 14.02.2009 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியுடனோ அல்லது ஜெய்கிருஷ்ணா இரும்பகம், ரஞ்சனாஸ் புடவையகம் ஆகிய கடைகளுடன் தொடர்பு கொள்ளவும்.

## தென்மராட்சி கிழக்கு பல.நோ.கூ.சங்கம் (வ.து) கொடிகாமம்
## கூறுவிலை கோரல்

1) பாவிக்கப்பட்ட நல்ல நிலையிலுள்ள நான்கு லொறி (900X20) ரயர், ரியூப், மவ்ளர் விற்பனை செய்வதற்கான கூறுவிலை.

2) வெற்றுப் பைகள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை

| | |
|---|---|
| அ) மா பை | - 11000 தனி |
| ஆ) சீனி பை | - 5000 தனி |
| இ) அரிசி பை பெரிது | - 8000 தனி |
| அரிசி பை சிறிது | - 8500 தனி |
| ஈ) ஏனைய பை | - 6350 தனி |

மேற்படி பொருள்கள் தேவைப்படுவோர் தலைமைப் பணிமனையில் கடமை நேரங்களில் பார்வையிட்டு தங்கள் கூறுவிலையினை தெளிவாக பெயர், முகவரி குறிப்பிட்டு ''பொது முகாமையாளர் பல.நோ.கூ.சங்கம், கொடிகாமம்'' எனும் முகவரிக்கு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''பாவிக்கப்பட்ட லொறி ரயா, ரியூப், மவ்ளர்'' கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை அல்லது வெற்றுப் பைகள் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை என எழுதி 26.02.2009 திகதிக்கு முன்பதாக நேரிலோ அல்லது தபால் வாயிலாகவோ சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

முகாமையாளர்.

## முக்கிய கலந்துரையாடல்

மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டு இது வரையும் நியமனம் கிடைக்காத பட்டதாரிகள் அனைவரையும் யாழ்/பெருமாள் கோயில் முன்பாக நாளை (18.02.2009) காலை 9 மணிக்கு ஒன்று கூடுமாறு பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

பட்டதாரிகள் செயற்குழு.

## அறநெறிப் பாடசாலைக்கு ஆசிரியர் தேவை

திருகோணமலையில் அறநெறிப் பாடசாலை ஆரம்பித்து நடத்த ஆசிரியர் தேவை. பண்ணுடன் திருமுறைகள் ஓதக்கூடியவராகவும், சமய சொற்பொழிவுகள் ஆற்றக் கூடியவராகவும், சைவ ஆசார சீலராகவும் இருக்க வேண்டும்.

தங்குமிட வசதி, உணவு வழங்கப்படும். சம்பளம் 5000 ரூபா வழங்கப்படும். விண்ணப்பங்கள் க.சோமசுந்தரக் குருக்கள் செயலாளர், அனைத்துலக சைவக் குருமார் பேரவை, கோப்பாய் தெற்கு, கோப்பாய் என்ற முகவரிக்கு 28.02.2009 க்கு முன் அனுப்பவும். மேலதிக விவரங்களுக்கு 026-2222617 என்ற தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.

க.சோமசுந்தரக் குருக்கள்
செயலாளர், அனைத்துலக சைவக்குருமார் பேரவை.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



இணுவில் வட்டுவினிபதி
திருவருள்மிகு கண்ணகா பரமேஸ்வரி
தேவாலய முன்னாள் தர்மகர்த்தா
தியாகச் செம்மல்
திருமதி செல்லப்பா சிவக்கொழுந்து
அம்மையார் நானும் எனது குடும்பத்தவரும் இல்லிடம் இல்லாமல் கஷ்டப்பட்ட காலத்தில் தனது ஆலய நித்திய பூசைகள் குறைவின்றி நடைபெறவேண்டி தனது இல்லத்தை எமக்கு ஈந்து, நாம் வளர்ந்து சமூகத்தில் ஒரு உன்னத ஸ்தானத்தைப் பெற எம்மை வளர்த்த தியாக செம்மல் திருமதி செல்லப்பா சிவக்கொழுந்து அம்மையாரின் ஆத்மா ஈசன் எந்தை இணையடி நிழலில் சாந்திபெற அம்பாள் துணை நிற்பாராக.

காயத்ரீ பீடம்,
இணுவில்.

சிவஸ்ரீ தா.மகாதேவ குருக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அருளப்பு ஞானம்மா

உரும்பிராய் கிழக்கு, உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அருளப்பு ஞானம்மா நேற்று (16.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்புவின் அன்பு மனைவியும், இராசமலர், புஸ்பமலர், தவமலர், புனிதமலர், மகிபாலா, அன்ரன், அன்போன்ஸ், யேம்ஸ், யோகமலர், ரஞ்சிதமலர், லியோ, ஜாக்குலின், கோல்டா மேஜர் ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.02.2009) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3 மணியளவில் இரங்கல் திருப்பலிக்காக உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுபின் புனித மிக்கேல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

தகவல்:
A.கோல்டா (மகள்)

### திருமதி செல்லத்துரை தெய்வானை



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், மாரியம்மன் வீதி, திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை தெய்வானை நேற்று (16.02.2009) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி தம்பிப்பிள்ளை தம்பதியின் அன்பு மகளும், ராசா, மற்றும் காலஞ்சென்றவர்களான பவளம், தவா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி, தவராசா தவரஞ்சினி மற்றும் காலஞ் சென்றவர்களான செல்வராசா, பரமேஸ்வரி, இந்திராணி செல்வரட்ணம் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(17.02.2009) செவ் வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

தகவல்:
பிள்ளைகள்.

## விழி நீரில் ஓராண்டு



அமரர் வைத்தீஸ்வரன் மகேஸ்வரன் (மோகன்)

மலர்வு 12.09.1967
உதிர்வு 29.02.2008

திதி: அபரபக்க அட்டமி (17.02.2009)

எம் உயிரான உறவே?
மனதோடு மகிழ்வுகள் தந்தாய்
ஒளியும் தந்தாய் எமக்கு...
வழியும் தந்தாய்
உன் பிரிவுகளில் இன்றும் நாம்
நொந்து போய்க் கிடக்கின்றோம்
நாள் தோறும் உந்தன்
நினைவுகள் நெஞ்சோடு...
மலர்ந்து கொண்டிருக்கின்றன
ஓராண்டென்ன...
நாமிருக்கும் வரை...
உந்தனுக் கழிவில்லை
நீ தூங்கு நிம்மதியாய்
உன் நினைவோடு நாமிருப்போம்.

''பொட்டனுசுட்டி''
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

நினைவுகளுடன்:
மச்சான்மார்.

(சி/557168)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பைத் தாக்குதலில் கைதான அஜ்மலை பாகிஸ்தானிடம் இந்தியா ஒப்படைக்காது

## வெளியுறவு அமைச்சு திட்டவட்டமாக அறிவிப்பு

மும்பை,பெப்.17

மும்பையில் தாக்குதல் நடத்திய தீவிரவாதி அஜ்மலை விசாரணைக்கு ஒப்படைக்கும்படி கேட்கப் போவதாக பாகிஸ்தான் கூறியிருப்பதை ஆரம்ப நிலையிலேயே இந்தியா நிராகரித்துள்ளது.

மும்பைத் தாக்குதலுக்கு பாகிஸ்தானில் சதித்திட்டம் தீட்டப்பட்டது என்பதற்கும், பாகிஸ்தானிலிருந்து வந்த தீவிரவாதிகள்தான் தாக்குதல்களை நடத்தினர் என்பதற்கும் அடுக்கடுக்கான ஆதாரங்களை கடந்த மாதம் 5 ஆம் திகதி பாகிஸ்தானிடம் இந்தியா கொடுத்தது. அதன் அடிப்படையில் விசாரணை நடத்திய பாகிஸ்தான், மும்பைத் தாக்குதலுக்கான சதித் திட்டத்தில் ஒரு பகுதி தனது நாட்டில்தான் தீட்டப்பட்டுள்ளது என்பதை முதன் முதலாக ஒப்புக்கொண்டது.

இது குறித்து இஸ்லாமாபாத்தில் சனிக்கிழமை பேட்டி அளித்த பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக், "மும்பைத் தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் கூட்டு விசாரணை - ஏஜென்சி விசாரணை நடத்தி 8 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளது. அவர்களில் 6 பேரை கைது செய்திருக்கிறோம். இன்னும் 2 பேர் பிடிபடவில்லை. அவர்களில் இந்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள அஜ்மல் கசாப்பும் ஒருவர். இது தொடர்பாக இந்தியாவிடம் இன்னும் நிறைய தகவல்களைக் கேட்போம். அப்போதுதான் எங்களால் நடவடிக்கை எடுக்க முடியும். அஜ்மலை எங்களிடம் ஒப்படைக்கும்படி இந்தியாவிடம் இதுவரை கேட்கவில்லை. ஆனால், எங்களுடைய விசாரணைக்கு தேவைப்பட்டால் அவரை ஒப்படைக்கும்படி கேட்போம்" - என்றார்.

இதற்கு இந்திய வெளியுறவு அமைச்சு நேற்று முன்தினம் உடனடி பதில் அளித்துள்ளது. வெளியுறவு அமைச்சக வட்டாரம் கூறுகையில்-

"இந்தியாவில்தான் தாக்குதல் நடந்துள்ளது. எனவே, அஜ்மல் கசாப்பை பாகிஸ்தானிடம் ஒப்படைக்கும் பேச்சுக்கே இடமில்லை. இந்தியாவில் குற்றம் செய்தவரை எந்த அடிப்படையில் இன்னொரு நாட்டிடம் ஒப்படைக்க முடியும்? அஜ்மலுக்கு இந்தியாவில் தான் விசாரணை நடத்தப்பட்டு தண்டனை அளிக்கப்படும்" - என்றார்.

மும்பை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவரும் இதே கருத்தை கூறியுள்ளார். "என்ன விலை கொடுத்தாலும் அஜ்மலை பாகிஸ்தானிடம் ஒப்படைக்க மாட்டோம். அவர் செய்துள்ள குற்றத்திற்கு தூக்குத்தண்டனை கிடைப்பது உறுதி. அதற்கு முன்பாக அவரை எங்கும் செல்ல விடமாட்டோம்" என்று அவர் கூறினார்.

மகாராஷ்டிர உள்துறை அமைச்சர் ஜெயந்த் பட்டீல் கூறுகையில்,

"மும்பைத் தாக்குதலுக்கு சதித்திட்டம் தீட்டிய லக்ஷர்-இ-தொய்பா அமைப்பின் தீவிரவாதி ஷாகிர் ரக்தான் லக்வி, இன்னொரு தீவிரவாதி ஷரார் ஷா ஆகியோர் பாகிஸ்தானில் உள்ளனர். இவர்களை ஒப்படைக்கும்படி இந்தியா விடுத்துள்ள கோரிக்கையை பாகிஸ்தான் நிராகரித்துள்ளது - என்றார்.

மும்பையில் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 195 பேர் பலியானார்கள். தாக்குதல் நடத்திய 10 தீவிரவாதிகளில் 9 பேரை கொமாண்டோ படை சுட்டுக் கொன்றது. அஜ்மல் கசாப் என்ற ஒரு தீவிரவாதி மட்டும் உயிருடன் பிடிபட்டார். அவர் இப்போது மும்பைச் சிறையில் அடைக்கப்பட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## காதல் வலையில் வீழ்ந்தாராம் பெனாஸிரின் சகோதரர் மகள்

பாக். முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோவின் சகோதரர் மகளான பாத்திமா பூட்டோ, ஹொலிவூட் நடிகர் ஜோர்ஜ் க்லூனியை காதலிக்கிறார் எனவும் அவர்கள் இருவரும் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டுள்ளனர் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மறைந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் சகோதரர் மகள் பாத்திமா பூட்டோ, சிறந்த கவிஞரும் பத்திரிகையாளருமாவார். பெனாஸிர் உயிருடன் இருக்கும் போதே, அவருக்கு எதிராக சரமாரியாக குற்றச்சாட்டுகளை அள்ளி வீசியவர் இவர். தன்னையும், தனது குடும்பத்தினரையும் அரசியலுக்குள் நுழைய விடாமல் பெனாஸிர் செயற்பட்டார் என பெனாஸிர் மீது பாத்திமா முறைப்பாடு செய்திருந்தார்.

இந்நிலையில், பிரபல ஹாலிவூட் நடிகர் ஜோர்ஜ் க்லூனியை பாத்திமா பூட்டோ காதலிக்கிறார் எனத் தற்போது செய்திகள் வெளியாகியுள்ளன. அமெரிக்க பத்திரிகை ஒன்று, இது தொடர்பாக பரபரப்பு செய்தி வெளியிட்டுள்ளது. அதில், "கடந்தாண்டு நடந்த ஒரு மாநாட்டில் இருவருக்கும் பழக்கம் ஏற்பட்டது. அன்றிலிருந்து அவர்கள் இருவரும் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றனர். ஹாலிவூட் நடிகருக்கே உரிய றொமான்ஸ் விடயங்களை ஜோர்ஜ் இன்னும் குறைத்துக் கொள்ளவில்லை. பாத்திமாவை திருமணம் செய்துகொண்டால், இது போன்ற நடவடிக்கைகளை அவர் குறைத்துக்கொள்ள வாய்ப்புள்ளது" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெ. வேலைவாய்ப்பு விண்ணப்பத்தில் தமிழ் மொழிக்கும் இம்முறை இடம்

வாஷிங்ரன், பெப். 17

அமெரிக்க அரசின் பல்வேறு நிர்வாக பொறுப்புகளுக்கு அதிகாரிகளை நியமிக்க ஒபாமா அரசு விண்ணப்பங்களை வரவேற்றுள்ளது. இதற்கான விண்ணப்பப்படிவத்தின், சர்வதேச மொழி அனுபவ பகுதியில் உங்களுக்குத் தெரிந்த மொழிகளை குறிப்பிடுங்கள் என்று கேட்கப்பட்டுள்ளது. இதற்காக உலக நாடுகளின் முக்கியமான 101 மொழிகள் பட்டியல் இடப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் தமிழ், அசாமி, பெங்காலி, குஜராத்தி, இந்தி, கன்னடம், மைத்திலி, மலையாளம், நேபாளி, மராத்தி, ஒரியா, பஞ்சாபி, ஹிந்தி, தெலுங்கு, உருது, போஜ்புரி, ஹார்யன்வி, அவாதி, சத்திஷ்காரி, மகாகி, மார்வாரி ஆகிய 21 இந்திய மொழிகள் இடம்பெற்றுள்ளன.

இதில் ஒரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால், போஜ்புரி, ஹார்யன்வி, அவாதி, சத்திஷ்காரி, மகாகி, மார்வாரி ஆகிய 6 மொழிகளும் இந்திய அரசின் 8 ஆவது அட்டவணையில் இடம் பெறாத மொழிகள் என்பதுதான்.

## உலக அரங்கில்

# உலகப் பொருளாதார நெருக்கடியில் ஜப்பானுக்கும் பெரும் சிக்கல் நிலைமை

## அந்நாட்டுப் பொருளாதார அமைச்சர் சொல்கிறார்


கடந்த 35 ஆண்டுகளில் எதிர்கொண்டிராத பொருளாதாரப் பிரச்சினையில் ஜப்பான் சிக்கியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் ஏற்றுமதிக்கு கிராக்கி குறைவடைந்தமையே இந்தப் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம் எனவும் கடந்த ஆண்டு 12:7 என்ற விகிதத்தில் உற்பத்தி குறைந்துள்ளது எனவும் கூறப்படுகிறது.

அமெரிக்காவில் 3:8 வீதமும் ஐரோப்பாவில் 1:2 வீதமும் பொருளாதாரம் பின்னடைவாக உள்ளது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில் 11:6 வீதம் பொருளாதாரம் வீழ்ச்சியுற்றுள்ளது என்று அங்குள்ள 'கயோடா' நிறுவனம் தனது கணிப்பில் தெரிவித்துள்ளது.

இரண்டாம் உலகமகா யுத்தத்திற்குப் பின்னர் ஜப்பான் எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை இது என்று ஜப்பான் பொருளாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஜப்பானில் உள்ள பிரபல நிறுவனங்கள் தமது பணியாளர்களை கடமையிலிருந்து நிறுத்தியுள்ளன.

ஜப்பானின் நாணயமான யென்னின் பெறுமதி அதிகரித்துச் செல்வதால் இன்னும் நிலைமை மோசமடைந்து செல்கின்றது.

எதிர்வரும் மார்ச் மாதம் முடியும் முன்னர் அதிகளவு நட்டத்தை ஜப்பான் எதிர்நோக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

உலக நாட்டில் இரண்டாவது பொருளாதார நாடு ஜப்பான் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெ. உளவு விமானம் கண்காணிப்பில்; சோமாலிய கடற் கொள்ளையர் கிலி

வர்ஷிங்ரன், பெப்ரவரி 17

உலக வல்லரசு நாடுகளுக்கு சவால் விடுத்து வரும் சோமாலிய கடற்கொள்ளையர்கள் தொடர்பான நடவடிக்கைகளை கண்டறிய ஆளில்லா உளவு விமானம் மூலம் அமெரிக்கா கண்காணித்து வருகிறது.

கடற்கொள்ளையர்களின் கப்பல்கள் தினமும் இந்த வேவு விமானம் மூலம் காண்காணிக்கப்படுகின்றன என அமெரிக்க கடற் படையினர் தெரிவிக்கின்றனர். இந்த நடவடிக்கைகளுக்காக பல விமானங்களை பயன்படுத்துகின்றன எனவும் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கடற்பரப்பில் இருந்து சுமார் மூவாயிரம் அடிக்கு மேல் இந்த விமானம் பறந்து கொண்டு கடற்கொள்ளையர்களின் நடமாட்டம்அவர்கள் பயன்படுத்தும் கப்பல்களின் கொடிகள் மற்றும் பல தகவல்களை படம் எடுத்து தமக்கு அனுப்புகின்றது என்றும் அமெரிக்கக் கடற்படையினர் தெரி விக்கின்றனர்.

இதேவேளை, ஏடன் கடற்பரப்பிற்கு இந்தியா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ் நாட்டு கடற்படைக் கப்பல்கள் கடற் கொள்ளையருக்கு எதிரான பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த வியாழக்கிழமை இந்த உளவு விமானத்தின் தகவலின் அடிப்படையில் 9 கடற்கொள்ளையர்கள் பிடிபட்டனர்.

இவ்வாறு பிடிபட்ட கடற் கொள்ளையர்களிடமிருந்து தன்னியக்கத் துப்பாக்கிகள் மற்றும் ஆர்.பி.ஜி, கப்பல்களில் ஏற பயன்படுத்தப்படும் ஏணிகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன.

கடற்கொள்ளையர்கள் தொடர்பான விசாரணைகளை எந்த நாட்டில் வைத்து விசாரிப்பது என்ற சர்ச்சை இப்போது எழுந்துள்ளதால், அமெரிக்கா, பிரிட்டன், கென்யா ஆகிய நாடுகளுடன்விசேட உடன்படிக்கை செய்து கொள்ளப் படவுள்ளது என்றும் கூறப்படுகிறது.

இந்த சிறிய உளவு விமானம் தினமும் பல ஆயிரம் மைல்கள் கண்காணிப்புப் பணியை செய்யக்கூடிய தரம் வாய்ந்தவை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருடம் கடற் கொள்ளையர்களின் 50 வீதமான கொள்ளைகள் முறியடிக்கப்பட்டு விட்டன. தற்போது 30 வீதமாக குறைக்கப்பட்டு விட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

சோமாலியாவில் திடமான அரசு அமைத்தால் மட்டுமே இப்பிரச்சினைக்கு ஓர் தீர்வு கிட்டும் என அமெரிக்க கடற்படை கப்பலுக்குச் சென்ற எசோசியேற்டட் பிரெஸ் செய்தியாளர் தெரிவித்தார்.



தென் ஆபிரிக்காவில் உள்ள டர்ப்பன் நகரில் 2009 ஆம் ஆண்டுக்கான இந்திய உலக அழகி போட்டி நடந்தது. 25 அழகிகள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் 19 வயது நிகிடாஷா மார்வாஹா(மத்தியில் இருப்பவர்) இந்திய உலக அழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அருகில் 2 ஆவது மற்றும் 3 ஆவது இடங்களைப் பிடித்த அழகிகள் உள்ளனர்.

# இந்தியாவுக்கு ஆயுத விற்பனை; ரஷ்யாவை மிஞ்சியது இஸ்ரேல்

டில்லி, பெப். 17

இந்தியாவுக்கு இராணுவ தளபாடங்களை விற்பனை செய்வதில் ரஷ்யாவை பின்தள்ளி விட்டு இஸ்ரேல் முதலிடத்தைப் பிடித்துள்ளது என அந்நாட்டுப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

900 கோடி டொலர் மதிப்பிலான இராணுவ தளபாடங்கள் இந்தியாவுக்கு விற்கப்பட்டுள்ளது என இஸ்ரேல் இராணுவ அதிகாரியை மேற்கோள்காட்டி "தி ஜெருசலேம் போஸ்ட்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளாக ரஷ்யாதான் இந்தியாவுக்கு இராணுவ தளபாடங்களை அதிக அளவில் விற்பனை செய்து வந்துள்ளது. ஆண்டுக்கு 87 கோடி டொலருக்கு ஆயுதங்களை ரஷ்யா வழங்கி வந்தது.

ஆனால், அண்மையில் இந்தியாவுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் ஏற்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் இஸ்ரேல் ரஷ்யாவை பின்னுக்குத் தள்ளிவிட்டது என்று அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்தவும் எதிரிகளின் விமானங்களை முன்கூட்டியே கண்டுபிடித்து அழிக்கும் ராடர்களை இஸ்ரேல் இந்தியாவுக்கு வழங்க உள்ளது. மும்பைத் தாக்குதலை அடுத்து கடல் வழி மற்றும் வான்வழித் தாக்குதலைத் தடுக்க ராடர் அமைப்புகளை வலுப்படுத்த இந்தியா திட்டமிட்டுள்ளது. அதற்கு இஸ்ரேலின் 'ஏரோஸ்டாட்' ராடர்களை வாங்குகிறது. இது போன்று இந்திய ராணுவத்தின் தேவைக்கு ஏற்ப இஸ்ரேலிடம் ஆயுதம் வாங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அதிகாரி குறித்து பாக். ஜனாதிபதியுடன் ஐ.நா. செயலர் பேச்சு

நியூயோர்க், பெப். 17

பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட ஐ.நா.அதிகாரியை விடுவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ஐ.நா. சபை பொதுச் செயலாளர் பான் கீ - மூன், பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியைக் கேட்டுள்ளார்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் ஐ.நா.சபையின் அகதிகள் அமைப்பின் சார்பில் மனிதாபிமான உதவிகளைச் செய்து வந்த ஜோன் சோலெக்கி இரண்டு வாரங்களுக்கு முன்பு குவெட்டா நகரில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டார்.

காரில் சென்றுகொண்டிருந்த சோலெக்கியை வழிமறித்த தீவிரவாதிகள் கார்ச் சாரதியை சுட்டுக்கொன்றுவிட்டு அவரைக் கடத்திச் சென்று விட்டனர்.

தற்போது அவரை மறைவான இடத்தில் தீவிரவாதிகள் சிறை வைத்துள்ளனர். இரு நாள்களுக்கு முன்பு கண்களைத் துணிகளால் மறைத்துக் கட்டிய நிலையில் சோலெக்கி உலக நாடுகளிடம் உதவி கேட்பது போன்றதொரு வீடியோகாட்சியை தீவிரவாதிகள் வெளியிட்டனர்.

இதைத் தொடர்ந்து ஐ.நா.சபை பொதுச் செயலாளர் பான் கீ - மூன் சனிக்கிழமை பாகிஸ்தான் அதிபர் அசிப் அலி சர்தாரியுடன் தொலைபேசியில் உரையாடியபோது ஜோன் சோலெக்கி கடத்தப்பட்டமையானது கவலையளிக்கிறது எனவும் அவரைப் பத்திரமாக விடுவிக்க பாகிஸ்தான் அரசு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி சர்தாரியிடம் அவர் வற்புறுத்தினார்.

மேலும் பெனாஸிர் பூட்டோ படுகொலை தொடர்பாக ஐ.நா.சபை சார்பில் விசாரணைக் குழு அமைப்பது குறித்து சமீபத்திய தனது பாகிஸ்தான் பயணத்தின் போது சர்தாரியிடம் தெரிவித்ததை [illegible] பான் கீ - மூன் நினைவு படுத்தினார்.

அப்போது ஐ.நா.விசாரணைக் குழு அமைப்பது குறித்து சிறப்பான முறையில் பங்காற்றி வருவதற்கும், பெனாஸிர் படுகொலை தொடர்பான உண்மைகளை அறிவதற்கும் பான் கீ - மூன் காட்டிவரும் ஆர்வத்திற்கும் சர்தாரி நன்றி தெரிவித்துக்கொண்டார்.

இதன்பின்னர் பான் கீ - மூனின் செய்தித் தொடர்பாளர்கள் கூறுகையில்,

இரு தலைவர்களும் ஜோன் சோலெக்கி பாதுகாப்பான முறையில் விடுவிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளனர் என்று கூறினார்.

ஐ.நா.சபை பொதுச் செயலாளர், ஜனாதிபதி சர்தாரியுடன் தொலைபேசியில் உரையாடிய விவரங்களை பாகிஸ்தானிய அதிகாரிகள் இஸ்லாமாபாத்தில் அறிக்கையாக வெளியிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பிரச்சினையை இரண்டே நாள்களில் ஐ.நாவுக்கு கொண்டுசென்று போரை நிறுத்துக!

## மத்திய அரசை வலியுறுத்துகிறார் ராமதாஸ்

சென்னை, பெப்ரவரி 17

போர் நிறுத்தம் செய்வதற்கு இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும், உடனடியாக இந்தப் பிரச்சினையை ஐ.நா. மன்றத்திற்கு கொண்டுசென்று இலங்கையில் அமைதி ஏற்பட மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் டி.சுதர்சனம் நேற்று தி.நகரில் உள்ள பொங்கு தமிழ் வளர்ச்சி அறக்கட்டளை அலுவலகத்தில் டாக்டர் ராமதாஸைச் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேட்டியளித்தபோதே அவர் இதனைத்தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து தங்கபாலு, சுதர்சனம் ஆகிய தலைவர்களுக்கு கடிதம் எழுதி இருந்தேன். அதனை படித்துப் பார்த்துவிட்டு சுதர்சனம் என்னை வந்து சந்தித்தார். இலங்கையில் தற்போது தமிழினம் அழிந்து கொண்டிருக்கிறது. உலக நாடுகள் இதற்காக கண்டனக் குரல் எழுப்பி வருவதுடன் இலங்கை அரசு போரை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றன.

இலங்கைப் பிரச்சினையை ஐ.நா. மன்றத்திற்கு கொண்டு செல்லவும் மத்திய அரசுக்கு உரிமை உண்டு. இதனை இரண்டே நாட்களில் இந்திய அரசு நிறைவேற்ற வேண்டும். ஐ.நா. மன்றத்திற்கு மட்டுமன்றி சர்வதேச மனித உரிமை அமைப்பிற்கும் இந்தப் பிரச்சினையைக் கொண்டு சென்று இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் மத்திய அரசு மேற்கொள்ளவேண்டும்.



இலங்கை அரசை போரை நிறுத்துங்கள் என்று கண்டிப்புடன் இந்தியா சொன்னால் அதற்கு நிச்சயம் பலன் கிடைக்கும். புலிகள் தரப்பில் போரை நிறுத்தத் தயாராக இருப்பதாக அந்த இயக்கத்தின் அரசியல் பிரிவு தலைவர் நடேசன் ஏற்கனவே அறிவித்துவிட்டார்.

ஆயுதங்களை ஒப்படைத்து சரணடைந்துவிட்டு ஒரு போராளி இயக்கம் பேச்சு நடத்த முடியாது. எனவே போரை நிறுத்தி பேச்சு நடத்துமாறு இலங்கை அரசை இந்தியா நிர்ப்பந்திக்க வேண்டும் - என்றார்.

### தமிழீழம் பிறந்திருக்கும்

இதேவேளை, சென்னையில் நேற்று அளித்த பேட்டியொன்றில் அவர் கூறியவை வருமாறு-

1986ஆம் ஆண்டும் தற்போது நடைபெறுவதுபோல இலங்கையில் தமிழினப் படுகொலை நடைபெற்றது. அப்போது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி விமானம் மூலம் இலங்கைத் தமிழர்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை வழங்கினார்.

அதேநிலைதான் இப்போதும் உள்ளது. ராஜீவ்காந்தியை இழந்தது வருத்தத்திற்குரியது. தீட்சித் போன்றவர்களின் தவறான ஆலோசனைகளே அவரது இழப்புக்கு காரணம். இப்போதும் இலங்கைப் பிரச்சினையில் மத்திய அரசுக்கு தவறான ஆலோசனைகளே வழங்கப்படுகின்றன. இந்தப் போக்கை கைவிட்டு ராஜீவ் காந்தியின் ஆலோசகராகவும், வெளியுறவுத்துறை செயலாளராகவும் இருந்த ஏ.பி. வெங்கடேஸ்வரனிடம் மத்திய அரசு ஆலோசனை பெற வேண்டும்.

ராஜீவ் காந்தி ஜெயவர்த்தன ஒப்பந்தம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. இன்று வரை ராஜீவ்காந்தி நம்மிடையே உயிரோடு இருந்திருந்தால் நிச்சயமாகத் தமிழீழம் மலர்ந்திருக்கும். இதனை சோனியாவிடம் தமிழக காங்கிரஸ் தலைவர்கள் எடுத்துக் கூறி இலங்கையில் போரை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுதர்சனத்திடம் தெரிவித்தேன் - என்றார். (சி)



இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தி பாளையங்கோட்டை மறைமாவட்டத்தைச் சேர்ந்த 9 கத்தோலிக்க தேவாலயங்கள் சார்பில் பாளையங்கோட்டை மார்க்கெட் மைதானத்தில் நேற்றுமுன்தினம் பொதுக்கூட்டம் நடந்தது. இதில் மெழுகுவர்த்தி ஏந்தி கிறிஸ்தவர்கள் பிரார்த்தனை செய்கின்றனர்.

# எந்நேரமும் கைதாகலாம்?

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக பேசினார் என திரைப்பட இயக்குநர் சீமான் மீது புதுவைப் பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். இதனால் எந்நேரமும் அவர் கைதுசெய்யப்படலாம் - என்று தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் போர் நிறுத்தம் செய்ய வலியுறுத்தி, சமீபத்தில் புதுவையில் நடந்த போராட்டத்தில் இயக்குநர் சீமான் கலந்து கொண்டார். அவர், தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆதரித்து பேசினார் எனவும், காங்கிரஸ் தலைவர்களை கடுமையாக விமர்சித்தார் எனவும் குற்றச்சாட்டு எழுந்தது.

இதையடுத்து, சீமான் மீது ஒதியஞ்சாலை பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர். இதனால் அவர் எந்நேரமும் கைதாகலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# இலங்கையில் போரை நிறுத்தக்கோரி பெங்களூரில் 50 ஆயிரம் பேர் பேரணி



பெங்களூர், பெப். 17

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்தும், இங்கு உக்கிரமடைந்துள்ள போரை உடனடியாக நிறுத்த வலியுறுத்தியும் பெங்களூரில் தமிழ்ச்சங்கம் சார்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரம்மாண்டமான பேரணியில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் கலந்து கொண்டனர்.

அல்சூரில் உள்ள ஆர்.பி.ஏ.என்.எம். பாடசாலை மைதானத்தில் காலை 11 மணிக்கு பேரணி தொடங்கியது. பேரணியை வெங்கடேஷா கல்விக் கழகச் செயலர் எம்.வி.ஜே. மோகன் தொடங்கிவைத்தார்.

பிரம்மாண்டப் பேரணியால் நகரின் முக்கிய வீதிகளில் சில மணி நேரம் வாகனப் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. நூற்றுக்கணக்கான பொலிஸார் பாதுகாப்பு மற்றும் போக்குவரத்தைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். பி.ஆர்.வி. மைதானத்துக்குச் சென்று பேரணி அமைதியாக முடிவடைந்தது

தமிழ்ச் சங்கச் செயலர் உள்ளிட்டோர் ஆளுநர் மாளிகையில் ஆளுநரின் செயலரைச் சந்தித்து இலங்கைப் பிரச்சினை தொடர்பான கோரிக்கை மனுவை அளித்தனர்.

# என் இனிய ஈழத் தமிழினத்தை எவராலும் அழிக்க முடியாதெனக் குமுறுகிறார் சீமான்

மக்களிடம் இருந்துதான் புலிகள் உருவாகிறார்கள் என்பதால் இலங்கை அரசு மக்களைத் திட்டமிட்டு அழிக்கிறது. 7 நாடுகளின் இராணுவத் தளபதிகள் சேர்ந்து திட்டம் தீட்டுகிறார்கள்.

ஆனால், என் இனிய ஈழத் தமிழினத்தை எவராலும் அழிக்க முடியாது. முடிந்தால் நெருங்கிப் பார் என்ன நடக்கும் என்று தெரியும் - என்று ஈழத் தமிழ்ஆதரவு அக்கினிப்புயல்சீமான் குமுறியுள்ளார்.

ஈழத்தமிழ் மக்களுக்காக தீக்குளித்த முத்துக்குமரனுக்கு பெரியார் திராவிடர் கழகம் சார்பில் சென்னை எம்.ஜி.ஆர். நகரில் அஞ்சலிக் கூட்டம் நடைபெற்றது. இதில் பேசியபோதே அவர் இத்னைத் தெரிவித்தார். மேலும் அவர் பேசியவை வருமாறு -

இன்று நடக்கும் இந்தக் கூட்டத்திற்கு பொலிஸார் தடை விதிக்கப்போகின்றனர் எனச் சொன்னார்கள். தடை தடை என்றால் அதை உடை உடை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கார் எரிக்கின்ற கட்சியாக காங்கிரஸ் கட்சி இருக்கிறது. பிரபாகரனுக்கு ஆதரவாகவும், தடை செய்யப்பட்ட இயக்கத்துக்கு ஆதரவாகப் பேசுகிறார் என்று என்னைக் கைது செய்பவர்கள், என்னுடைய காரையும் - இந்திய பொதுவுடைமைக் கட்சியின் செயலர் தா.பாண்டியனின் காரையும் எரித்தவர்களைக் கைது செய்யாதமை ஏன்?

நான் கலவரம் செய்கிறேன் எனப் புதுச்சேரி அரசு சொல்கிறது. கலகக்காரர் பெரியாரின் பேரன் நான். தமிழின எழுச்சிக்காக கலகத்தைச் செய்தேன். தமிழர்கள் ஜனநாயகவாதிகளாக இருக்கிறார்கள். முத்துக்குமரனும் ஜனநாயகவாதியாகத்தான் இருந்திருக்கிறான். அதனால்தான் தீக்குளித்தான். ஆனால் நாடு சொல்கிறது தமிழன் தீவிரவாதி என்று. முத்துக்குமரன் தீவிரவாதி, நான் தீவிரவாதி என்றால் என் காரையும், பாண்டியனின் காரையும் எரித்த காங்கிரஸ்காரன் தேசியவாதியா?.

தமிழீழ மண்ணில் அமைதிப்படை செய்த அக்கிரமங்களை தமிழர்கள் ஒருபோதும் மறக்கமாட்டார்கள். தற்போது நடக்கும் போரில் விடுதலைப் புலிகள் கொல்லப்படுகிறார்கள் என்ற செய்தி வருகிறதா? அப்பாவித் தமிழர் கொல்லப்படுகிறார்கள் என்றுதான் செய்தி வருகிறது.

புலிகளை நெருங்க முடியாது. ஏனென்றால் மக்கள்தான் புலிகள். புலிகள்தான் மக்கள். மக்களிடம் இருந்துதான் புலிகள் உருவாகிறார்கள் என்பதால் மக்களைத் திட்டமிட்டு அழிக்கிறது சிங்கள அரசு. 7 நாடுகளின் இராணுவத் தளபதிகள் சேர்ந்து திட்டம் தீட்டுகிறார்கள். ஆனால் இவர்களால் விடுதலைப் புலிகளை நெருங்க முடியவில்லை. எம் இனிய ஈழத் தமிழினத்தை எவராலும் அழிக்க முடியாது. முடிந்தால் நெருங்கிப்பார் தெரியும் என்ன நடக்கும் என்று.

புலிகள் பயங்கரவாதிகள் அல்லர். அவர்களை ஆயுதங்களைக் கீழே போடச்சொல்லாதீர். அது ஒரு மக்கள் இராணுவம். உயிரையே ஆயுதமாக்கிப் போராடும் மக்கள் இராணுவத்தை ஆயுதத்தைக் கீழே போடச் சொல்லாதீர்கள். எதுவும் தானாக மாறாது. நாம்தான் மாற்ற வேண்டும். அதுபோல் நாடு தானாக வராது. நாம்தான் அடைய வேண்டும். தமிழீழம் அமைந்தே தீரும் - என்றார்.

# இலங்கையில் தீவிரமாகியுள்ள போருக்கு ராஜீவ் காந்தியின் குடும்பம் காரணமல்ல!

## சிறையிலிருக்கும் முருகன் பேட்டி

வேலூர், பெப். 17

இலங்கையில் அதி உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இராணுவத் தாக்குதலுக்கு ராஜீவ் குடும்பத்தினர் காரணமாக இருக்க மாட்டார்கள். அதற்கு வேறு ஏதோ பின்புலம் இருப்பதாகத் தெரிகிறது - என்று ராஜீவ் கொலை வழக்கில் சிறைவாசம் அனுபவித்துவரும் முருகன் தெரிவித்துள்ளார்.

மேலும் வேலூர் சிறையில் மனைவி நளினியிடம் ராஜீவின் மகள் பிரியங்கா பேசியவை என்ன என்ற தகவலையும் அவர் வெளியிட்டார்.

வேலூர் மத்திய சிறையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் கலந்து கொள்ளச் சென்ற பத்திரிகையாளர்களிடம் பேசியபோதே அவர் இதனைக் கூறினார். மேலும் அவர் கூறியவை வருமாறு -

என் மகள் லண்டனில் படித்து வருகிறாள். அடுத்த ஆண்டு மருத்துவக் கல்லூரியில் சேர்க்க திட்டமிட்டுள்ளோம். நான்தான் குடும்பத்துக்கு பெரும் தொந்தரவாகப் போய்விட்டேன். மகளையாவது நல்லபடியாக வளர்க்க வேண்டும். என் குடும்பத்துக்கு என்னால் செய்ய முடியாததை மகள்தான் செய்ய வேண்டும்.

கருணாவின் துரோகம் தாங்கிக் கொள்ள முடியாதது. பிரபாகரன், சாதிப் பாகுபாடெல்லாம் பார்ப்பதில்லை. முகாமில் இரு இளைஞர்கள் சண்டையிட்டுக் கொண்டபோது, சாதிப் பெயரைச் சொல்லி திட்டிக்கொண்டதால் அவர்களை முகாமை விட்டே விரட்டினார்.

இலங்கையில் நடந்து வரும் தீவிர போருக்கு ராஜீவ் காந்தி குடும்பத்தினரின் பழிவாங்கும் போக்குத்தான் காரணம் என்று சொல்ல முடியாது. அவர்கள் நல்லவர்கள், இதற்கு ஏதோ பின்புலம் உள்ளது எனத் தெரிகிறது - என்றார்.

### நளினியிடம் பிரியங்கா பேசிய விடயம் என்ன?

மேலும் சில கேள்விகளுக்கு முருகன் அளித்த பதில்கள் வருமாறு -

கே - பெண்கள் சிறையில் இருக்கும் நளினியை கடந்த மார்ச் மாதம் பிரியங்கா சந்தித்தாரே? அப்போது என்ன பேசினார்?

ப - ஆமாம் சந்தித்தார். தன் தந்தையின் மரணம் பற்றி பேசியுள்ளார். தனிப்பட்ட விடயங்களையும் பேசியுள்ளார். மேலும் நளினியிடம் நலம் விசாரித்துள்ளார். என்னைப்பற்றியும், என் மகள் அரித்ரா பற்றியும் கேட்டுள்ளார்.

கே - நளினி தன்னை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி பிரியங்காவிடம் கேட்டாரா?

ப - நான் நளினியிடம் அதுபற்றி கேட்டேன். ஆனால், ''தன் தந்தையை இழந்துவிட்டு என்னைச் சந்திக்க வந்தவரிடம் எப்படி நான் கேட்க முடியும்?'' என்று நளினி கூறிவிட்டார். எல்லாருக்குமே அவர்களது தந்தை முக்கியமானவர்தான். ஒரு மகளாக அவர் தன்னுடைய தந்தையை இழந்தது அவருக்கும் மிகப்பெரிய பாதிப்புத்தான். அதனால் அவரிடம் எங்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கேட்பது விருந்தாளியிடம் கடன் கேட்பது போன்றது அல்லவா? - என்றார்.

# காங்கிரஸின் தமிழினத் துரோக ஆவணங்கள் புதுச்சேரி உண்ணாவிரதப் போரில் வெளியீடு

ஈழத்தில் சிங்கள அரசு நடத்தி வரும் தமிழின அழிப்புப் போரை இந்திய அரசு உடனே தடுத்து நிறுத்த வேண்டும். சிங்கள அரசுக்கு இந்திய அரசு வழங்கிய ஆட்கள், ஆயுத, பண உதவிகளை திரும்பப் பெறவேண்டும், தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும் என்கின்ற மூன்று கோரிக்கைகளை முதன்மைப்படுத்தி புதுச்சேரி சத்தியம் மக்கள் சேவை மையம் சார்பில் புதுச்சேரி சாரம் பகுதியில் நேற்றுமுன்தினம் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. இந்நிகழ்வில் காங்கிரஸ் தமிழினத் துரோகம் பற்றிய ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

இப்போராட்டத்திற்கு, தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் அரசியல் இதழான 'தமிழ்த் தேசியத் தமிழர் கண்ணோட்டம்' இதழின் ஆசிரியர் குழு உறுப்பினர் க.அருணபாரதி தலைமை தாங்கினார். சத்தியம் மக்கள் சேவை மையத்தின் அவைத்தலைவர் தே.சரவணன் போராட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் அரக்கத்தனத்திற்கு கண்டனம் தெரிவிக்கும் விதமாக அவரது படத்தின் முன் செருப்புகளை வைத்து மரியாதை செய்யப்பட்டது. ஈழத்தமிழர்களுக்காகத் தீக்குளித்து மாண்ட தூத்துக்குடி இளைஞர் முத்துக்குமாரின் மரண சாசனத்தை சென்னையைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப ஊழியர் ஒருவர் படித்தார். ஈழத்தமிழர்களுக்காக உயிர் நீத்த தியாகிகளின் உருவப்படத்திற்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

போராட்டத்தின் இறுதியில் காங்கிரஸின் துரோகத்தனங்களை வெளிப்படுத்தும் ஆவணங்கள் தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி சார்பில் வெளியிடப்பட்டன. அதனை வெளியிட்டு அதன் அரசியல் ஏட்டின் ஆசிரியர் குழு உறுப்பினர் க.அருணபாரதி பேசினார். மேலும் அந்த ஆவணங்களை பரவலாக்குவதன் மூலம் காங்கிரஸுக்கு எதிரான பிரசாரங்களைத் தீவிரப்படுத்த வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்தார். போராட்டத்தை மையத்தின் செயலாளர் சசிகலா ஆறுமுகம் முடித்து வைத்துப் பேசினார்.

# ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்து தூத்துக்குடியில் ஊர்வலம்–ஆர்ப்பாட்டம்

இந்திய - இலங்கைக் கூட்டுச் சதியில் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட பெண்களும் இளைஞர்களும் நேற்றுமுன்தினம் மாலை சரியாக நான்கு மணிக்கு தூத்துக்குடி பனிமய மாதா கோயில் அருகிலிருந்து கண்டன ஊர்வலத்தைத் தொடங்கினர்.

இந்திய சிங்கள அரசுக்கு எதிரான பதாகைகளைக் கையில் ஏந்தியவாறும் கறுப்புக் கொடிகளை ஏந்திக் கொண்டும் ஆயிரக்கணக்கானோர் அணிவகுத்தமை நகரை ஸ்தம்பிக்க வைத்தது. மிகவும் கட்டுக்கோப்புடனும் உறுதியுடனும் நடந்த இந்த ஊர்வலம் காந்தி சிலை அருகில் ஆர்ப்பாட்டத்திற்காக வந்தடைந்தபோது அனைத்து வீதிகளும் மூடப்பட்டன. கூடியிருந்த ஒட்டு மொத்த மக்களும் தமிழருக்காக உயிர் நீத்த தியாகிகளுக்காக வீரவணக்க முழக்கமிட்டனர்.

பின்னர், இந்திய தமிழக அரசுகளின் துரோகத் தனத்தைக் கடுமையாகச் சாடி முழக்கமிட்டனர். ''வெல்லட்டும் வெல்லட்டும் புலிப்படை வெல்லட்டும்'' என்ற முழக்கம் விண்ணை அதிர வைத்தது. சோனியா காந்தி மற்றும் காங்கிரஸ் இயக்கத்தின் துரோகத்தனத்தை மக்கள் தங்கள் முழக்கங்களில் கிழித்துக் கொட்டினர். ஆர்ப்பாட்டத்திற்கு பேராசிரியை பாத்திமா தலைமையேற்று ஈழப் போராட்ட வரலாற்றை எடுத்துரைத்தார்.

தமிழர் கழகத்தின் பொதுச்செயலாளர் அரிமாவளவன் தன்னுடைய எழுச்சியுரையில் -

இந்திய அரசின் வஞ்சகத்தன்மையைச் சாடியதோடு, இலங்கையின் இறையாண்மையைக் காக்கப் போகிறோம் என்ற போர்வையில் எம் தமிழினத்தையை அழிக்கும் ஈனச் செயலில் ஈடுபட்டுள்ள இந்திய அரசும் அதற்கும் முட்டுத் தாங்கல் செய்யும் தமிழக அரசும் தமிழகத்தில் எழுந்துள்ள வரலாறு காணாத எழுச்சியைத் துச்சமென எடுத்தெறிந்து தமது நடவடிக்கைகளைத் தொடர்கின்றன. இந்த நிலை தொடருமானால், தனி ஈழமா? தனித் தமிழ்நாடா என்கிற நிலைக்குத் தள்ளப்படும் என்று எச்சரித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தாய்லாந்து டென்னிஸ் இறுதியில் போராடித் தோற்றார் சானியா

## எனினும் தரவரிசையில் முன்னேறும் சாத்தியம்



தாய்லாந்து, பெப்.17

தாய்லாந்து, பட்டையா ஓபன் டென்னிஸ் இறுதிப்போட்டியில் இந்தியாவின் சானியா மிர்சா தோல்வி அடைந்தார்.

தாய்லாந்தின் பட்டையா நகரில் பட்டையா ஓபன் சர்வதேச பெண்கள் டென்னிஸ் போட்டி நடந்தது. இதன் ஒற்றையர் இறுதிப் போட்டியில் 126ஆம் நிலை வீராங்கனை இந்தியாவின் சானியா மிர்சாவும், 5ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் விரா ஸ்வோன ரேவாவும் மோதினார்கள். முதல் செற்றைக் கைப்பற்ற இரண்டு பேரும் கடுமையாக மோதினார்கள்.

ஆனால் நெருக்கடியான நேரத்தில் சானியா செய்த தவறால் முதல் செற்றை போராடி இழக்க வேண்டியிருந்தது.

இதையடுத்து 2ஆவது செற்றில் முதல் சுற்றை வென்று முன்னிலையுடன் தொடங்கிய சானியா அதன் பிறகு, பலம் வாய்ந்த ஸ்வோனரேவாவின் அதிரடியில் வீழ்ந்தார். முடிவில் 7:5, 6:1 என்ற நேர் செற் கணக்கில் ஸ்வோனரேவா வெற்றிபெற்று 'சம்பியன்' ஆனார். ஒரு மணி 17 நிமிடங்கள் இந்த ஆட்டம் நடந்தது.

ஸ்வோனரேவாவின் சர்வீஸ் அபாரமாக இருந்தது. மொத்தம் 8 'ஏஸ்' சேர்வீஸ்களை போட்டுத் தாக்கினார். அதே சமயம் சானியாவின் சேர்வீஸ் பலவீனமாக காணப்பட்டது. இதில் அவர் 4 தடவை 'டபுள் போல்ட்' (வலையில் பந்தை அடிப்பது) செய்ததால் எதிராளிக்கு புள்ளியை தாரை வார்த்தார்.

தோல்விக்குப் பிறகு சானியா கூறுகையில், 'நேற்றுமுன்தினம் நடந்த ஒற்றையர் அரை இறுதி நீண்ட நேரம் நடந்தது. அதைத் தொடர்ந்து இரட்டையர் அரைஇறுதியிலும் விளையாடினேன். இதனால் நான் களைப் படைந்து விட்டேன். இருப்பினும் இறுதிப் போட்டிவரை முன்னேறியது மகிழ்ச்சி அளிக்கிறது' என்றார்.

ஸ்வோனரேவா 2005ஆம் ஆண்டு ஜப்பான் ஓபனில் சானியாவிடம் தோற்றிருந்தார். அதற்கு இப்போது பழிதீர்த்துக் கொண்டார். ஸ்வோனரேவாவுக்கு இது 8ஆவது பட் டமாகும். இந்த வெற்றியின் மூலம் அவருக்கு இலங்கை மதிப்பில் ரூ.54 லட்சம் பரிசுத் தொகையும், 280 தரவரிசை புள்ளி களும் கிடைத்தன.

2ஆவது இடம் பிடித்த சானியாவுக்கு இலங்கை மதிப்பில் ரூ.28 லட்சமும், 200 தரவரிசை புள்ளிகளும் கிடைத்தன. இன்று வெளியிடப்படும் புதிய தரவரிசையில் சானியா மீண்டும் முதல் 100 இடங்களுக்குள் நுழைவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பரபரப்பான ருவென்ரி 20 போட்டியில் ஆஸி. ஓர் ஓட்டத்தால் 'திறில்' வெற்றி

சிட்னி, பெப்.17

நியூஸிலாந்துக்கு எதிரான பரபரப்பான ருவன்ரி 20 போட்டியில் ஒரு ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து அணிகள் இடையேயான ருவென்ரி 20 போட்டி சிட்னியில் நேற்றுமுன்தினம் நடந்தது. அவுஸ்திரேலிய அணியில் தலைவர் பொண்டிங், உப அணித்தலைவர் மைக்கேல் கிளார்க் ஆகியோருக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருந்ததால் பிராட் ஹேடின் அணித்தலைவர் பொறுப்பை ஏற்றார்.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 150 ஓட்டங்களை எடுத்தது. அதிகபட்சமாக டேவிட் ஹஸி 41 ஓட்டங்களும், வோகஸ் 26 ஓட்டங்களும், வார்னர் 23 ஓட்டங்களும், அணித்தலைவர் ஹேடின் 15 ஓட்டங்களும் எடுத்தனர்.

அடுத்து ஆடிய நியூஸிலாந்து அணி 12 ஓட்டங்களுக்குள் குப்தில் (0), புல்டான் (1ஓட்டம்) ஆகியோரின் விக்கெட்டுகளை இழந்தாலும், விக்கெட் காப்பாளர் பிரண்டன் மெக்கல்லம் அணியை சரிவிலிருந்து மீட்டார். அவருக்கு நன்கு ஒத்துழைப்பு கொடுத்த புரூம் 36 ஓட்டங்கள் (26 பந்து, 6 பவுண்டரி) விளாசி ஆட்டம் இழந்தார். மெக்கல்லத்தின் அதிரடியால் நியூஸிலாந்து அணி வெற்றியை நோக்கி முன்னேறியது. கடைசி 2 ஓவரில் வெற்றிக்கு 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன.

இந்தச் சூழலில் 19ஆவது ஓவரின் முதல் பந்தில் மெக்கல்லம் ஆட்டமிழந்தார். அவர் தூக்கியடித்த பந்தை, எல்லைக்கோட்டின் மிக அருகில் நின்ற வோகஸ் தாவிப் பிடித்துக் கொண்டார். ஆனால் அவரால் தன்னை நிலைப்படுத்திக்கொள்ளமுடியாமல் பந்தை எல்லைக் கோட்டுக்குள் எறிந்துவிட்டு எல்லைக்கோட்டுக்கு வெளியே விழுந்தார்.

பின்னர் அந்த பந்து கீழே விழுவதற்குள் கண்ணிமைக்கும் நேரத்தில் மீண்டும் ஓடிப்போய் எறிந்த பந்தை பிடித்துக்கொண்டார். இந்த மெக்கலத்தின் ஆட்டமிழப்பு அனைவரையும் பிரமிக்க வைத்தது. மெக்கல்லத்தின் (61 ஓட்டங்கள், 47 பந்து, 5 பவுண்டரி, 2 சிக்ஸர்) விக்கெட் இழப்பு ஆட்டத்தில் திருப்புமுனையாக அமைந்தது. ஆட்டம் அவுஸ்திரேலிய அணியின் பக்கம் திரும்பியது.

இதையடுத்து கடைசி ஓவரில் வெற்றிக்கு 14 ஓட்டங்கள் தேவைப்பட்டது. கைவசம் 6 விக்கெட்டுகள் இருந்தன. 20ஆவது ஓவரை அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் நாதன் பிராக்கன் வீசினார். இதில் முதல் பந்தில் பிராங்ளின் (3 ஓட்டம்) ரன் - அவுட் ஆனார். அடுத்து பிரண்டன் மெக்கலத்தின் அண்ணன் நாதன் மெக்கல்லம் களம் இறங்கினார். 2ஆவது மற்றும் 3ஆவது பந்தில் தலா ஒரு ஓட்டங்கள் கிடைத்தது. 4ஆவது பந்தில், நாதன் மெக்கல்லம் ஓட்டம் எடுக்கத் தவறினார்.

• இதைத் தொடர்ந்து கடைசி 2 பந்திலும் சிக்ஸர் அடிக்க வேண்டிய நிலைமை நியூஸிலாந்துக்கு ஏற்பட்டது. ஆனால் 5ஆவது பந்தில் நாதன் மெக்கல்லத்தால் பவுண்டரி தான் அடிக்க முடிந்தது. இதனால் அவுஸ்திரேலியாவின் வெற்றி உறுதியானது. இருப்பினும் கடைசிப் பந்தில் அவர் சிக்சர் விளாசியதால் தோல்வி வித்தியாசம் குறைந்தது. ஒரு ஓட்ட வித்தியாசத்தில் அவுஸ்திரேலியா 'திரில்' வெற்றியை பெற்றது.

# மேற்கிந்தியாவுடன் மூன்றாவது டெஸ்ட்; இங்கிலாந்து அணி ஓட்டங்கள் குவிப்பு

ஆன்டிகுவா, பெப்.17

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 301 ஓட்டங்கள் குவித்துள்ளது. அந்த அணியின் தலைவரும், ஆரம்ப வீரருமான ஆன்ட்ரூ ஸ்டிராஸ் அபாரமாக ஆடி 169 ஓட்டங்கள் குவித்தார்.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. சபீனாபார்க்கில் நடைபெற்ற முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து 1 இன்னிங்ஸ் மற்றும் 23 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இதனை அடுத்து ஆன்டிகுவாவில் ரிச்சர்டுஸ் மைதானத்தில் நடைபெறவிருந்த 2ஆவது டெஸ்ட் போட்டி, மைதானத்தின் மோசமான நிலை காரணமாக கைவிடப்பட்டது.

இந்த நிலையில் 3ஆவது டெஸ்ட் போட்டி அருகே உள்ள ஆன்டிகுவா ரிக்ரியேஷன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இங்கிலாந்து முதலில் ஆடத் தொடங்கியது.

முதல் டெஸ்ட் போட்டியின் 2ஆவது இன்னிங்ஸில் 51 ஓட்டங்களுக்குள் சுருண்ட இங்கிலாந்து அணி முதல் நாள் ஆட்டத்தில் சிறப்பாக ஆடி 3 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 301 ஓட்டங்களைக் குவித்தது. அணித்



தலைவரும், ஆரம்ப ஆட்டக்காரருமான ஆன்ட்ரூ ஸ்டிராஸ் சதம் அடித்தார்.

டெஸ்ட் போட்டியில் இது அவரது 15ஆவது சதமாகும். அவர் 169 ஓட்டங்களை குவித்தார்.

முதல் விக்கெட்டுக்கு அலிஸ்டர் குக்கோடு அவர் 123 ஓட்டங்களை குவித்தார். பின்னர் ஓவியாஸ் ஷாவோடு 2ஆவது விக்கெட்டுக்கு 153 ஓட்டங்களை குவித்தார். ஷா 57 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். அலிஸ்டர் குக் 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். முதல் நாள் ஆட்டத்திற்கு பிறகு இங்கிலாந்து அணி வலுவான நிலையில் உள்ளது.



டெஸ்ட் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணி வீரர்கள் பாகிஸ்தானுக்குச் சென்றுள்ளனர். பாகிஸ்தான் புறப்படுவதற்கு முன்னர் இலங்கை அணித் தலைவர் மஹேல ஜயவர்த்தன பௌத்த பிக்கு ஒருவரிடம் ஆசி[illegible]

# விக்கெட் காப்பாளருக்கான விதிகளை பின்பற்றத் தவறுகின்றாராம் டோனி

## முன்னாள் இந்திய வீரர் தெரிவிப்பு

கொல்கத்தா, பெப். 17

விக்கெட் காப்பாளர்களின் அடிப்படை விதிகளைப் பின்பற்றாமல் இந்திய அணித் தலைவர் டோனி தவறு செய்கிறார் என அந்த அணியின் முன்னாள் வீரர் கிர்மானி குற்றம் சாட்டியுள்ளார். இந்திய அணியின் மிகச் சிறந்த விக்கெட் காப்பாளராகத் திகழ்ந்தவர் கிர்மானி.

88 டெஸ்ட் போட்டிகளில் 160 'கச்', 38 'ஸ்டம்பிங்' மற்றும் 49 ஒரு நாள் போட்டிகளில் 27 'கச்', ஒரு 'ஸ்டம்பிங்' செய்துள்ளார். கடந்த 1983இல் உலகக் கோப்பை வென்ற அணியில் இடம்பெற்ற பெருமைமிக்கவர். கொல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற இவர், டோனியின் விக்கெட் காப்பாளர் திறமை குறித்து கேள்வி எழுப்பினார்.

இது பற்றி கிர்மானி மேலும் கூறியவை வருமாறு:-

''இந்திய அணியின் அணித்தலைவராக ஒவ்வொரு போட்டியிலும் முன்னேற்றம் கண்டு வருகிறார் டோனி. ஆனாலும் அவரது விக்கெட் காப்பாளர் முறையில் தான் குறை உள்ளது. கிரிக்கெட் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள அடிப்படை விதிகளை பின்பற்ற தவறுகிறார். பந்துக்காக காத்திருக்கும் போது, கால் விரலை ஊன்றி நிற்பதற்கு பதிலாக குதிகாலில் நிற்கிறார். தவிர கீப்பராக இருப்பவர் ஒரு தடகள வீரரை போல துடிப்பாக இருக்கவேண்டும். இந்த திறனும் டோனியிடம் இல்லை.

நான்கு ஆண்டுகளுக்கு பிறகு விக்கெட் காப்பாளராகச் செயல்பட டோனியின் உடல் ஒத்துழைக்குமா என்பது சந்தேகமாகவுள்ளது. ஏனென்றால் அறிமுகமானதில் இருந்து நான்கு ஆண்டுகளுக்கு பிறகு ஒரு வீரரின் ஆட்டத்தில் நிச்சயமாக மாற்றம் ஏற்படும். வயதாகும்போது உடல் அசைவில் மந்த நிலை உருவாகும். இதனை அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் பங்கேற்கும் டோனி உணரவேண்டும்.

தற்போது இந்திய அணி வெற்றி மேல் வெற்றி பெற்று வருவதால், விக்கெட் காப்பாளராக இருக்கும் டோனி செய்யும் தவறுகள் ரசிகர்களுக்கு தெரிவதில்லை. இவர் சுலபமான 'கச்' வாய்ப்பை நழுவவிட்டது, 'பைஸ்கள்' கொடுத்தது போன்றவை தலைப்பு செய்திகளாகவில்லை. ஆனால், அணியின் செயல்பாடு மோசமாகும்போது சிறிய தவறுகள் கூடப் பெரிய அளவில் விமர்சிக்கப்படும். என்னால் டோனிக்கு விக்கெட் காப்பாளருக்கு உரிய அறிவுரைகளை அளிக்க முடியாது.

ஏனென்றால் அடிப்படை விதிகளை இளம் வயதில் இருந்து பின்பற்றவேண்டும். தற்போது காலம் கடந்துவிட்டது. இனி அவர் வழியில் தான் சிறப்பாக செயல்பட முயற்சிக்க வேண்டும். பார்த்திவ் படேல் அல்லது தினேஷ் கார்த்திக்கின் விளையாடும் முறைகளைக் கூட என்னால் மாற்ற இயலாது.

இந்திய அணியின் தலைவராக டோனி சிறப்பாக செயல்படுகிறார். தலைமைப் பண்பில் சிறந்து விளங்குகிறார். அணியை முன்நின்று வழிநடத்திச்செல்கிறார். இளம் வீரர்களுக்கு ஊக்க சக்தியாக உள்ளார். இவரை கங்குலியோடு இப்போதே ஒப்பிடமுடியாது. அணித்தலைவராக நிறைய சாதித்தவர் கங்குலி. நியூஸிலாந்து தொடருக்குப் பிறகு தான் இந்தியா உலகின் சிறந்த அணி என்பதை தீர்மானிக்க முடியும். அணியின் வெற்றி தொடர்ந்தால் 2011இல் உலகக் கோப்பையைக் கைப்பற்றலாம்.

ருவென்ரி 20 போட்டியில் இருந்து சச்சின் விலகியது சரியான முடிவு. இவர் டெஸ்ட் மற்றும் 2011 உலகக் கோப்பை போட்டிக்கு இந்திய அணிக்கு கட்டாயம் தேவை. ருவென்ரி 20 நெருக்கடியை அவர் ஏற்கவேண்டாம். இவ்வாறு கிர்மானி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா இடைத்தங்கல் முகாமிலுள்ளோரை உறவினர்கள் சந்திப்பதற்குத் தடைவிதிப்பு

கொழும்பு, பெப். 17

வன்னியிலிருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியான வவுனியாவுக்கு வரும் மக்கள் 13 இடங்களில் தங்க வைக்கப் ளபட்டுள்ளனர். வவுனியாவில் 7 பாடசாலைகள், ஒரு கல்வியியல் கல்லூரி, ஒரு பல்கலைக்கழகம் மற்றும் 4 இடைத்தங்கல் முகாம்கள் ஆகியவற்றில் இவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் இயங்கிவரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வழங்கி வருகின்றன.

இந்நிலையில் வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களை மன்னார் மாவட்டத்திலிருந்து நாளாந்தம் பலநூற்றுக்கணக்கான உறவினர்கள் சந்தித்துச் செல்வதுண்டு.

எனினும் கடந்த 3 தினங்களாக இவ்வாறு சந்திக்கச் செல்லும் மக்களைப் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து துரத்திவிடுகின்றனர் என மன்னாரிலிருந்து வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் உள்ளவர்களைப் பார்வையிடச் சென்ற மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இடைத்தங்கல் முகாமைச்சுற்றி நாலாபுறமும் முள்ளுக் கம்பிகள் அடைக்கப்பட்டிருக்கிறது எனவும் தாங்கள் சுமார் 50 மீற்றர் தூரத்தில் இருந்தே உறவினர்களைப் பார்வையிட்டுச் செல்கின்றனர் எனவும் இவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

வன்னியிலிலிருந்து மக்களை வவுனியாவுக்குக் கொண்டுவந்து இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த வேளை, உறவினர்களைப் பார்வையிடுவதற்கு அனுமதி அளித்தனர்.

கடந்த சில தினங்களாக ஏராளமான மக்கள் உறவினர்களைப் பார்வையிட வந்தார்கள். இதன்போது பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. உணவுப் பார்சல்களுடன் கையடக்கத் தொலைபேசிகளைப் பதுக்கி வைத்து இடைத்தங்கல் முகாம்களில் உள்ள உறவினர்களுக்கு வழங்க முயற்சி செய்யப்பட்டது.

மதுபானம், பீடி போன்றவையும் வழங்க முயற்சி எடுக்கப்பட்டது. பாதுகாப்புத்தரப்பினர் இதனைக் கண்டுபிடித்ததையடுத்தே முகாம்களில் தங்கியுள்ளவர்களைப் பார்வையிட அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது - என்றார்.

தற்போது முகாம்களில் உள்ள பலருக்கு அம்மை நோய் பரவி வருகிறது எனவும் உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இது வரையிலும் 35 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சி)

## தற்கொலைத் தாக்குதல் தொடர்பான எஸ்.எம்.எஸ். அனுப்பியவர் கைது!

கொழும்பில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட உள்ளது எனக் கையடக்க தொலைபேசியில் குறுஞ் செய்தி (எஸ்.எம்.எஸ்.) அனுப்பிய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சந்தேக நபர் கொழும்பில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட உள்ளது எனக் கூறி 21 குறுஞ்செய்திகளை அனுப்பியிருந்ததார் என பொலிஸ் துறைப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார். பொலிஸாரின் அவசர முறைப்பாட்டுத் தொலைபேசிக்குக் (119) கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்துவதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்தால் இந்தியா அதற்குத் தனது முழுமையான ஆதரவை வழங்கும்.

கிழக்கு மாகாணசபை அபிவிருத்தி தொடர்பாக மேற்கொள்ளும் நடவடிக்கைகளுடன் இணைந்து செயற்படுவதற்கு இந்தியா தயாராகவுள்ளது. ஏற்கனவே சிறிய அளவிலான செயற்றிட்டங்களுக்கான உதவி என்ற அடிப்படையில் 10 பஸ்களும் மீன்பிடி உபகரணங்களும் கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மீன்பிடி, கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி போன்ற துறைகளிலும் உதவ இந்தியா தயாராகியுள்ளது.

இதனைவிட விரைவில் திருகோணமலைக்கும் மட்டக்களப்புக்குமிடையில் நேரடி ரயில்,பஸ் சேவைகளையும் ஆரம்பிக்க இந்தியா உதவிகளை வழங்கியுள்ளது'' - என்றும் அவர் தனது உரையில் குறிப்பிட்டார்.

(அ-சி)

## ஈழத்தமிழரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

''இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவே புலிகளின் ஆயுதப் போராட்டம் நடக்கிறது. ஆனால், புலிகள் மீது போர் தொடுக்கிறோம் என்று சொல்லி, மொத்த தமிழ் இனத்தையே இலங்கை இராணுவம் அழிக்கத் துடிக்கிறது. இலங்கையில் உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்பட இந்திய அரசு குரல் கொடுத்தாக வேண்டும்.

நம் வேதனையை வெளிப்படுத்த இலங்கைத் தமிழர்களைக் காக்க தமிழ் நாட்டு வீதிகளில் கரம் கோத்து நிற்போம் என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் வேண்டுகிறது. பெப்ரவரி 17ஆம் திகதி மாலை 5 மணி முதல் 6 மணி வரை கரம் கோர்த்து நிற்போம்.

இலங்கைத் தமிழர்கள் மீது பூட்டப்படும் அடக்குமுறை சங்கிலியை உடைப்பதற்கு நாம் மனித சங்கிலி அமைப்போம். கண்ணை இமை காப்பது போல இலங்கை தமிழர்களைக் காக்கும் இமைகளாக மாறுங்கள். தாய்த் தமிழகத்தின் மன வேதனையை, கொந்தளிக்கும் உணர்ச்சியை இந்திய அரசு உணரட்டும். போரை நிறுத்த முற்படட்டும்.'' - இவ்வாறு வைகோ கூறியுள்ளார்.

(ஏழாம் பக்கமும் பார்க்கவும்)

## வன்னியில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதலில் 7 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 34 பேர்படு காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, தேவிபுரம் பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் மீது இலக்கு வைத்து நேற்றுமுன்தினம் இரவுநடத்தப் பட்ட ஷெல் தாக்குதலில் 11 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 35 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் கபிலன் (வயது - 07), முகிலன் (வயது - 10), கீர்த்தனா (வயது - 12), சாரங்கன் (வயது - 10), துசியந்தினி (வயது - 37), ஆறுமுகம் (வயது - 88), சந்திரகலா (வயது - 49), பாலசுப்பிரமணியம் (வயது - 67), தர்மரத்தினம் (வயது - 49), சிவபாக்கியம் (வயது - 48), எழிலரசி (வயது - 37) ஆகியோர் சம்பவ இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல், தேவிபுரம் பகுதி மீது நேற்று அதிகாலை முதல் பிற்பகல் வரை நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 32 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 89 பேர் காயமடைந்துள்ளனர்.

இதில் தேவிபுரம் பகுதியில் மக்களுக்கான உணவு வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கரைத்துறைப்பற்று பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் மூவர் சம்பவ இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

பெ.சுப்பிரமணியம் (வயது 40), சு. சிவகுமார் (வயது 32), பெ.இராசேந்திரம் (வயது - 30), ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் மருந்துப் பொருள்கள் முடிவடைந்த காரணத்தினால் கடந்த 2 நாள்களில் மூன்று சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர் - என்றுள்ளது.

## இலங்கைத் தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(நாளை) சந்திக்கிறார்கள். அச்சந்திப்பின் போது இலங்கையில் உள்ள நிலைவரங்கள் குறித்து விவரமாக எடுத்து கூறுவதோடு, இந்தியா, ஐ.நா. சபை, ஐ.நா. பாதுகாப்பு சபை போன்ற அமைப்புகள் மூலம் இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு காணப்பட வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தும் மனு ஒன்றையும் கையளிப்பார்கள் - என்று கூறப்படுகிறது.

## நோயாளரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே வன்னியில் இருந்து இரு தடவைகள் அழைத்து வரப்பட்டிருந்தவர்களில் 252 பேர் தவிர்ந்த ஏனையோர், பொலநறுவை, கண்டி, கந்தளாய், தம்பலகாமம் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நோயாளர்களின் விருப்பத்தை பெறாத நிலையில் அவர்கள் ஏனைய வைத்திய சாலைக்கு அனுப்பப் பட்டு வருகின்றனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

உடனிருக்கும் உதவியாளர்கள் எவருமின்றி அவர்கள் அந்த வைத்தியசாலை களில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலைகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. (அ-1-151)

## புத்தளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசடிகள் இடம்பெற்றன என்று புத்தளம் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கிங்ஸ்லி பெர்னாண்டோவால் அறிக்கையிடப்பட்டதைத் தொடர்ந்தே தேர்தல் செயலகம் அந்த வாக்குச் சாவடியில் பதியப்பட்ட வாக்குகள் அனைத்தையும் ரத்துச் செய்தது.

இதனைத் தொடர்ந்து புத்தளம் மாவட்டத்தின் இறுதித் தேர்தல் முடிவுகளைத் தேர்தல் செயலகம் இடைநிறுத்தியது. மேற்படி வாக்குச்சாவடியில் வாக்களிக்க ஆயிரத்து 119 வாக்காளர்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளனர். (சி)

## மஹிந்தவுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நான் சமாதான முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றேன். அதை நான் தொடர்ந்து செய்வேன். நான் சமாதானத் தூதுவராக விரைவில் பாகிஸ்தானுக்கும் செல்ல வாய்ப்புகள் உண்டு.

அதேபோல், நான் இலங்கைக்கும் சமாதானத் தூதுவராகச் செயற்பட விரும்புகிறேன். யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் இந்திய மற்றும் இலங்கை அரசுகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளேன் - என்றார். (சி)

விற்பனையாகிறது
புதிய வரவுகள்
தரம்- 8
கணிதம்
விஞ்ஞானம்
சைவசமயம்
புவியியல்
வரலாறு
புதிய பாடத்திட்டம் 2009
தரம்- 11
வர்த்தகமும் கணக்கியலும்
சிவனேசராசா
பூபாலசிங்கம் புத்தகசாலை
இல, 04, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## போர் நிறுத்தத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்காவின் யு.எஸ் அட்வகசி, தேவாலயங்களின் தேசியக் கவுன்ஸில், அமெரிக்க அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியன இணைந்து வெளியுறவுச் செயலாளரிடம் கூட்டாக மேற்கண்ட கோரிக்கைகளை விடுத்துள்ளன.

நேற்று (திங்கட்கிழமை) ஹிலாரிக்கு அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் மிரி யாம் யங், வண. கலாநிதி போல் எவ். ஜஹான், வண. கலாநிதி மைக்கேல் கின்னாமன் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

அவர்கள் ஹிலாரி கிளின்ரனுக்கு அனுப்பிய கடிதத்தின் சாராம்சம் வருமாறு:-

இலங்கையின் வடக்கே சுமார் 2,50,000 பேர் போரில் சிக்குண்டுளார்கள். மக்களைத் தமது பாதுகாப்புக் கேடயங்களாக பயன் படுத்தும் விடுதலைப் புலிகளுக்கும் ஷெல் தாக்குதல்களையும் குண்டு வீச்சுகளையும் நடத்தும் அரசாங்கத் துருப்புக்களுக்கும் இடையில் - மிகவும் ஒடுங்கிய பிரதேசத்துக்குள்-பொறிக்குள் - அகப்பட்டுள்ளார்கள் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்திருக்கிறது.

இத்தகைய ஒரு பயங்கரமான சூழலில் மாண்டு போனவர்களினதும் காயமுற்றவர்களினதும் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. சுயேச்சையான சர்வதேச அவதானிகள் அங்கு செல்வதற்கும், ஊடகவியலாளர்கள் அங்கு செல்வதற்கும் அனுமதிக்கப்படாமையே இதற்குக் காரணம். அத்தோடு அங்குள்ள தேசிய ஊடகங்கள் பல்வேறு விதமான வன்செயல்கள் மூலம் அச்சுறுத்தப்பட்டுள்ளதால் உண்மைகள் வெளிவர முடியவில்லை.

ஆஸ்பத்திரியின் மீது ஷெல் வீச்சு நடத்தப்படுவதாகவும், பாதுகாப்பு வலயங்களுக்குச் செல்வதற்கு முயற்சிக்கும் மக்கள் மீது சுடப்படுவதாகவும் உணவு வசதி, வைத்திய வசதி, குடியிருப்பு வசதி ஆகியவை இன்றி மக்கள் அவலப்படுவதாகவும் நம்பிக்கையான தகவல்கள் கிடைத்துள்ளன.

குறிப்பிட்ட பகுதியிலிருந்து வெளியியேறும் தமிழ்க் குடிமக்கள் கைப்பற்றப்பட்ட எதிரிகள் போன்று நடத்தப்படுவதால் மோதல் நடைபெறும் பகுதிகளிலிருந்து வெளியேற அவர்கள் நம்பிக்கையற்று தயங்குவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில், போர் நிறுத் தம் கொண்டு வருமாறு இலங்கை அரசிடம் வலியுறுத்துங்கள். போர் நிறுத்தத்தின் போது ஐ.நா மற்றும் ஐ.சி.ஆர்.சி. பணியாளர்கள் சேர்ந்து சிக்குண்ட மக்களை வெளியேற்ற அனுமதிக்க வகை செய்யப்படவேண்டும்.

இலங்கை அரசு அதற்கு மறுத்தால் அதன் மீது பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதோடு பாதுகாப்புச் சபைக்கும் இந்த விவகாரத்தை பிரேரணையாகக் கொண்டு வருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ஆபத்தில் உள்ள மக்கள் எங்கிருந்தாலும், அவர்கள் சார்பில் குரல் கொடுக்கும் அமெரிக்காவின் தார்மீக தலைமைத்துவத்தின் காத்திரமான பங்கினை வெளிப்படுத்துவதற்கு புதிய நிர்வாகத்துக்கு இது ஓர் அரிய சந்தர்ப்பம் ஆகும்.

காஸாவில் மக்களுக்கு உயிர் ஆபத்துக்கள் ஏற்பட்ட போது அது உலகம் முழுவதிலும் வேகமாகப் பரவியது. ஆனால் இலங்கையில் நடைபெறும் மனித கொடுமை சர்வதேசமட்டத்தில் மிகச் சிறிய அளவிலேயே வெளிப்பட்டிருப்பது துரதிஷ்டவசமானதாகும் - என்று அந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. (அ)

வெளிவந்து விட்டது
2009-புதிய பாடத்திட்டம்
O/L Past Paper
தமிழ், கணிதம், விஞ்ஞானம், வரலாறு,
ஆங்கிலம் வினாக்களும் விடைகளும்
ஒரே புத்தகமாக விற்பனையாகிறது.
அன்னை புத்தகசாலை
NO: 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.NO: 222 9881

## முல்லைத்தீவு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்கு கிடைக்கும் ஆதரவு மிகக் குறைவாகும். இத்தகைய சூழ் நிலையில் அவர்களில் பலருக்கு வாழ்வா அல்லது சாவா என்ற இறுதிக்கட்டம் நெருங்கியுள்ளது.

இவ்வாறு தெவித்துள்ளார் இலங்கையில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதம வதிவிடப் பிரதிநிதி போல் கஸ்ரலோ.

வாழ்க்கையில் விரக்தியடைந்த நிலையிலும் தங்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு தமது உயிர்கள் காக்கப்படும் என்ற நம்பிக்கையுடனும் புதுமாத்தளன் பகுதிக்கு குடும்பங்கள் வந்த வண்ணம் உள்ளன. உண்மையான நிலை என்னவெனில், போதிய மருந்துப்பொருள்களும் உணவுப் பொருள்களும் இல்லை என்பதே கசப்பான உண்மையாகும். இன்று (திங்கட்கிழமை) ஒரு குறிப்பிட்ட எண் ணிக்கையான மக்களையே கப்பலில் அழைத்துச் செல்கிறோம்.

எமது இந்த முயற்சிக்குச் சிவில் சமூகத்தினரதும் இராணுவத்தினரதும் ஒத்துழைப்பு கிடைப்பதோடு உள்ளூர் மக்களும் ஒத்துழைப்பு நல்குகிறார்கள். அதனால் நாம் மக்களின் வெளியேற்றத்தை திருப்தியான அளவுக்கு செய்து வருகின்றோம். எனினும் வன்னியிலும் புதுமாத்தளனிலும் இன்றும் எத்தனையே மக்கள் மிகவும் ஆபத்தான கட்டத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று மக்களை வெளியேற்றும் பணியிலும் மருத்துவப் பணியிலும் ஈடுபட்டு வரும் சர்வதேச செஞ்சிலுவையின் டாக்டர் மோர்வன் லொக்றி தெரிவித்தார். (அ-6)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org